www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16 - 31 ஆகஸ்ட் '89
4-19
விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு



பஞ்சாயத்து – நகரவை சட்டங்கள்
மக்களுக்கு அதிகாரம் என்ற மாய்மாலம்!

படிப்பகம்

www.padippakam.com



கையிலே உயிரிழந்த குழந்தை: சோகம் கப்பிய முகத்துடன் மருத்துவமனையிலிருந்து வெளியேறும் குழந்தையின் தந்தை - போலிக் கம்யூனிஸ்டுகளின் கேடுகெட்ட ஆட்சிக்கு சாட்சி.

# போலிக்கம்யூனிஸ்டு தலைவர்களுக்கு வெளிநாட்டில் வைத்தியம்!

# மே. வங்க மக்களுக்கு மருத்துவமனைகளும் நரகம்!

அர்ச்சனா மண்டல். இது அவருக்கு முதல் பிரசவம். கல்கத்தா ஏடன் மருத்துவமனையில் ஜூலை 22 அன்று அவர் அழகான குழந்தையை ஈன்றெடுத்தார். ஆனால் அன்றிரவே அக்குழந்தை மாண்டுபோனது.

சந்தி பேகம் என்ற பெண்ணும் அதே மருத்துவமனையில் அதே நாளில் ஒரு குழந்தையை ஈன்றெடுத்தார். அவரது குழந்தையும் சிறிது நேரத்தில் மாண்டு போனது.

ஒன்றல்ல, இரண்டல்ல; ஒரே நாளில் 22 குழந்தைகள் அடுத்தடுத்து இறந்தன. குழந்தை பிறந்த செய்தியை அறிந்து மகிழ்ச்சியோடு மருத்துவமனைக்கு வந்த உறவினர்கள், துக்கம் தொண்டையை அடைக்க இறந்த குழந்தையோடு வெளியேறினர்.

கல்கத்தாவை உலுக்கிய இக்கோரமான சாவுகளுக்கு ஏடன் மருத்துவமனையின் சுகாதாரமற்ற நிலையும், மருத்துவர்களின் பொறுப்பின்மையுமே காரணம். வயிற்றைக் குமட்டும் கழிப்பறையின் நாற்றம், பிரசவ வார்டிலேயே நாய்கள், பூனைகள், காக்கைகளின் சுதந்திர நடமாட்டம், நச்சு கிருமிகள் சூழ்ந்த அறுவை சிகிச்சைக்கூடம், சுத்தம் செய்யப்படாத தரைகள் - படுக்கை விரிப்புகள், நீராவியால் தூய்மைப்படுத்தப்படாத ஊசிகள் என்று கல்கத்தா ஏடன் அரசு மருத்துவமனை நோய் பரப்பும் கூடமாக புழுத்துநாறுகிறது. இதன் விளைவாக பிறந்த குழந்தைகள் அனைத்தும் டெட்டனஸ் மற்றும் சிறுநீர் பாதையில் கிருமிகள் தாக்குதல் ஆகியனவற்றால் சிறிது நேரத்திலேயே மாண்டுபோயின.

பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தை பத்து மணி நேரத்துக்குள் மாண்டுபோன அதிர்ச்சியும் துக்கமும் தாளாமல் கதறியழும் தாய்மார்களும், அவர்களது உறவினர்களும் உடனடியாக விசாரணைகோரி போராட்டத்தில் இறங்கினர். இதற்கு பொறுப்பேறக வேண்டிய போலிகம்யூனிஸ்டு சுகாதார மந்திரி பிரசந்தாசுர், "நான் இதற்குப் பொறுப்பேற்று பதவி விலகத் தயார். ஆனால் வேறு ஒருவர் பொறுப்பேற்றால் நிலைமை மாறிவிடுமா?" என்று எதிர்வாதம் செய்கிறார். "மருத்துவர்களும் தாதியர்களும் பொறுப்பின்றி நடந்து கொள்ளும்போது என்னால் என்ன செய்ய முடியும்?" என்று வெட்கமின்றி புலம்புகிறார். ஆனால் இந்த போலிகள் ஓட்டுப் பொறுக்கும் போது வானத்தை வில்லாக வளைப்பேன்; மணலை கயிறாகத் திரிப்பேன் என்று மக்களை ஏய்க்க மட்டும் மறக்கவில்லை.

கல்கத்தா மருத்துவமனைகள் சீரழிந்து கிடப்பது இன்று நேற்றல்ல; போலிகள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து கடந்த 10 ஆண்டுகளாக இதே நிலையில் தான் உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு பிரசவ வார்டில் புகுந்த நாயொன்று ஒரு பச்சிளங்குழந்தையை தூக்கிச்சென்று கடித்துக் குதறி கொன்று போட்டது. கழிப்பறை சகதியில் கால்வழுக்கி விழுந்து முதுகெலும்பு முறிந்துபோன நோயாளிகள் அநேகம். மக்கள் நலனில் எள்ளளவும் அக்கறையற்ற போலிக்கம்யூனிஸ்டுத் தலைவர்கள், தங்களுக்கு சளி பிடித்தால்கூட ரஷியாவுக்குப் பறந்து சென்று சிகிச்சைபெற்றுக் கொள்கிறார்கள். சில கிழட்டுத் தலைவர்கள் மரணப்படுக்கையில் கிடக்கும் போதுகூட செத்தால்கூட அங்கேதான் சாவேன் என்று ரஷ்யாவுக்குப் பறக்கின்றனர். ஆனால் அதேசமயம் அவர்கள் ஆளும் மே.வங்கத்தில் ஏழைமக்கள் உரிய மருத்துவ வசதியின்றியும், மருத்துவ அதிகாரிகளின் அலட்சியத்தாலும் தங்கள் பச்சிளங் குழந்தைகளைப் பறிகொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். புரிந்து கொள்ளுங்கள், இதுதான் கேடுகெட்ட போலிக்கம்யூனிஸ்டு ஆட்சியின் யோக்யதை!

---

*காவிரி நீர் பிரச்சினையை உடனடியாக தீர்க்கக்கோரி*

# பேருந்து மறியல் போராட்டம்!

நஞ்சை செழிக்கும் தஞ்சை மாவட்டம் தரிசு நிலமாக மாறிவிட்டது. காவிரியைப் போலவே ஆட்சியாளர்களின் வாக்குறுதிகளும் வறண்டு போய்விட்டன. பட்டினிச் சாவுக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுவிட்டார்கள். பல்வேறு அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் பல கட்டங்களில் போராடியும்கூட இன்னமும் காவிரி நீர் பிரச்சினை இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டே போகிறது. இந்நிலையில், காவிரி நீர் பிரச்சினையை உடனடியாக தீர்க்கக் கோரி விவசாயிகள் விடுதலை முன்னணியின் பட்டுக்கோட்டை, திருவையாறு, திருவோணம், புள்ளம்பாடி வட்டக் கிளைகள் இணைந்து, கடந்த 31-7-89 அன்று தஞ்சை பேருந்து நிலையத்தில் பேருந்து மறியல் போராட்டத்தை நடத்தின.

31-7-89 அன்று காலை 9.30 மணிக்கு திருவோணம் ஒன்றிய வி.வி.மு. அமைப்பாளர் தோழர் இராம. துரை மாணிக்கம் தலைமையில் செங்கொடி களுடன் முழக்க அட்டைகள் ஏந்தி பதினைந்து தோழர்கள் பேருந்து மறியலில் ஈடுபட்டு போலீசாரால் கைது செய்யப்பட்டனர். அடுத்தகட்டமாக அன்று மாலை 5 மணிக்கு பட்டுக்கோட்டை வட்ட வி.வி.மு. அமைப்பாளர் தோழர் சந்திரசேகரன் தலைமையில் மேலும் பதினைந்து தோழர்கள் மற்றொரு பிரிவாக மறியலில் ஈடுபட்டு போலீசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

காலையில் மறியல் முடிந்து கைது செய்யப்பட்டதும் மதியம் வாக்கில் போலீசார் கலைந்து சென்று விட்டனர். அவர்கள் சற்றும் எதிர்பாராத நிலையில் மாலையில் தோழர்கள் மீண்டும் மறியலில் ஈடுபட்டதும் காவல் துறையினர் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்து தோழர்களை மோசமான வார்த்தைகளால் ஏசினர். "31.7.89 அன்று முழுவதும் மறியல் என்றுதான் அறிவிக்கப்பட்டுள்ளது. அன்று முழுவதும் மறியல் செய்வதே எங்கள் போராட்டம்" என தோழர்கள் பதிலளித்தனர்.

இரு நேர மறியலின் போதும் பொதுமக்கள் திரளாகக் கூடி நமது கோரிக்கை முழக்கங்களை அக்கறையுடன் கேட்டனர். மறியல் போராட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்த பொதுமக்களை போலீசார் கலைத்து விரட்டினர். கைது செய்த தோழர்களை போலீசார் அன்று இரவு 11 மணிக்கு மேல் விடுதலை செய்தனர். ஆனாலும் போலீசாரும் உளவுத் துறையினரும் அன்று இரவு தோழர்கள் தமது ஊருக்குப் புறப்பட்டுச் செல்லும் வரை பேருந்து நிலையத்தைவிட்டு அகலவில்லை. குறைந்த அளவு சக்தியேயானாலும் தோழர்கள் எழுச்சியுடன் பேருந்து மறியல் போராட்டத்தை நடத்தியது, மக்களிடம் மதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்தது.

படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

நான்காமாண்டு

**19**

16 - 31 ஆகஸ்ட் '89

உள்நாடு
தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : U S $11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்



எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.


# மக்களுக்கு அதிகாரம் என்கிற மாய்மாலம்!

தனது பரம்பரை ஆட்சிக்கோ, கட்சிக்கோ ஏதாவது ஆபத்து - நெருக்கடி வந்துவிட்டால் போதும்; அப்போதுதான் பாசிச இந்திரா - ராஜீவ் கும்பலுக்கு நாட்டுநலன்கள் மீது அக்கறை அடங்காத ஆறாகப் பெருக்கெடுத்தோடும்! தேர்தல் நெருங்கி விட்டால் போதும்: மக்கள் மீது, அதுவும் ஏழை - எளிய மக்கள் மீது கரிசனை - பாசம் அப்படியே பொங்கி வழியும்! நாட்டுநலன்கள் பற்றி ஓங்காரமிடுவார்கள் - ஒப்பாரிவைப்பார்கள்! ஏழை - எளிய மக்கள் மீது திடீர் ஞாபகம் வந்து கட்டிப்பிடித்துக் கொள்வார்கள் - கதறி அழுவார்கள். கடந்த இருபது ஆண்டுகளாக இந்தக் கண்ணராவிகளை பார்த்துக் கொண்டு தானிருக்கிறோம். நேரு - இந்திரா பரம்பரையின் கைவந்த கலையாக அவர்கள் வளர்த்து விட்டதையும் காண்கிறோம்.

அடுக்கடுக்கான் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் பற்றிய குற்றச்சாட்டுகள். அடுத்து நெருக்குகிறது நாடாளுமன்றப் பொதுத்தேர்தல்கள். இவற்றை எதிர்கொள்வதற்காக வேண்டி தனது பரம்பரைக்கே உரிய வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது பாசிச ராஜீவ் கும்பல். 20 ஆண்டுகளுக்கு முன்பு மன்னர் மானிய ஒழிப்பு, வங்கிகளைத் தேச உடமையாக்குவது ஆகிய 'சீர்திருத்தங்க'ளோடு, வறுமையை ஒழிப்போம் என்ற முழக்கத்தையும் முன்வைத்து பரம்பரை ஆட்சியைக் காப்பாற்றினார். இந்திரா. இப்போது பஞ்சாயத்து ராஜ்ஜியம், நகரபாலிகா ஆகிய இரு சீர்திருத்தங்களோடு, வேலையின்மையை ஒழிப்போம் என்ற முழக்கத்தோடு தனது ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள முயலுகிறார் ராஜீவ்.

18 வயதினருக்கும் ஓட்டுரிமை, 2650 கோடி ரூபாய் செலவில் ஜவகர் வேலை வாய்ப்புத்திட்டம், இந்திரா வீட்டு வசதித் திட்டம், வேலை வாய்ப்பிலும், பஞ்சாயத்து நகரவை அமைப்புகளிலும் பெண்கள், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு இடஒதுக்கீடு. மத்திய - மாநில அரசுகளில் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களுக்கு இடஒதுக்கீடு செய்தும் இன்னமும் காலியாக உள்ள பதவிகளுக்கு மூன்றே மாதங்களில் ஆள்சேர்ப்பு. உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்டு இன்னமும் பகிர்ந்தளிக்கப்படாத நிலங்கள் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களுக்கு உடனே ஒதுக்கப்படும். பெண்களுக்குச் சொத்துரிமை, தலையிலே மலம் சுமந்து செல்வதை ஒழிப்பது போன்ற முற்போக்கு சட்டங்கள் வரும்.

இவை எல்லாவற்றையும்விட முக்கியமாக, பஞ்சாயத்து மற்றும் நகரவைச் சீர்திருத்தங்கள். 'அதிகாரத்தரகர்களை எதிர்த்துப் போராடி ஒழிக்கும்; அதன்மூலம் ஊழலுக்கு முடிவு கட்டும். அடி மட்டம் வரை ஜனநாயகத்தைக் கொண்டு செல்லும். மக்களுக்கு அதி காரம் வழங்கும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த புரட்சிகர நடவடிக்கை' என்று பீற்றிக்கொள்கிறது பாசிச ராஜீவ் கும்பல். மாநிலங்களிடமிருந்து அதிகாரங்களைப் பிடுங்கி மத்திய அரசிடம் குவிக்கும் முயற்சி என்று கூறி எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன.

பஞ்சாயத்துக்கள் மற்றும் நகரவைகளின் கட்டமைப்புகள், பெண்கள் - தாழ்த்தப்பட்ட -பழங்குடி மக்களுக்கு இடஒதுக்கீடு, நேரடி - கட்டாயத் தேர்தல்கள், மத்தியத் தேர்தல் கமிஷனே தேர்தல்களை நடத்தவும், மத்தியப் பொதுத்தணிக்கையாளர் வரவு - செலவுகளை மேற்பார்வையிடுவது இவைதான் தற்போது ராஜீவ் கும்பல் கொண்டுவரும் பஞ்சாயத்துக்கள் மற்றும் நகரவைகள் பற்றிய அரசியல் சட்டங்கள்: குறிப்பான அதிகாரப்பகிர்வு பற்றிய சட்டம் மாநில அரசுகளே தான் நிறைவேற்ற வேண்டும். அதன் விளைவு என்னவாக இருக்கும்? நில உச்சவரம்பு பற்றிய மிகப்பொதுவான மத்திய சட்டமே உள்ளது. குறிப்பான சட்டம் மற்றும் அமலாக்கம் என்று மாநிலங்களிடம் வரும்போது நில உச்சவரம்புச் சட்டம் நீர்த்துப் போனது. அப்படித்தான் இந்தப் பஞ்சாயத்து மற்றும் நகரவைச் சீர்திருத்தங்களும் சீரழிந்து போகும்.

அரசுத் திட்டங்கள், ஓட்டுப் பொறுக்கிகளின் வாக்குறுதிகள் என்னவாகும் என்று காட்டுவதற்கு இன்னும் ஒரு சான்றுண்டு. நாடாளுமன்றத்திற்கு மந்திரிகள் தரும் வாக்குறுதிகளின் அமலாக்கத்தைக் கவனிக்கும் கமிட்டி இப்போது தனது 20வது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. கடந்த இரு ஆண்டுகளாக மந்திரிகள் கொடுத்த வாக்குறுதிகள் ஏறக்குறைய எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக நிலமற்ற கூலி விவசாயிகள், வீடற்றவர்கள் ஆகியோருக்காக அறிவிக்கப்பட்ட சமூகப் பொருளாதாரத் திட்டங்கள் எல்லாம் கிடப்பில் போடப்பட்டுள்ளன. வீடு அடகு வைப்பதற்கு எதிரான காப்பீட்டுறுதி, சிறு தொழில்களுக்கான பாதுகாப்பு ஆகிய சட்டங்கள் கொண்டு வருவதாக கொடுத்த வாக்குறுதிகள் பொய்யாகிப்போயின. இன்னும் வாக்குறுதிச் சவ டாலுக்குப் பிறகு அவற்றை விலக்கிக் கொள்வதாக, கைவிடுவதாக முடிவுசெய்தும் விடுகிறார்கள். வேலைவாய்ப்பு, வீட்டுவசதி போன்ற திட்டங்களுக்கும், தேர்தல் முடிந்ததும் இதே கதி தான்! இப்படி வாக்குறுதிகளும் சீர்திருத்தங்களும் முழக்கங்களும் மாறிமாறி வந்தபோதும் 40 சதவிகித மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழுவதாக உலக வங்கி கூறுகிறது. இல்லை, 29 சதவிகிதம் தான் என்று சாதிக்கிறது ராஜீவ் கும்பல். ஒரு மூன்றாண்டு கால இடைவெளி தவிர கடந்த 40 ஆண்டுகளும் நேரு - இந்திரா - ராஜீவ் பரம்பரை ஆட்சிதான் நடந்தது. ஆனால் நாட்டின் இந்த அவலங்களுக்கு அந்நிய சதிகாரர்கள், உள்நாட்டு பிற்போக்காளர்கள் என்று வேறுயாரோ காரணம் என்று அவ்வப்போது திசை திருப்பிவிட்டு ஏய்கிறார்கள்.

பஞ்சாயத்துக்கள் - நகரவைகள் மூலம் மக்களுக்கு அதிகாரம் என்பதும் பித்தலாட்டமே. சாதி, மத, நிலப் பிரபுத்துவ சக்திகளோடு, இப்போது புதிதாக வளர்ந்துவிட்ட பொறுக்கி அரசியல் பிழைப்புவாதிகள் ஆதிக்கம் வகிப்பதற்குத்தான் இதுவழி வகுக்கும். எவ்வாறாயினும், அதிகாரவர்க்கத்தின் உடும்புப்பிடியிலேயே இந்த அமைப்புகள் சிக்கிக்கொண்டிருக்கும் என்பதில் எவ்வித மாற்றமும் இராது. புரட்சிகரமான அரசியல் - சித்தாந்தத்தால் விழிப்புணர்வு பெற்ற ஆயுதமேந்திய மக்கள் தற்போதைய அரசு எந்திரத்தை அடித்து நொறுக்கி வீழ்த்த வேண்டும். அதன்மூலம் கீழிருந்து அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். இந்த முறையிலேதான் பிரான்சில் 1871-இல் பாரிஸ்கம்யூனும், ருஷ்யாவில் 1917- இல் சோவியத்துக்களும், சீனாவில் 1949-இல் மக்கள் புரட்சிக் கமிட்டிகளும் நிறுவி மக்கள் அதிகாரம் நிலைநாட்டப்பட்டது. அந்த வழிக்கு இந்திய மக்கள் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான், அடுத்தடுத்து பல கவர்ச்சி முழக்கங்களை வைத்துத் தமது ஆட்சியைக் காத்துக் கொள்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# நுஸ்லி வாடியா கொலை சதிவழக்கு: தரகு முதலாளிகளிடையே தகராறு

## தொழில் - அரசியல் பின்னணி

**தரகு முதலாளிகளிடையே தகராறு உச்சகட்டத்தை நெருங்குகிறது**

'பாம்பே டையிங்' என்ற தரகு அதிகார முதலாளித்துவ கூட்டுப்பங்குக் கம்பெனியின் அதிபர் நுஸ்லி வாடியா. இவரைக் கொலை செய்வதற்கு சதி செய்ததாக 'ரிலையன்ஸ்' என்ற இன்னொரு தரகு அதிகார முதலாளித்துவ கூட்டுப்பங்குக் கம்பெனியின் உயர் நிர்வாகி கீர்த்தி விரிஜ்லால் அம்பாணியும் இரகசிய 'உலக (மஃபியா கும்பல்களின்) களிவெறியாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யும் தரகன் 'இளவரசர்' பாபரியா என்கிற அர்ஜுன் வாக்ஜி பாபரியாவும் கடந்த மாத இறுதியில் பம்பாய் போலீசால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஐந்தாண்டுகளாக, தொழிலதிபர் நுஸ்லி வாடியாவுக்குக் கொலை மிரட்டல்கள் வருகின்றதாம். குண்டு துளைக்காத கார் - கோர்ட்டு சூட்டும், துப்பாக்கி ஏந்திய மெய்க்காப்பாளர்களுமாக அவரது குடும்பத்தினர் நடமாடி வருகின்றனர். வழக்கமான இரவு 'ரோந்துப் பணி'யில் ஈடுபட்டிருந்த பம்பாய் போலீசார் தற்செயலாக பாபரியாவைப் பிடித்தனர். அப்போதுதான் 'ரிலையன்ஸ்' கம்பெனியின் எதிரியான நுஸ்லி வாடியாவைத் தீர்த்துக் கட்டுவதற்காக பாபரியா மூலம் பம்பாய் இரகசிய உலக (மஃபியா கும்பல்களின்) தொழில்முறை கொலைகாரர்களை ஏற்பாடு செய்தார் கீர்த்தி அம்பாணி என்பது தெரியவந்தது.

நுஸ்லி வாடியாவின் உயிருக்கு 50 லட்சம் ரூபாய் விலை பேசி 7 லட்சம் ரூபாய் முன்பணம் கொடுத்து விட்டார்களாம். "இது மிக ஆழமான சதி. நாடு முழுவதும் புலனாய்வு செய்ய வேண்டியது" என்கிறார் பம்பாய் போலீசு கமிஷனர். "இந்தச் சதி பற்றி கீர்த்தி அம்பாணி - பாபரியாவுக்கு இடையே நடந்த பதிவு செய்யப்பட்ட உரையாடல்கள், கீர்த்தி அம்பாணியின் டயரிகள், நுஸ்லி வாடியாவின் பல கோணப் புகைப்படங்கள், அவர் பயணம் செய்யும் கார்களின் எண்கள், அவர் போய்வரும் வழித்தடங்கள், ஆயுதங்கள் உட்பட பல தடயங்கள் - ஆதாரங்கள் சிக்கியுள்ளன. கொலை சதியில் தொடர்புடைய இரகசிய உலக (மஃபியா கும்பல்களின்) நான்கு பேர்வழிகள் ஒப்புதல் வாக்கு மூலங்கள் அளித்துள்ளனர்" என்கிறார்கள் போலீசு அதிகாரிகள்.

இதை அடியோடு மறுக்கிறது 'ரிலையன்ஸ்' நிர்வாகம். "இந்தக் கொலை சதிவழக்கு முழுவதும் ஜோடிக்கப்பட்ட பொய் வழக்கு. 'ரிலையன்ஸ்' நிறுவனத்தின் கம்பெனிகளில் ஒன்று 'லார்சன் அண்டு டூப்ரோ' அது கூட்டுப்பங்குக் கம்பெனி வரலாற்றிலேயே காணாதவாறு 920 கோடி ரூபாய்க்கு பங்குகள் விற்கவுள்ளது. அந்தச் சமயத்தில் கம்பெனியை சங்கடத்தில் ஆழ்த்தும் நோக்கத்தோடு திட்டமிட்டு ஜோடிக்கப்பட்ட பொய் வழக்கு" என்கிறது.

சதிகாரர்கள் கைதாவதற்கு முதல் நாளே அவர்களின் எஜமானரும் 'ரிலையன்ஸ்' அதிபருமான திருபாய் அம்பாணி திடீரென்று வெளிநாட்டிற்கு ஓடிப்போய் விட்டார். அவருடைய மகன் முகேஷ் அம்பாணி புதுடில்லிக்கு ஓடி மந்திரிகளையும் அதிகாரிகளையும் சந்தித்தார். அப்பட்டமான கலவரம், பீதியோடு திரிந்தாராம். கீர்த்தி அம்பாணிக்கு மேலே நேரடியாக அம்பாணி குடும்பத்தினர் சதி வழக்கில் சிக்கிவிடாது, அமுக்கிவிடும்படி ஆவன செய்தார். சதிகாரர்களைக் கைது செய்வதற்கு இருநாட்கள் முன்னதாகவே மத்தியப் புலனாய்வுப் படை இயக்குநர் மோகன் கத்ரே பம்பாய் போய் முகாமிட்டார். இவரும் இவருடைய மனைவியும் 'ரிலையன்ஸ்' கம்பெனியில் பங்கு முதலீடு செய்துள்ளனர். 'ரிலையன்ஸ்' கம்பெனியின் பல ஊழல் மோசடி வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, தப்புவித்து அம்பாணிக்கு நெருங்கிய கூட்டாளியானவர்.

மத்திய அரசு மற்றும் சி.பி.ஐ. இயக்குநர் மோகன் கத்ரே தலையீடு காரணமாக நுஸ்லி வாடியா கொலை சதி வழக்கை பம்பாய் போலீசிடமிருந்து சி.பி.ஐ. பிடுங்கிக் கொண்டது. கொலைச்சதி வழக்கில் இருந்து திருபாய் அம்பாணி குடும்பத்தினரைக் காப்பதற்காக இந்த ஏற்பாடு நடப்பதாக ஏற்கனவே 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பிரச்சாரம் செய்துவந்தது. வழக்கை சி.பி.ஐ. எடுத்துக் கொண்டதும், அதற்கு எதிராக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' கும்பலைச் சேர்ந்த அனில் கோட்டே, ராம்ஜேத்மலானி மூலமாக பம்பாய் உயர்நீதிமன்றத்தில் ஒரு 'ரிட்' வழக்குப் போட்டனர். இடைக்காலத் தடை உத்திரவு வாங்கி சி.பி.ஐ தலையிடுவதைத் தடுத்து நிறுத்தினர்.

பாரதீய ஜனதா கட்சியின் நிர்வாகக் குழு உறுப்பினரும் முன்னாள் எம்.பி.யும், அம்பாணியின் அரசியல் தரகனுமானவர் பேராசிரியர் அமின். அவரை வைத்து பொது நலம் கருதி வழக்கை சி.பி.ஐ. விசாரிப்பதே சரி என்று திடீரென்று உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட்டனர். பத்தே நிமிட விசாரணைக் கண்துடைப்புக்குப் பிறகு, அந்த வாதத்தை ஏற்று அமுல் நடத்தும் உரிமையையும் அமினுக்கே வழங்கினர் ராஜீவ் கும்பலின் எடுபிடிகளான 'நீதிபதிகள்'. அடுத்து சில மணிநேரங்களிலேயே உச்சநீதிமன்றத்துக்கு ஓடினார் ராம்ஜேத்மலானி. ஒருதலைப் பட்சமான 'முந்திய தீர்ப்புக்கு எதிராக நீதித்துறை மோசடி விசாரணை வரை பம்பாய் போலீசோ, சி.பி.ஐ.யோ யாரும் புலனாய்வு மற்றும் சதி வழக்கை நடத்தக் கூடாது' என்று தமது தீர்ப்பையே மாற்றினர் உச்சநீதிமன்ற 'நீதிபதிகள்'.

போலீசு, உச்சநீதிமன்றம் போன்ற சகலத்தையும் துச்சமென மதித்து, பண பலம் அதிகார பலம் கொண்டு மோதிக் கொள்கிறார்கள் இரு தரகு அதிகார முதலாளிகள்.

கிரிமினல் சாகச இந்தி சினிமாவைப் போல நீண்டு கொண்டே போகும் அம்பாணி - நுஸ்லி வாடியா தகராறுக்கு பின்னணி மற்றும் பூர்வீகக் கதை நிறையவே உள்ளது.



நுஸ்லிவாடியா,
தந்தை வாடியா,
மனைவி மௌரினுடன்

படிப்பகம்

## அம்பாணி - வாடியா தகராறு பூர்வீகமும் பின்னணியும்

நுஸ்லி வாடியா, ஒரு பரம்பரைத் தரகு அதிகார முதலாளி. காங்கிரசோடும், ஆங்கிலேய காலனிய வாதிகளோடும் பேரங்கள் நடத்தி பாகிஸ்தானைத் தனிநாடாகப் பெற்று அதன் முதல் 'ஜனாதிபதி'யாக இருந்த முகமது அலி ஜின்னாவின் பேரன். 1964-லேயே இங்கிலாந்து குடியுரிமை பெற்றவர். 'பயண விசா' மட்டுமே பெற்று இந்தியாவில் தங்கியுள்ளார். ஏறக்குறைய 260 கோடி ரூபாய் சொத்தும், ஆண்டுக்கு 360 கோடி ரூபாய் வரவு செலவும் செய்யும் 'பாம்பே டையிங்' என்கிற பிரபல கூட்டுப் பங்கு நிறுவனத்தின் அதிபர். துணிமணிகள், 'பாலியஸ்டர்' - செயற்கை ஆடை மற்றும் செயற்கை இழைகள் தயாரிப்பதற்குத் தேவையான கச்சாப் பொருளான 'டைமிதைல் டெரிஃப்தலேட்-டி.எம்.டி' ஆகியன உற்பத்தி செய்கிறார்.

திருபாய் அம்பாணி, பம்பாய் கடத்தல் செயற்கை இழை விற்பனைக் கடையில் சாதாரண ஊழியராகத் துவங்கியவர். 25 ஆண்டுகளுக்கு முன்பு கடத்தல் செயற்கை இழைகள் விற்பனைத் தரகராகத் தனித் தொழில் துவங்கினார். தொழில் தந்திரங்களில் கைதேர்ந்தவராகி 10 ஆண்டுகளுக்குள் 'ரிலையன்ஸ்' துணி ஆலையை நிறுவினார். அரசியல்வாதிகள், அதிகாரிகளை விலை பேசி கைக்குள் போட்டுக்கொண்டு தொழில் காரியங்களைச் சாதித்துக் கொள்வதை கலையாகவே பயின்று சாதனை புரிந்தார். 1980 பொதுத் தேர்தல்களில் ஏராளமாகப் பணத்தை வாரி இறைத்து இந்திரா - சஞ்சய் நம்பிக்கையைப் பெற்றார். அவர்கள் மூலம் அப்போதைய நிதிமந்திரி பிரணவ முகர்ஜி, ஆர்.கே.தவான்; பிறகு ராஜீவ், அமிதாப்பச்சன் ஆகியோரது கூட்டோடு பங்குச் சந்தை மோசடிகள், கடத்தல்கள், அரசு வங்கி மோசடிகள், வருமான வரி - சுங்கத் தீர்வை ஏய்ப்புகள் என்று பல தில்லுமுல்லுகள் செய்து 15 ஆண்டுகளில் கிடுகிடுவென வளர்ந்துவிட்டார்.

இப்போது டாட்டா, பிர்லாவுக்கு அடுத்து மூன்றாவது பெரும் தரகு அதிகார முதலாளி திருபாய் அம்பாணி தான்! 'ரிலையன்ஸ்' ஆலைகள், 'ரிலையன்ஸ் பெட்ரோ இரசாயன' ஆலைகள், 'லார்சன் அண்டு டூப்ரோ' ஆகிய கம்பெனிகளுக்கு அதிபர். ஏறக்குறைய 3700 கோடி ரூபாய் சொத்தும், ஆண்டுக்கு 3000 கோடி ரூபாய் வரவு செலவும் செய்கிறார். துணிமணிகள், செயற்கை இழைகள் அவற்றுக்குத் தேவையான கச்சாப் பொருட்கள், மின்சார மற்றும் மின்னணுக் கருவிகள், சிமெண்ட் மற்றும் கனரக பொறியியற் பொருட்கள், பெட்ரோலியத் துரப்பணம், எண்ணெய் சுத்திகரிப்பு, கப்பல் போக்குவரத்து, தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் விளம்பரம் ஆகிய பல்வேறு துறைகளிலும் காலூன்றி ஒரு தொழில் பேரரசையே கைப்பற்றிக் கொண்டார், திருபாய் அம்பாணி.

காங்கிரசின் தரகு முதலாளிகளான பிர்லாவின் ''குவாலியர் ரயான்ஸ்'', ராமகிருஷ்ண நாயுடுவின் ''சௌத் இந்தியாவிஸ்கோஸ்'' ஆகிய ஆலைகள் 'ரயான்' செயற்கை இழைகள் உற்பத்தியில் 20 ஆண்டுகாலம் ஏகபோக ஆதிக்கம் வகித்துவந்தன ஆகவே அவற்றைவிட நவீன, உயர்ரக 'பாலியஸ்டர்' செயற்கை இழைகள் கடத்தல் வியாபாரம் பம்பாய் - அகமதாபாத் நகரங்களில் பெருமளவு நடந்தது. 1977-79 ஜனதா ஆட்சியில் செல்வாக்குப் பெற்றிருந்த நுஸ்லி வாடியா 'பாலியஸ்டர்' செயற்கை இழை - ஆடை தயாரிப்பதற்குத் தேவையான டி.எம்.டி. உற்பத்தி செய்வதற்குத் திட்டமிட்டார். அதற்காக அமெரிக்காவில் இருந்து ஒரு பழைய டி.எம்.டி. ஆலை இறக்குமதிக்கு 'லைசென்சு' கோரி அரசுக்கு மனுப் போட்டார்.

அதற்குள் 1980 தேர்தல்களில் இந்திரா மீண்டும் ஆட்சிக்கு வரவே, அம்பாணியின் இரகசிய 'நாசவேலை' காரணமாக நுஸ்லி வாடியாவின் மனு கிடப்பில் போடப்பட்டது. இதற்கிடையே 'பாலியஸ்டர்' செயற்கை இழை ஆடை தயாரிப்புக்குத் தேவையான மிகவும் மலிவான, அதி நவீனமான கச்சாப் பொருள் சுத்திகரிக்கப்பட்ட டெரிஃப்தாலிக் திராவகம் (பி.டி.ஏ) மற்றும் பாராக்சிளின் ஆலைகளுக்கு 'லைசென்சு' கோரி இரகசியமாக மனுப்போட்டு மிகக் குறுகிய காலத்திலேயே அனுமதி வாங்கி ஆலையையும் நிர்மாணிக்கத் துவங்கிவிட்டார், அம்பாணி.

நுஸ்லி வாடியா டி.எம்.டி. ஆலை நிறுவ முடிந்தது, என்றாலும் அது பழைய தொழில்நுட்ப அடிப்படையிலானது அவ்வளவு லாபகரமானது அல்ல. இந்திரா, ராஜீவ் அரசுகளில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி தனது பி.டி.ஏ.வை மிக அதிக அளவில் விற்பதற்காக பல வரிவிதிப்பு, சுங்கத் தீர்வை சலுகைகள் பெற்றார் திருபாய் அம்பாணி. ''டி.எம்.டி.'' மற்றும் ''பி.டி.ஏ.'' ஆகிய இரண்டுக்கும் அடிப்படையானது ''பாராக்சிளின்'' என்ற கச்சாப் பொருள். அதை சிறிய அளவில் இரு அரசு ஆலைகளும் மிகப் பெரிய அளவில் அம்பாணியின் ஆலையும் உற்பத்தி செய்கின்றன. எனவே நுஸ்லி வாடியாவின் டி.எம்.டி. ஆலைக்குத் தேவையான பாராக்சிளின் அம்பாணியிடமிருந்தோ, கொள்ளை விலை கொடுத்து இறக்குமதி செய்தோ பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் கோயங்கா போன்ற சில தரகு முதலாளிகள் நுஸ்லி வாடியா அம்பாணிக்கிடையே தொழில் சமரசம், ஒப்பந்தம் - உடன்பாடு காண பஞ்சாயத்துப் பேசினர். இந்திரா - ராஜீவ் கும்பலின் பின்பலம் காரணமாக அம்பாணி அவற்றை மதிக்கவில்லை. எனவே கோயங்கா, நுஸ்லி வாடியா மற்றும் வேறு சில தரகு அதிகார முதலாளிகள் கூட்டுச் சேர்ந்து அம்பாணியை வீழ்த்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்கினர். அப்போது நிதி மந்திரியாக இருந்த வி.பி.சிங், அவருக்குக் கீழிருந்த நிதித்துறை உயர் அதிகாரிகளான பாண்டே மற்றும் பூரேலால், அமெரிக்கத் தனியார் உளவு நிறுவனமான ஃபார்ஃபாக்ஸ் - ஹெர்ஷ் மேன் ஆகியோரைக் கொண்டு அம்பாணியின் 'ரிலையன்ஸ்' தில்லுமுல்லுகளைக் கண்டுபிடித்தனர். அவை :

◆ மந்திரிகள் - அதிகாரிகளை 'சரிக்கட்டி' விதிகளுக்குப் புறம்பாகவும் அதிவிரைவாகவும் ஆலைகளுக்கும், இறக்குமதிக்கும் அனுமதி பெற்றது. ◆ 200 கோடி ரூபாய் அளவுக்கான பங்கு ஆவணங்களுக்கு முன் தேதியிட்டு மோசடி செய்து அரசு கடன் நிறுவனங்களிடமிருந்து சலுகை - கடன் பெற்றது. ◆ பங்குதாரர்களுக்கு ஆசை வார்த்தை காட்டி ஏமாற்றிவிட்டது; விதிகளுக்கு மாறாக பங்குகளை விற்றது. ◆ 120 கோடி ரூபாய் 'பி.டி.ஏ.' ஆலையையே இரகசியமாகக் கடத்திவந்து நிர்மாணித்தது. விசாரணையில் தெரிய வந்தபோது, இலவசமாக வெளிநாட்டுக் கம்பெனி கொடுத்ததாகப் புளுகியது. ◆ இரகசிய உலகப் பேர்வழிகள், இரகசிய வங்கிகள் இயங்கும் வரி விலக்குப் பெற்ற முதலாளிகளின் சொக்கமான ''ஐல் ஆஃப் மேன்'' என்ற அமெரிக்கத் தீவு உள்ளது. அங்கு மர்மமாக வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களிடமிருந்து கருப்புப்



திருபாய் அம்பாணி வாரிசுகள் அனில் அம்பாணி, முகேஷ் அம்பாணியுடன்

www.padippakam.com

படிப்பகம்

பண முதலீடு பெற்றுள்ளது. அந்நியச் செலாவணி குற்றத்தடுப்பு விதிகளை மீறியது.

- இதையெல்லாம் குருமூர்த்தி மூலமாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் அம்பலப்படுத்தியது, நுஸ்லி வாடியா கோயங்கா கும்பல். இதனால் 'ரிலையன்ஸ்' பங்குச் சந்தையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. பல கோடி ரூபாய் அம்பாணிக்கு நட்டம் ஏற்பட்டது. நுஸ்லி வாடியா - கோயங்காவின் எடுபிடிகளை வைத்து அம்பாணியின் பங்கு சந்தை விற்பனைக்கு எதிராக வழக்குப் போட்டு நெருக்கடியில் தள்ளினர். இதை முறியடித்தும், 'பேட்ரியாட்' போன்ற பத்திரிகைகளை சரிக்கட்டியும், விளம்பரம் மூலமாகவும் அம்பாணி எதிர்ப் பிரச்சாரம் செய்து வந்தார். ராஜீவ் - அமிதாப்பச்சன் பின்பலத்தை வைத்துக் கொண்டு பூதாகரமாக வளர்ந்துவிட்டார்.

### தரகு முதலாளிகளிடையே தகராறு அரசியல் அரங்கிலும் வெடித்தது

தொழில் ரீதியான தகராறில் அம்பாணி வென்று பல மடங்கு முன்னேறிவிடவே, தகராறு அரசியல் அரங்குக்குத் திரும்பியது. வி.பி.சிங் மற்றும் அவரது அதிகாரிகள் மூலம் அமெரிக்க ஃபார்ஃபாக்ஸ் ஹெர்ஷ்மேனை வைத்து அம்பாணியோடு ராஜீவின் பினாமிகளான அமிதாப் - அஜிதாப், லலித் தாபர் போன்றவர்களுடைய பொருளாதாரக் கிரிமினல் குற்றங்கள் பற்றி உளவு பார்த்தது கோயங்கா - நுஸ்லி வாடியா கும்பல். இது தனக்கே எதிரான உளவு வேலையாகக் கருதி வி.பி.சிங்கிடம் இருந்து நிதி இலாகாவைப் பறித்து இராணுவ மந்திரியாக்கினார், ராஜீவ்.

பிரதமர் ராஜீவ் - ஜனாதிபதி ஜெயில் சிங் தகராறைப் பயன்படுத்திக் கொண்டு ராஜீவ் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்திய கோயங்கா - நுஸ்லி வாடியா கும்பல், எதிர்க்கட்சிகளின் பூரண நம்பிக்கையைப் பெற்றது. ராஜீவ் - அமிதாப் - அம்பாணி கும்பல் விடவில்லை. ஃபார்ஃபாக்ஸ் ஃ - ஹெர்ஷ்மேன் குருமூர்த்திக்கு எழுதியதாக இரு (ஃபோர்ஜரி) பொய்க் கடிதங்களைத் தயாரித்து அதைக் காட்டி நுஸ்லி வாடியா, கோயங்கா, வி.பி.சிங், குருமூர்த்தி ஆகிய கும்பல் தேச விரோதமாக சி.ஐ.ஏ. ஏஜெண்டு ஹெர்ஷ்மேனோடு சேர்ந்து தேச ரகசியங்களை கடத்துவதாக குற்றஞ்சாட்டியது. அரசு ரகசியங்களைத் திருடியதாக குருமூர்த்தியையும் அவரது உதவியாளர் ஜானகிராமனையும் சி.பி.ஐ. கைது செய்தது. ஹெர்ஷ்மேன் எழுதியதாகக் கூறும் கடிதங்கள் (ஃபோர்ஜரி) போலியானது என்று அம்பலப்படவே, ராஜீவ் கும்பல் பின்வாங்கியது. அதேசமயம் ஜெர்மன் நீர்மூழ்கி கப்பல் வாங்கியதில் நடந்த லஞ்ச ஊழலை விசாரிக்கும்படி வி.பி.சிங் உத்திரவு போட்டு எதிர்த் தாக்குதல் தொடுத்தார். அப்போது சுவீடன் போஃபார்ஸ் பீரங்கி பேர ஊழலும் அம்பலமானது.

இதெல்லாம் நாட்டை நிலைகுலைப்பதற்கு அந்நிய சதி என்று கூறி வி.பி.சிங் கும்பலைக் கட்சியிலிருந்து தூக்கி எறிந்தது ராஜீவ் கும்பல். நடராஜன் - தாக்கர் விசாரணைக் கமிஷன் போட்டு ஃபார்ஃபாக்ஸ் விவகாரத்தில் நுஸ்லி வாடியா, வி.பி.சிங் ஆகியோர் தான் குற்றவாளிகள் என்று தீர்ப்புக் கூற வைத்தது. அதனால் தனது பினாமிகளும் கூட்டாளிகளுமான அமிதாப் - அஜிதாப், அம்பாணி, தாபர் போன்றவர்களின் பொருளாதாரக் கிரிமினல் குற்றங்களை மூடி மறைத்தது. இலாகாபூர்வ விசாரணை நடத்தி நீர்மூழ்கிக் கப்பல் பேரத்தில் ஊழல் நடக்கவில்லை என்று சாதித்தது. நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை நாடகமாடி போஃபார்ஸ் விவகாரத்தில் ஊழல் நடக்கவில்லை என்று மழுப்பியது. ''இந்து'' நாளேடு அம்பலப்படுத்திய போஃபார்ஸ் லஞ்ச ஊழல் - தரகு பேர ஆவணங்கள் மீது சி.பி.ஐ. விசாரணை நடப்பதாகக் கூறி வருகிறது.

கோயங்கா - நுஸ்லி வாடியா மீது அரசு எந்திரத்தை ஏவி எதிர்த் தாக்குதல் தொடுக்கிறது, ராஜீவ் கும்பல். இறக்குமதி - சுங்கத் தீர்வை ஏய்ப்பு, அச்சக - அலுவலக கட்டிட ஒப்பந்த மீறல் போன்ற இந்தியன் எக்ஸ்பிரஸ் மீதான புகார்கள் பேரில் சோதனை வழக்குகளை ஏவி வருகிறது. டெல்லி ஐந்து நட்சத்திர விடுதியில் தான் ஒரு இந்தியன் என்று பொய் தகவல் கொடுத்த குற்றத்துக்காக நுஸ்லி வாடியாவைக் கைது செய்து வழக்குப் போட்டது. அவரது ''விசா''வை நீட்டிக்க மறுத்து நாட்டைவிட்டே விரட்டும் உத்திரவு போட்டது. அதற்கு எதிராக அவர் வழக்காடிக் கொண்டு இந்தியாவில் தங்கியுள்ளார். இந்த வழக்குகள் சாதாரணமானவை - உள்ளூர் போலீசு - அதிகாரிகளே நடத்தக் கூடியவை. ஆனால் சி.பி.ஐ. குறிப்பாக, அதன் இயக்குநர் மோகன் கத்ரேயே நேரடியாகஇருந்து அவற்றை நடத்துகிறார்.

அமிதாப் - அஜிதாப், அம்பாணி மீதான மோசடிக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை எனக் கூறி அவர்களுக்கு மேலும் பல சலுகைகளைக் கொடுக்கிறது, ராஜீவ் கும்பல். இதையும் ஜப்பானிய சுமிடோமா எண்ணெய்க் குழாய் பேர ஊழல், வெஸ்ட்லாந்து ஹெலிகாப்டர் பேர ஊழல், மாட்டுத் தீவன இயந்திர இறக்குமதி ஊழல் போன்றவற்றை அவ்வப்போது அம்பலப்படுத்தி ராஜீவ் ஆட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்துகிறது கோயங்கா - நுஸ்லி வாடியா கும்பல்.

போஃபார்ஸ் பீரங்கி பேரம் பற்றிய பொதுத் தணிக்கையாளர் அறிக்கை ராஜீவ் கும்பலை சாடுகிறது. அதை ஒரு ஆயுதமாக்கிக் கொண்டு ராஜீவ் கும்பலுக்கு எதிரான அரசியல் தாக்குதல் தொடுப்பதற்கும், வீழ்த்துவதற்கும் எதிர்க்கட்சிகளுக்கு முழு ஆத

பம்பாய் எஸ்பிளனேடு கோர்ட்டுக்கு இழுத்து வரும்போது சால்வை - துப்பட்டாவால் முகத்தை மூடிக்கொண்டுள்ள சதிகாரன் கீர்த்தி அம்பாணி. (உள்ளே: கீர்த்தி அம்பாணி)





www.padippakam.com
படிப்பகம்

ரவு கொடுக்கிறது கோயங்கா - நுஸ்லி வாடியா கும்பல். நுஸ்லி வாடியா கொலைச் சதி வழக்கின் மீது சுப்ரீம் கோர்ட்டில் ராம் ஜேத்மலானி பகிரங்கமாகவே இதை ஒப்புக் கொண்டார். நுஸ்லி வாடியாவை மட்டு மல்ல; பல எதிர்க்கட்சித் தலைவர்களையும் கொலை செய்ய அம்பாணி கும்பல் சதி செய் வதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

### தரகு முதலாளிகளும் அரசியல் கட்சிகளும்

நாட்டிலுள்ள பல்வேறு தரகு அதிகார வர்க்க முதலாளிகளிடையே நடக்கும் தொழில் தகராறுகளும் அவற்றின் அரசியல் விளைவுகளும் அம்பாணி - நுஸ்லி வாடியா விவகாரத்தில் கூர்மையாக வெளிப்பட்டி ருக்கிறது. ஏற்கனவே நீறுபூத்த நெருப்பாய் இருந்த இந்த தகராறுகளை ஊதிப் பெருந்தீ யாக வளர்த்த பெருமை இந்திரா - ராஜீவ் கும்பலுக்கு உண்டு.

1980 இல் இந்திரா மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு பல புதிய பொருளாதார நடவ டிக்கைகளை மேற்கொண்டார். கருப்புப் பணத்தைத் தானே முன்வந்து அறிவித்து முதலீடு செய்வது; வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் முதலீட்டுக்குப் பல சலுகைகள் அளிப்பது; ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்திக்கு முழு அனுமதி - அதற்காகப் பல இறக்குமதி சலுகைகள் ஆகிய கொள் கையை அமுலாக்கியது. ராஜீவ் 'புதிய பொருளாதாரக் கொள்கை' இந்தப் போக்கை நாலுகால் பாய்ச்சலில் துரிதப்ப டுத்தியது. இவற்றின் விளைவாக அம் பாணி, இந்துஜா, சாபிரியா, ஆர்.பி.கோ யங்கா போன்ற பல தரகு முதலாளிகள் திடீ ரென்று பூதாகரமாக வளர்ந்தனர். வெளிநா டுகளில் இருந்து கருப்புப் பணத்தைக் கொண்டு வந்து, பல பழைய தொழில் நிறுவ னங்களை அப்படியே விழுங்கி ஏப்பம் விட் டனர்.

டன்லப் டயர் கம்பெனி, ஷாவாலாஸ் சாராய - உர - இரசாயனக் கம்பெனி, ஓசன் மின்னணு சாதனக் கம்பெனி போன்ற வற்றை மனு சாபிரியா விழுங்கிவிட்டார். இவர் துபாயில் இருந்து 1000 கோடி ரூபாய் வரை கொண்டு வந்து முதலீடு செய்துள் ளார். 650 கோடி ரூபாய் சொத்துள்ள ''லார் சன் - டூப்ரோ'' கம்பெனியை அம்பாணி கப ளீகரம் செய்தார். அசோக் லேலாந்து மோட் டார் கம்பெனி உட்பட பல கம்பெனிகளை 1000 கோடி ரூபாய் மூலதனமிட்டு இந்துஜா கைப்பற்றினார் - இவர் சர்வதேச ஆயுத பேரத் தரகு முதலாளி; போஃபார்ஸ் பீரங்கி பேரத்தில் ராஜீவின் பினாமி. ஐ.சி.ஐ.எம். மற்றும் பிற பெட்ரோ இரசாயன ஆலைக ளைக் கைப்பற்றினார் ஆர்.பி.கோயங்கா.

அதேசமயம் பஜாஜ், விஜய் மல் லையா, சிதம்பரம் தாபர் - போன்ற பழைய தரகு முதலாளிகள் தமது தொழில்களை விரி வுபடுத்தினர். ராஜீவ் கும்பலின் பினாமிக ளாக லலித்சூரி, அஜிதாப் - அமிதாப் போன்ற பல புதிய தரகு முதலாளிகளும் களத்தில் குதித்தனர். புதிய ஆலைகளை நிறு வுவதிலும், பழையவற்றைக் கைப்பற்றுவதி லும் இந்தப் பழைய - புதிய தரகு முதலாளிக ளுக்கிடையே கடும் போட்டி உருவாகியுள் ளது.

''ஷாவாலாஸ்'' கம்பெனியை வாங்கு வதில் விஜய் மல்லையாவுடனும், டன்லப் டயர் கம்பெனியை வாங்குவதில் ஆர்.பி. கோயங்காவுடனும் கடும் தகராறில் சிக்கிக் கொண்டார் மனு சாபிரியா. மல்லையாவை யும், கோயங்காவையும் ஏமாற்றி நிதி மோசடி செய்துவிட்டார் என்று சாபிரி யாவை அவர்கள் தாக்குகின்றனர். லார்சன் அண்டு டூப்ரோவை வாங்குவதில் அம்பா ணியும், காம்மன் நிர்மாண கம்பெனியை வாங்குவதில் அமிதாப்பச்சனும், சாபிரியா வின் முயற்சிகளை முறியடித்துவிட்டனர்.

அம்பாணி, ஆர்.பி.கோயங்கா, அமி தாப், இந்துஜா ஆகிய ஆளும் ராஜீவ் கும்ப லின் ஆதரவு பெற்ற தரகு அதிகார முதலாளி களுக்கு எதிராக நுஸ்லி வாடியா, இந்தியன் எக்ஸ்பிரஸ் கோயங்கா, ஆகியோரோடு சேர்ந்து கொண்டு எதிர்க்கட்சிகளை ஆதரிக் கிறார் சாபிரியா. கடந்த தேர்தல்களில் அரி யானா தேவிலாலுக்கும், தமிழக கருணாநி திக்கும் சாபிரியா ஏராளமாக நிதி அள்ளிக் கொடுத்துள்ளார். எனவேதான் ராஜீவ் கும்ப லின் ஆதரவு பெற்ற இந்துஜா சென்னை ''ஸ்டாண்டார்டு மோட்டார்ஸ்'' கார் கம்பெ னியைக் கைப்பற்றுவதைத் தடுத்துவிட்டார் கருணாநிதி.

இப்படித் தொழிலதிபர்கள் - அரசியல் வாதிகளுக்குள்ளே இருக்கும் நெருக்கமான தொடர்பு, தொழில் தகராறுகள், அரசியலில் பிரதிபலிப்பது பற்றி ஏராளமான இரகசியங் கள் உள்ளன. ஓட்டுக் கட்சிகளுக்கிடையில் நடக்கும் மோதல்கள் நாட்டுக்கும், மக்களுக் கும் சேவை செய்வது யார் யார் என்ற கொள்கை அடிப்படையிலானது என்பதை நம்புவோர் இப்போது மிகக் குறைவு; லஞ்ச ஊழல் அதிகார முறை கேடுகளால் தமது சொந்த லாபத்துக்கு கொள்ளையிடும் நாய்ச் சண்டைதான் என்று பலரும் நம்புகின்றனர். இதுவும்கூட ஒரு பகுதிதான். எந்தெந்த கொள்கைகளைப் பின்பற்றி எந்தெந்தத் தரகு அதிகார முதாலளிகளுக்குச் சேவை செய்வது என்பது இன்னொரு, முக்கியமான விவகாரம்.

தற்போது தரகு அதிகார முதலாளிக ளுக்கிடையே நடக்கும் தகராறுகள் பிரதிப லிக்காத எந்த ஒரு அரசியல் விவகாரமும் கிடையாது என்ற நிலை உருவாகிறது. ஐந் தாண்டுத் திட்டங்கள், ஆண்டு வரவு - செலவு பட்ஜெட்டுக்கள் முதற்கொண்டு போலீசு - சி.பி.ஐ., உச்சநீதிமன்றம் வரை சக லவற்றிலும் அவர்கள் மோதிக் கொள்கிறார் கள். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வாக்க ளிக்கும் மக்கள் அல்ல; அதிகார - பண பலம் நிறைந்த தரகு அதிகார முதலாளிகள் தாம் எதையும் தீர்மானிக்கிறார்கள். இதற்கே அர சியல், கொள்கை, லட்சியம் என்கிற சாயம் பூசுகிறார்கள். ''பாரதத்தைக் காப்போம்'', ''லஞ்ச ஊழலை ஒழிப்போம்'' என்று முழங் குகிறார்கள் கோயங்கா, நுஸ்லி வாடியா சாபிரியா ஆட்கள்; ''மக்களுக்கு அதிகாரம் ''தேச ஒற்றுமை'' என்று கத்துகிறார்கள் அம்பாணி, இந்துஜா, தாபர் ஆட்கள். நாட் டையும் நம்மை தரகு அதிகார முதலாளிகள் கொள்ளையடிப்பதற்கு இப்படியும் ஒரு நாடகம். இதுதான் நாடாளுமன்ற ஜனநாயக கம்! இனிமேலும் இதை நம்பலாமா?

◆ ஆர்.கே.

India and the Raj
www.padippakam.com

இந்தியாவும்
பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும்
1919 - 1947
(முதல் தொகுதி)
சுனிதிகுமார் கோஷ்
பக்கங்கள் : 396 விலை : ரூ.70
பதிவுத் தபாலில் அனுப்புவதற்கான அஞ்சல் செலவு ரூ.6.70ம் சேர்த்து அனுப்புங்கள்.

The Indian Big Bourgeoisie
இந்தியப் பெருமுதலாளி வர்க்கம்
அதன் தோற்றம், வளர்ச்சி, தன்மை
சுனிதிகுமார் கோஷ்
பக்கங்கள் : 311 விலை ; ரூ.50
பதிவுத் தபாலில் அனுப்புவதற்கான அஞ்சல் செலவு ரூ.6.70ம் சேர்த்து அனுப்புங்கள்.

பிரதிகள் வேண்டுவோர் மணிஆர்டர் அல்லது டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி : *எஸ்.மதியழகன், 21, பாலாஜி சிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.*

நூல்கள் பற்றி : 'இந்தியப் பெருமுதலாளிகள்' எனும் நூல் 1985 இல் வெளியிடப் பட்டது. இந்திய பெருமுதலாளிகளை தேசிய முதலாளிகள் என்றும் சார்பு முதலாளிகள் என்றும் பலவாறாக வியாக்கியானம் செய்யும் எல்லா திருத்தல்வாத அரசியல் கண்ணோட்டங்களையும் பல்வேறு ஆதாரங்களுடன் முறியடிக்கும் நூல் இது.

'இந்தியாவும் பிரிட்டிஷ் சாம்ராச்சியம்' என்னும் நூல் இந்திய விடுதலைப் போராட்டத்தின் மறைக்கப்பட்ட வரலாற்றை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. காங்கிரசின் துரோகம், காந்தியின் இரட்டை வேடம், பிர்லா போன்ற இந்தியத் தரகு முதலாளிகளுக்கும் காந்தி காங்கிரசுக்கும் இருந்த கள்ள உறவு ஆகியவற்றை அம்பலப்படுத்துவதன் மூலம் ஆகஸ்டு-15 சுதந்திரம் போலியானது என்பதை நிறுவுகிறது. வெள்ளையருக்கு எதிராக நடந்த புரட்சிகர தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றையும் தொகுத்து சொல்கிறது. இந்நூலுக்கான ஆதாரங்கள் அனைத்தும் மூல நூல்களிலிருந்தும், பத்திரிக்கைகளிலிருந்தும் நேரடியாக எடுக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பு. இரண்டு ஆங்கில நூல்கள்.

ஆசிரியர் பற்றி : தோழர். சுனிதிகுமார் கோஷ், 1946 முதலே பொதுவுடமை இயக்கத்தில் செயலாற்றி வருபவர். இ.பொ.க (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) இன் ஸ்தாபகர்களில் ஒருவர். நக்சல்பாரி அரசியலை உயர்த்திப் பிடித்து வரும் புரட்சியாளர்.

படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்தில் எதிர்ப்பு இயக்கம் வலுக்கிறது
# ''அமைதிப்படை''யின் வெறியாட்டம்!
# திராவிடத் தலைவர்களின் துரோகம்!

கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி கோவை கு.இர்ராம கிருஷ்ணன், கே.ஆறுச்சாமி உட்பட ஆறு போட்டி திராவிடர் கழகத்தவரை தமிழக ''க்யூ'' பிரிவு போலீசார் கைது செய் யுள்ளனர். அவர்களை வெறுமனே சிறையில் அடைத்து வைத்தி ருக்கிறார்களா, அல் லது சித்திரவதையைத் துவங்கிவிட்டார்களா என்று தெரியாது. இந்திய இராணுவத்தின் ஈழ ஆக்கிரமிப்புப் போர் மற்றும் அக்கிரமங்களுக்கு எதிராகவும், விடுதலைப்புலிக ளுக்கு ஆதரவாகவும் பிரச்சாரத்தில் ஈடுபட்டதுதான் அவர்கள் செய்த குற்றம்!

நக்சல்பாரிப் புரட்சியாளர்களை ஒடுக்குவதற்காகவே முந் தைய தவணை ஆட்சியில் கருணாநிதி உருவாக்கியது ''கியூ'' பிரிவு போலீசு. கரு ணாநிதியின் கீழ் தமிழக நக்சல்பாரித் தலை வர் அப்புவையும் எம்.ஜி.ஆரின் கீழ் பாலன் உட்பட 35 புரட்சி யாளர்களையும் படுகொலை செய்தது இந்தக் ''கியூ'' பிரிவு போலீசின் சாதனை. பிறகு ஈழவிடுதலையின் ஆதரவாளராக நடித்துக் கொண்டே எம்.ஜி.ஆர். ஒரு காரியம் செய்தார். மத்திய உளவுப்படையான ''ரா''வின் இளைய பங்காளியாக இருந்து ஈழப்போராளிகளையும் அவர்களுடைய ஆதரவாளர்களையும் ஒடுக்கும் பொறுப்பையும் இந்தக் ''கியூ'' பிரிவு போலீசிடம் கொடுத்தார். அது, ஈழப் போராளிகளிடமிருந்து செய்தித் தொடர்பு மற்றும் ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு வேட்டை யாடியது. ஏன், ஈழ ஆதரவு தி.மு.க.காரர்களுக்கு எதிராகக் கூட பல வெடிகுண்டுப் பொய்வழக்குகளையும் ஏவித் துன்புறுத்தி யது. இதே ''கியூ'' பிரிவுப் போலீசைத் தான் இப்போது ஈழ விடுதலை ஆதரவு இயக்கங்களுக்கு எதிராகக் கருணாநிதி ஏவி யுள்ளார்.

இராமகிருஷ்ணன், ஆறுச்சாமி முதலியோர் வீரமணியின் திராவிடர் கழகத்திலிருந்து ''தீவிரவாதிகள்' என்கிற முத்திரை குத்தி வெளியேற்றப் பட்டவர்கள். பெரியார் சேர்த்துவைத்த 300 கோடி ரூபாய் சொத்தை அனுப விப்பதற்கு எவ்வித ஆபத்து இல்லாமல் ''இனமான''-''இனவிடுதலை'' ''வ குப்புரிமை''ப் போர் நடத்துகிறார், வீரமணி! ''மாவீரன்'' நெடுமாறனுடன் சேர்ந்து கொண்டு உலகம் சுற்றித் திரிவதோடு உள்ளூரில் எம்.ஜி. ஆர்., கருணாநிதி, ராஜீவ் என்று மாறிமாறி சமரச சந்தர்ப்பவாதம் பேசி சரணடைகிறார். இதற்கு எதிராக ஈழவிடுதலை ஆதரவு இயக்கத்தை தொடர்ந்து, உறுதியாக நடத்த முயலும் இராமகி ருஷ்ணன், ஆறுச்சாமி போன்றவர்கள் போட்டி திராவிடர் கழக மாக இயங்குகின்றனர். ராஜீவ் தமிழகப் பயணம் வரும்போ தெல்லாம் நக்சல்பாரிப் புரட்சி இயக்கத் தோழர்களோடு இவர்க ளும், (குறைந் தது ஆறுமுறை) கைது செய்யப் பட்டுள்ளனர். இப்படிப்பட்டவர்களை வீரமணியின் உள்ளூர் 'பினாமி'களே போலீசிடம் பிடித்துக் கொடுப்பதும் உண்டு.

- இவைதான் வீரமணி, கருணாநிதி, எம்.ஜி.ஆர். போன்ற திராவிடத் தலைவர்களின் இன உணர்வு யோக்கியதை! 1983 ஈழத் தமிழர் இனப்படுகொ லைக்கு எதிராக மிகப் பெருமளவில் பொங்கி எழுந்த தமிழகத்தில், இன்று இந்திய ஈழ ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராக அமைப்பு சார்ந்த ஓரிரு இயக் கங்கள் மட் டுமே பிரச்சாரம் செய்கின்றன. தமிழக தலைநகர் சென்னையில் ''இந்து'' நாளேடு நடத்திய கருத்துக்கணிப்பின்படி, 60 சதவிகி தத்துக்கும் மேலானவர்கள் பாசிச ராஜீவ் கும்பலின் இலங்கைக் கொள்கையை -துரோக ஒப்பந்தம், ஆக்கிரமிப்பு, போர் போன்ற வற்றை - ஆதரிக்கின்றனராம். கருத்துக்கணிப்பு எந்த அளவு உண்மை என்பதும், இந்து நாளேட்டின் தேசிய வெறியும் ஒருபு றம் இருக் கட்டும். தமிழ்நாட்டில் கணிசமான பேர் இந்திய தேசிய வெறிக்குப் பலியாகி இந்திய இராணுவ ஆக்கிரமிப்புப் போரை ஆதரிக்கின்றனர்; அல்லது அதற்கெதிரான கேபாவேசம் எழுச்சியில்லை. நெடுமாறன் - வீரமணி கும்பலின் பெயரளவி லான ஈழ விடுதலை பிரச்சாரம் தவிர, புரட்சியாளர்கள் மற்றும் இராமகிருஷ்ணன் போன்ற சில திராவிட தமிழ் இனக் குழுக்க ளின் இயக்கமும்தான் உள்ளது. இதற்கு எதிராக சோ, ஜெயகாந் தன், தா.பாண்டி யன், ம.பொ.சி. போன்ற கூலிப் பிரச்சாரகர்கள் பகிரங்கமாகப் புளுகித்திரிய முடிகிறது. இந்த மோசமான நிலைக் குக் காரணம் திராவிடத் தலைவர்களின் துரோகம் தான்!

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கவேண்டிய இந்திய இரா ணுவ ஆக்கிரமிப்பு அவசியமென கூலிப் பிரச்சாரகர்கள் கூறுகின் றனர். ஆகஸ்டு 2ந்தேதி, ஈழம் வல்வெட்டித்துறையில், இந்தியக் காப்டன் உட்பட ஏழு பேரைப் புலிகள் தாக்கி அழித்தனர். ஆயிரக்கணக்கான துருப்புக்களுடன் திரும்பிவந்த இந்தியப் படை பெண்கள் - குழந்தைகள் உட்பட ஈழத் தமிழரைப் படு கொலை செய்து பழிதீர்த்தது. வீடுகளையும், படகுகள் - வலைக ளையும் கொளுத்தினர். வல்வெட்டித்துறை பிரபாகரன், மாத் தையா சொந்த ஊர் என்பதால் இரட்டிப்பு வெறியோடு தாக்கி னர். இதை இந்திய ராணுவம் மூடிமறைக்க முயன்றது. பிறகு புலிகளுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் இடையே சிக்கிக் கொண்ட 24 பேர் மாண்டதாகப் புளுகியது. இப்போது இந்திய பத்திரிக்கையாளர் ரீட்டா செபஸ்தியன் மற்றும் பிரிட்டிஷ் நாளே டுகள் ''திட்டமிட்டு நடத்திய கொலைவெறி'' என்று அம்ப லப்ப டுத்தியுள்ளார். இந்த ஆக்கிரமிப்பு - கொலை வெறிப்படைதான் ஈழத் தமிழர்களைப் பாதுகாப்பதாகத் திராவிட இயக்கத் தலை வர்களும் கூலிப் பிரச்சாரகர்களும் புளுகுகின்றனர்.



இந்திய ஆக்கிரமிப்புப் படையை வெளியேற்றக் கோரி வாயில் துணி யைக் கட்டிக்கொண்டு புத்தமத குரு மார்கள் கொழும்பு நகரில் நடத்தும் மௌன ஆர்ப்பாட்டம்.

ஆகஸ்டு 15 அன்று சுதந்திர தினத்தைக் குண்டுதுளைக்காத கூண்டுக்குள் நின்று பாசிச ராஜீவ் கொண்டாடிக் கொண்டிருக்கும் அதேசமயம் ஜம்மு-காஷ்மீர், அரியானா, பஞ்சாப், உத்திரபிரதே சம், அசாம் ஆகிய ஐந்து மாநிலங்களில் ஊரடங்கு உத்திரவு அமுலில் உள்ளது. குறிப்பாக அசாம் கோட்பூரில் நூற்றுக்கணக் கான போடோ மலைவாழ்மக்கள் - குழந்தைகள், பெண்கள் - படுகொலை செய்யப்படுகின்றனர். 60,000 போடோ மக்கள் வீடுகளைத் துறந்து அண்டை மாநிலங்களில் தஞ்சம் புகுந்துள்ள னர். சொந்த நாட்டுப் பிரச்சினைகளை தீர்க்க வக்கற்ற பாசிச ராஜீவ் கும்பல் அண்டை நாட்டுக்குப் படை அனுப்பியுள்ளது, அந்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கல்ல. ஆதிக்க விரி வாக்க ஆக்கிர மிப்பு நோக்கத்திற்காகத் தான்! இதை எதிர்க்கும் மக்கள் மீது அடக்கு முறையை ஏவி விடுகிறது! தேசிய வெறியி னால் இப்போது - இங்கு இந்த அக்கிரமங்களை நியாயப்படுத்த லாம். உள்நாட்டு நெருக்கடி காரணமாக பிரேமதாசா கும்பல் படை விலக்கக் கோரிக்கையில் சமரச சரணடைவுக்குக் கூட ஒப்புக் கொள்வதாகத் தெரிகிறது. ஆனால் இலங்கையில் பெருகி வரும் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு இயக்கம் இந்திய இராணுவத்தோடு பிரேமதாசா கும்பலையும் இந்துமாக் கடலில் தூக்கி எறிவதாக வளர்கிறது.

மாணிக்கவாசகம்



படிப்பகம்

www.padippakam.com

### கம்ப்பூச்சியா புகட்டும் பாடம்;

# தேசீயவாதிகளின் துரோகம் ஆதிக்க வெறியர்களின் சூழ்ச்சி.

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்னால் கம்பூச்சியாவை ஆக்கிரமித்து, லட்சக்கணக்கான கூலிப்படைகளின் துணையுடன் பொம்மை அரசை நிறுவி ஆதிக்கவெறியாட்டம் போட்ட வியட்நாமிய வெறியர்கள், விட்டால் போதும் என்று பின்னங்கால் பிடறியில் பட கம்பூச்சியாவை விட்டு ஓடுகின்றனர். அடுத்தமாத இறுதிக்குள் வியட்நாமிய படைகள் அனைத்தும் கம்பூச்சியாவிலிருந்து வெளியேறிய பிறகு, கம்பூச்சியாவை ஆள்வது யார் என்ற விவகாரம் இன்று முன்னணிக்கு வந்துள்ளது. தங்களால் ஆதரிக்கப்படும் சக்திகளின் - கட்சிகளின் ஆட்சியை கம்பூச்சியாவில் நிலை நாட்டுவதற்காக ரஷியா, அமெரிக்கா உட்பட 20 நாடுகளும், வியட்நாமிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிவரும் கம்பூச்சிய போராளிக் குழுக்களின் பிரதிநிதிகளும் ஐ.நா மேற்பார்வையில் அண்மையில் பாரீசில் கூடி விவாதித்து வருகின்றனர்.

* *

இந்தியாவின் தென்கிழக்கே தென் சீனதீபகற்பத்தில் உள்ள சிறிய நாடு தான் கம்பூச்சியா. ஏனைய மூன்றாம் உலக நாடுகளைப் போலவே கம்பூச்சியாவும் ஒரு விவசாய நாடு.


அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் அடிமை நாடாக இருந்த கம்பூச்சியா 70களில் தேச விடுதலைப் போரில் வீறு கொண்டு எழுந்தது. போல்பாட் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும், கேமர் ரூஜ் எனும் அதன் செம்படையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடி லான் நால் ஆட்சியையும் கதிகலங்க வைத்தன.

ஏற்கனவே அமெரிக்க ஏகாதிபத்தித்துக்கு எதிராக நீண்ட காலமாக போராடி வரும் அண்டை நாடுளான வியட்நாம், லாவோஸ் மக்களது வீரஞ்செறிந்த போராட்டங்கள் கம்பூச்சிய மக்களுக்கு உத்வேக மூட்டுவதாக அமைந்தன இம்மூன்று நாடுகளும் தோளோடு தோள் சேர்ந்து ஆயுதப் போராட்டத்தில் உறுதியாக முன்னேறி 1975ல் தேச விடுதலையை ஈன்றெடுத்தன. காட்டுமிராண்டி அமெரிக்க ஏகாதிபத்திய கழுகின் சிறகுகள் பிய்த்தெறியப்பட்டு அதன் அடிவருடிகள் உயிர் பிழைக்க நாட்டைவிட்டே ஓடினர். நியாயமான போரில் எந்த ஒரு சிறிய நாடும் பெரிய நாட்டை வெல்ல முடியும் என்பதை நடை முறையில் நிரூபித்து, அடிமைப் பட்டுக் கிடக்கும் மூன்றாம் உலக நாட்டு மக்களுக்கு நம்பிக்கையையும் புரட்சிகர உணர்வையும் ஊட்டியது வியட்நாம் - லாவோஸ் - கம்பூச்சிய மக்களின் விடுதலை.

தேச விடுதலையைச் சாதித்த போதிலும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கடந்த காலத் தாக்குதல்களால் உற்பத்தி சீர்குலைந்து கடும் பஞ்சத்தில் சிக்கித் தவித்தன இந்நாடுகள். உணவு உற்பத்தியைப் பெருக்கவும் பஞ்சத்தைப் போக்கவும் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதே அன்றைய மையப் பிரச்சினையாக இருந்தது. அதுவரை விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து, உற்ற நண்பனாக நடித்து உதவி என்ற பெயரில் உள்ளே நுழைந்து அடிமைப் படுத்த காத்து நிற்கும் ரஷிய சமூக ஏகாதிபத்தியத்தின் தயவை நாடி அதன் கரடிப் பிடியில் சிக்குவதா? அல்லது இடர்பாடுகளை எதிர் கொண்ட போதிலும், எந்த ஏகாதிபத்தியத்தின் தயவுமின்றி சுயசார்புடன் நின்று தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைத்து நாட்டை முன்னேற்றிச் செல்வதா என்பதே மையமான கேள்வியாக இருந்தது.

வியட்நாமும் லாவோசும் முதலாவது பாதையைத் தேர்ந்தெடுத்து ரஷியாவின் நவீன அடிமை நாடுகளாகச் சீரழிந்தன கம்பூச்சியா ரஷியாவின் தயவை மறுத்து, சுயசார்புடன் நின்று நிலச்சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்கி முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. பஞ்சத்தில் கிடந்த நாடு ஒரே வருடத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கி உபரியை ஏற்றுமதி செய்யுமளவுக்கு முன்னேறியது.

ஆனால் இதனை அவ்வளவு எளிதில் சாதிக்க முடியவிலலை இன்னல்களின் நடுவே கம்யூனிஸ்ட் கட்சியின் உறுதியும், கம்பூச்சிய உழைக்கும் மக்களின் அளப்பரிய உழைப்பும் தான் இச்சாதனையைப் படைத்தது. கிராமப்புறங்களை அறவே புறக்கணித்த ஏகாதிபத்திய கொள்கையின் விளைவாக நகர்ப்புறங்களில் மக்கள் திரளாகக் குவிந்திருந்தனர். ஏகாதிபத்திய சீரழிவுக் கலாச்சாரத்தின் விளைவாக நகர்ப்புறங்கள் சோம்பேறிகளின், சுகவாசிகளின் கோட்டையாக இருந்தது. சுயசார்புடன் நின்று விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால், இம்மக்களை கிராமப்புறங்களுக்கு அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை. எனவே போல்பாட் தலைமையிலான கம்பூச்சிய புரட்சி அரசு நகரங்களில் மிதமிஞ்சி குடியேறிவிட்ட மக்களை கிராமங்களுக்கு அனுப்புவதை கட்டாயமாக்கியது.




உடனே சோம்பேறிகளும் சுகவாசிகளும் இதை எதிர்த்துக் கலகம் செய்யத் துவங்கினர். அமெரிக்க ஏகாதிபத்தியமோ இதை உசுப்பிவிட்டு, போல்போட் அரசு தனிமனித சுதந்திரத்தைப் பறிக்கும் சர்வாதிகார அரசாக சித்தரித்து, இடிந்த சொர்க்கத்தை மீட்கத் துடித்தது. மறுபுறம் தென் கிழகக்காசியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டத் தடையாக நிற்கும் கம்பூச்சியாவை அபகரிக்க ரஷிய ஏகாதிபத்தியம் தருணம் பார்த்துக் கொண்டிருந்தது. போல்பாட் அரசு நகரங்களிலிருந்து மக்களை கட்டாயமாக வெளியேற்றிய விவகாரம் அதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. ரஷியாவும் அமெரிக்காவைப் போலவே கம்பூச்சியாவில் மனித உரிமைகள் நசுக்கப்படுவதாகக் கூச்சலிட்டது.

இதே நேரத்தில் ரஷிய எஜமானர்களின் ஆலோசனைப்படி, வியட்நாமிய அடிவருடிகள் புதிதாக எல்லைப் பிரச்சினையைத் துவக்கினர். அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது விசுவாசிகளைத் தூண்டிவிட்டு கலகம் செய்ததைப் போலவே, ரஷியாவும் வியட்நாமும் தமது எடுபிடியான ஹெங்சாமரின் தலைமையில், போல்பாட்டின் சர்வாதிகாரத்தை எதிர்த்து கம்பூச்சிய மக்கள் ஆயுத எழுச்சியில் இறங்கியுள்ளதாகவும், அவர்களுக்கு உதவுவது தமது சர்வதேசக் கடமை என்றும் கூறிக் கொண்டு, ஒன்றரை லட்சம் கூலிப்படைகளைக் கொண்டு 1978 டிசம்பரில் வியட்நாம் கம்பூச்சியாவை ஆக்கிரமித்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஐந்தாண்டுகள் விடாப்பிடியாகப் போராடி விடுதலையைச் சாதித்து துளிர்விடும் நாற்றாக இருந்த கம்பூச்சியா மீண்டும் ரஷிய ஏகாதிபத்திய அடிவருடிகளால் அடிமைப்படுத்தப்பட்டது. மீண்டும் கேமர் ரூஜ செம்படை ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து வீரப்போரில் குதித்தது. தேசியவாதிகளான முன்னாள் இளவரசர் சிகானுக்கின் படையும், முன்னாள் பிரதமர் சோன்சான் தலைமையிலான தேசிய விடுதலை முன்னணியின் படையும் செம்படையுடன் இணைந்து வியட்நாமிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிட்டன.

1975க்குப் பிறகு மூன்றாண்டுகள் அமைதி தவழ்ந்த கம்பூச்சியாவில் மீண்டும் யுத்தப் புகை மூண்டது. மீண்டும் பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடுகிறது. வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்களால் அலைக்கழிக்கப்பட்டு அகதிகளாக மக்கள் தாய்லாந்துக்கு ஓடுகிறார்கள். தாய்லாந்து எல்லையில் உள்ள அகதிகள் முகாமில் மக்கள் பட்டினியால் பரிதவிக்கும் போது அவர்களுக்கு உலக நாடுகள் உதவி செய்யக்கூட வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்கள் தடுத்தனர்.

ஏறத்தாழ 35,000 முதல் 40,000 போராளிகளைக் கொண்ட கேமர் ரூஜ் செம்படை

படிப்பகம்

www.padippakam.com



சான் - சிகானுக்; கம்யூனிஸ்டுகளைப் புறக்கணித்து, துரோக ஒப்பந்தத்தை ஏற்கத் தயாராக உள்ள தேசியவாதிகள்.

தாய்லாந்து எல்லையில் முகாமிட்டுக் கொண்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடியது. கேமர் ரூஜ் படைகளுக்கு மாவோ தலைமையிலான சீனா அளித்துவந்த உதவி கூட, டெங் கும்பல் அதிகாரத்திற்கு வந்த பின்னர் குறைக்கப்பட்டு விட்டது. மறுபுறம் தாய்லாந்தின் கம்யூனிசப் புரட்சியாளர்கள், கேமர் ரூஜ் போராளிகளுடன் இணைந்து செயல் படுவதைக் கண்டஞ்சிய தாய்லாந்து, கேமர் ரூஜ் படைகளுக்கும், அகதிகளுக்கும் தஞ்சமளிப்பதை படிப்படியாக குறைத்துவிட்டது. இருப்பினும், தேச விடுதலையின் மீது மாளாக் காதல் கொண்ட செம்படையினர், இடர்பாடுகளை துச்சமென மதித்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக விடாப்பிடியாக போரிட்டு வடக்கு, வடமேற்கு பகுதிகளில் விடுதலைப் பிரதேசங்களை நிறுவியுள்ளனர்.

கேமர்ரூஜ் செம்படை மற்றும் தேசியவாதிகளான சிகானுக், சோன்சான் ஆகியோர் தலைமையிலான படைகள் ஐக்கிய முன்னணியை உருவாக்கி விடுதலைப் பிரதேசங்களில் கம்பூச்சிய ஜனநாயகக் குடியரசைப் பிரகடனம் செய்தன. உலகின் 40க்கும் மேற்பட்ட நாடுகள் இதை அங்கீகரித்தன. இந்தியா உட்பட ரஷிய அடிவருடி நாடுகள் ஹெங்சாமரினது பொம்மை அரசை அங்கீகரித்தன. இதன் விளைவாக கூட்டுச் சேரா நாடுகளின் இயக்கமே பிளவுபட்டுப் போனது. அதன் பிறகு சர்வதேச அரங்கில் கம்பூச்சிய விவகாரம் குறித்து பல கட்டங்களில் பேச்சுவார்த்தைகள் நடந்தாலும், உருப்படியாக எதையும் சாதிக்கவில்லை. எந்த ஒரு சமரச ஒப்பந்தமும் மீண்டும் கேமர் ரூஜ் செம்படையினர் அதிகாரத்துக்கு வருவதற்கு சாதகமாகவே அமையும் என்பதாலேயே கம்யூனிச எதிர்ப்பு வெறிபிடித்த எல்லா ஏகாதிபத்தியங்களும் அதன் சார்பு நாடுகளும் எந்தத் தீர்வுக்கும் உடன்படாமல் கம்பூச்சிய விவகாரத்தை இழுத்தடித்து வந்தன.

இதற்கிடையே தோல்வியாலும், அவமானத்தாலும், மீள முடியாத் நெருக்கடியாலும், ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தத்தாலும் தாக்குப் பிடிக்க முடியாமல் வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்கள் 1987 முதலாக கட்டம் கட்டமாக தமது படைகளை விலக்கிக் கொண்டு புறமுதுகிட்டு ஓடத் தொடங்கினர். அதன் தொடர்ச்சியாக, செப்டம்பர் மாத இறுதிக்குள் தமது கூலிப்படைகள் அனைத்தையும் விலக்கிக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளனர்.

ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறிய பிறகு கம்பூச்சியாவை ஆள்வது யார் என்ற பிரச்சினை இப்போது முன்னணிக்கு வந்துள்ளது. கம்பூச்சிய ஆட்சியதிகாரத்தில் தாம் ஆதரிக்கும் குழுக்களுக்கு கூடுதல் பங்கு கோரி பேரம் நடத்தும் நோக்கத்துடன் தெற்காசிய கூட்டமைப்பின் 6 நாடுகளும், அமெரிக்கா, ரஷியா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், கனடா, ஆஸ்திரேலியா, ஜிம்பாப்வே, வியட்நாம், லாவோஸ், இந்தியா, கம்பூச்சியாவின் பொம்மை ஆட்சியாளர்கள் மற்றும் போராளி குழுக்கள் உள்ளிட்ட உயர்மட்ட சமரச பேச்சுவார்த்தை ஆகஸ்ட் முதலாக ஐ.நா. மேற்பார்வையில் பாரீசில் நடந்து வருகிறது.

தேசியவாதிகளான சிகானுக், சோன்சான் ஆகியோர் தலைமையிலான குழுக்களை அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் ஆதரிக்கின்றன. அதிகாரத்திற்கான பேரத்தில் இவர்களுக்கு கூடுதல் பங்கு தரப்பட

தாய்லாந்து எல்லையிலுள்ள முகாமில் அல்லலுறும் வியட்நாமிய அகதிகள்



வேண்டுமென்பதற்காக, ஒப்பீட்டளவில் கேமர் ரூஜ் படைகளுக்கு இணையான அளவுக்கு படைபலம் கொண்டவர்கள் என்பதைக் காட்டுவதற்காக, இப்போது அமெரிக்கா, தாய்லாந்து மூலமாக இவர்களுக்கு அவசரமாக ஆயுத உதவி அளித்து வருகிறது. மறுபுறம் கம்பூச்சிய பொம்மை அரசின் பிரதமர் ஹன்சென் "கேமர் ரூஜ் தரப்பினருக்கு அதிகாரத்தில் கூடுதல் பங்கு கொடுத்தால் அது நாட்டை மீண்டும் பிணக் காடாக்கி விடும்" என்று பீதியில் புலம்புகிறார். அமெரிக்க ஏகாதிபத்தியமாகட்டும், ரஷ்ய ஏகாதிபத்தியமாகட்டும் இரண்டுமே மீண்டும் கேமர் ரூஜ் செம்படையினரின் ஆட்சி ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் குறியாக இருக்கின்றனர். எனவேதான் வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்களை விட போல் பாட்டின் ஆட்சி கொடூரமானது என்று சரஞ்சரமாக அவதூறுகளை வாரி இறைக்கின்றனர்.

இந்நிலையில் சீனா மட்டுமே கேமர் ரூஜ் இயக்கத்தை ஆதரிக்கிறது. இந்த ஆதரவுகூட சந்தர்ப்பவாதமானது தான். சீனாவில் அண்மையில் முதலாளித்துவ ஆட்சி முறையைக் கோரி மாணவர்கள் நடத்திய 'ஜனநாயகத்துக்கான' போராட்டத்தை டெங் திரிபுவாத கும்பல் அடக்கி ஒடுக்கியதால், மேலை ஏகாதிபத்தியங்கள் சீனாவுடனான தேனிலவை முறித்துக் கொண்டு சில பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன. எனவே அவற்றின் நிர்பந்தங்களுக்கு எதிரான துருப்புச் சீட்டாக கேமர் ரூஜ் ஆதரவு நிலையை சீனா எடுத்துள்ளது.

வியட்நாமிய ஆக்கிரமிப்புக்கு எதிரான சக்திகளின் ஐக்கிய முன்னணியின் தலைவராக உள்ள சிகானுக் மற்றும் சோன்சான் ஆகியோர் ஐக்கிய முன்னணியையே சிதைக்குமளவுக்கு, ஏகாதிபத்தியங்கள் தயாரித்துள்ள சமரசத் திட்டத்தை ஏற்கும் நிலையில் உள்ளனர். 1987 முதலாக வியட்நாமிய படைகள் விலகத் தொடங்கியதும், கம்பூச்சிய பொம்மை அரசின் பிரதமர் ஹன்சென்னுடன் ஐக்கிய முன்னணியின் தலைவர் என்ற முறையில் சிகானுக் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்திய பல சந்தர்ப்பங்களில், தன்னிச்சையாக முடிவெடுத்து ஐக்கிய முன்னணியின் நலன்களுக்குத் துரோகம் இழைத்துள்ளார். இவற்றை சுட்டிக்காட்டி விமர்சித்து வந்த கேமர் ரூஜ் இயக்கத்தினர் அதே சமயம், வியட்நாமிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி சிதைந்து விடாமல் கட்டிக் காத்து வந்தனர்.

கம்பூச்சியாவில் போரை முடிவுக்குக் கொண்டுவருவது; படை நடமாட்டத்திற்குத் தடை விதிப்பது; வியட்நாமிய எதிர்ப்பு குழுக்களுக்கு அன்னிய நாடுகள் அளித்துவரும் ஆயுத உதவியை நிறுத்துவது; போராளி குழுக்களது ஐக்கிய முன்னணியின் கீழ் இடைக்கால அரசாங்கத்தை நிறுவி ஐ.நா. மேற்பார்வையில் தேர்தல் நடத்துவது என்ற ஐக்கிய முன்னணியின் திட்டத்திற்கு மாறாக, வியட்நாமிய அடிவருடி ஹன்சென்னின் பொம்மை அரசையும் இடைக்கால அரசாங்கத்தில் பங்கேற்கச் செய்வது என்ற ரஷ்ய, அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் திட்டத்தை சிகானுக் ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால் "எந்த அடிப்படையும் இல்லாத துரோகிகளின் பொம்மை அரசை இடைக்

படிப்பகம்

www.padippakam.com

கால அரசாங்கத்தில் பங்கேற்க அனுமதிக்கக் கூடாது'' என்று கேமர் ரூஜ் இயக்கத்தினர் எச்சரித்துள்ளனர். இருப்பினும், தேசிய நலன்களை முற்றாக அடகு வைத்துவிட்டு அதிகாரத்தைச் சுவைக்கத் துடிக்கும் சிகானுக்கும் சோன்சானும், ''இந்த திட்டத்தை கேமர் ரூஜ் ஏற்காவிட்டால் அவர்கள் தனிமைப்பட்டுப் போவார்கள்'' என்று பீதியூட்டுகின்றனர்.

அதாவது, வியட்நாமிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியைச் சிதைப்பது, துரோகிகளுடன் கூட்டுச் சேர்ந்து அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொண்டு கேமர் ரூஜ் இயக்கத்தைத் தனிமைப்படுத்தி தாக்குவது என்ற நாசகார திட்டம் தான் இது. இதன் விளைவாக கம்பூச்சியாவில் மீண்டும் ரத்தக் களறி தான் ஏற்படும். அப்படி நிகழ்ந்தாலும் பரவாயில்லை; கம்யூனிஸ்டுகள் மீண்டும் அதிகாரத்திற்கு வந்துவிடக் கூடாது என்பதில்தான் தேசியவாதிகள் குறியாக இருக்கின்றனர். தேசிய முதலாளிகளும், குட்டி முதலாளிகளும் தேசிய விடுதலை இயக்கத்தில் பங்கேற்றாலும் தமது வர்க்கத் தன்மையின் காரணமாக ஊசலாடுவர்; எதிரியுடன் சேர்ந்து துரோக மிழைப்பர்; தரகு முதலாளிகளாக சீரழிந்து நாட்டைக் காட்டிக் கொடுப்பர் என்ற வரலாற்று உண்மையை மீண்டுமொரு முறை நிரூபித்துக் காட்டியுள்ளது கம்பூச்சிய விவகாரம்.



ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக விடாப்பிடியாகப் போராடிவரும் கேமர்ரூஜ் கொரில்லாக்கள்

''பாரீஸ் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெற்று இடைக்கால அரசு நிறுவப்பட்ட பிறகு அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்றுவோம். செந்நிறத்தில் உள்ள தேசியக் கொடியை சிவப்பும், நீலமும் கொண்டதாக மாற்றுவோம். புத்த மதத்தை அரச மதமாக அறிவிப்போம். கொலை பாதக போல்பாட்டும் அவரது சகாக்களும் தலைநகருக்குள் நுழைய தடைவிதிப்போம். நாலு சக்கர வண்டி எனும் இடைக்கால கூட்டணி அரசில் முன்னிரு சக்கரங்களாக நாங்கள்தான் உள்ளோம். பின்னிரு சக்கரங்களான கேமர் ரூஜும் வியட்நாமிய ஆதரவு ஹன்சென் அரசும் எங்களைத் தொடர்ந்து தான் வரவேண்டும்'' என்று கொக்கரிக்கின்றனர் சிகானுக்கும், சோன்சானும். அவர்கள் முன் சக்கரங்களாக இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் குதிரைக்கு முன்னே வண்டியை நிறுத்தும் இந்தக் கோமாளிகளின் புனிதப் பயணம், கம்பூச்சியாவை மீண்டும் ஆதிக்கவாதிகளுக்கு அடிமைப் படுத்துவதில் கொண்டு போய் நிறுத்தும் என்பதில் ஐயமில்லை.

கம்பூச்சிய விடுதலையிலும், சமாதானத்திலும் அக்கறையுடன் போராடி வரும் நாட்டுப் பற்று கொண்டோரும், கேமர் ரூஜ் செம்படையினரும் இதை ஒருக்காலும் அனுமதிக்கப் போவதில்லை. வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போர் இனி துரோகிகளுக்கு எதிரானதாகத் திரும்பவே செய்யும். பாரீஸ் பேச்சு வார்த்தைகளின் முடிவு என்னவாக இருந்தாலும், துரோகிகளுக்கும், ஆதிக்க வாதிகளுக்கும் எதிராக கம்பூச்சியாவின் தலைவிதியை அந்நாட்டு உழைக்கும் மக்களும், அவர்களின் சேவகர்களும் தலைவர்களுமான கேமர் ரூஜ் இயக்கத்தினருமே இறுதியாகத் தீர்மானிப்பார்கள்.

● பாலன்

---

## *சங்கராச்சாரி சாமியார் ஆனது எங்கே?*
## *இந்துவெறி ஆட்சியாளர்களின் மயிர்பிளக்கும் வாதம்!*

இந்து மதத்தை நிறுவிய ஆதிசங்கரர் எங்கே சன்னியாசம் பெற்றார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர் அங்கலேஷ்வர் அருகேதான் சன்னியாசம் பெற்றார் என்று அறுதியிடுகிறார் காஞ்சி மடத்தின் ஓடுகாலி சங்கராச்சாரியான ஜெயேந்திர சரஸ்வதி. இல்லை! நர்மதை ஆற்றின் அருகே நரசிங்கபூர் மாவட்டத்திலுள்ள குகையில்தான் சன்னியாசம் பெற்றார் என்று வாதிடுகிறார், துவாரகா மடத்து சங்கராச்சாரியான சொருபானந்தா. இதையொட்டி அவர்களிடையே மயிர்பிளக்கும் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. இருந்தாலும் இது நாட்டின் தலையாய பிரச்சினையாயிற்றே! உடனே இந்தியக் குடியரசுத் தலைவர்கள் ஆளுக்கொரு பக்கமாக நின்று ஆராய்ச்சி செய்தார்கள். ஓடுகாலி சங்கராச்சாரியின் சீடரான வெங்கட்ராமன் கடந்த ஜூன் மாதத்தில் அங்கலேஷ்வருக்கு தீர்த்த யாத்திரை போய், இங்கேதான் ஆதிசங்கரர் சன்னியாசம் பெற்றார் என்று வாதிட்டார். இல்லை; இல்லை! நரசிங்கபூர் பகுதியில்தான் அவர் சன்னியாசம் பெற்றார் என்று துவாரகா மடத்து சங்கராச்சாரியின் சீடரான சங்கர்தாயாள் சர்மா எதிர்வாதம் செய்தார். இந்து மதப்பித்தர்களும் பண்டாரங்களின் பக்தர்களுமான இந்தியக்குடியரசுத்தலைவர்களிடையே இது பற்றி விவாதம் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ரோம் நகரம் பற்றி எரிந்த போது நீரோ மன்னன் வயலின் வாசித்தானாம். இங்கே வடமாநிலங்களில் வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்து, லட்சக்கணக்கான மக்கள் நிவாரண உதவியின்றி பரிதவிக்கும் போது, இந்திய மக்கள் விரோத குடியரசுத் தலைவர்கள் முட்டையில் மயிர் பிடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்து வெறியும் பாசிச வெறியும் கொண்ட மக்கள் விரோதிகளை இன்னமும் அதிகாரத்தில் நீடிக்க விட்டால் இதையும் செய்வார்கள்; இன்னமும் செய்வார்கள்.



படிப்பகம்

# போலீசு – யாருக்காக?

உத்திரபிரதேச மாநிலம்; ஜனசந்தடிமிக்க குர்கான் ரயில் நிலையம். முன்னா -அலகாபாத்திலிருந்து 'டிக்கெட்' எடுக்காமல் ரயிலில் பயணம் செய்துவிட்டவர்.

உத்திரப்பிரதேச போலீசு இவரைப் பிடித்து ரயில் நிலைய 'பெஞ்சு'டன் இப்படி பிணைத்து வைத்துவிட்டது. ஒருநாள், இரண்டு நாள் அல்ல. கடந்த 40 நாட்களாக இப்படி விலங்கால் 'பெஞ்சு'டன் பூட்டப்பட்டிருக்கிறார். இவர் தற்செயலாக 'டிக்கெட்' எடுக்கவில்லையா; பஞ்சம் பிழைக்க நகரத்திற்கு ஓடிவந்தவரா; அல்லது பிச்சையெடுத்து பிழைப்பவரா? "அதைப் பற்றியெல்லாம் எங்களுக்கு கவலையில்லை; அவரிடம் டிக்கெட் இல்லை; தண்டித்திருக்கிறோம்" என்று கொக்கரிக்கிறது போலீசு! சரி! அந்தக் குற்றத்திற்கு இப்படித்தான் தண்டிக்க வேண்டும் என்று எந்த சட்டத்தில் எழுதி வைத்திருக்கிறது?

"சட்டமாவது! வெங்காயமாவது! இது எங்கள் சட்டம்" என்று தனது அதிகாரத்தை காண்பிக்கிறது போலீசு. கைகட்டி ரசிக்கிறது, நீதிமன்றம். இவர் மீது குற்றப்பத்திரிக்கை. கடந்த 40 நாட்களாக அதிகார வர்க்கத்தின் சிவப்பு நாடாவுக்குள் தூங்கிக் கொண்டிருக்கிறது. இவரைப் போலவே, இன்னொருவரும், ஒரு குழந்தையும் கூட இவ்வாறு விலங்கிடப்பட்டு 'பெஞ்சு'டன் பூட்டப்பட்டிருக்கிறார்களாம். பார்த்த பத்திரிக்கையாளர்கள் சொல்கிறார்கள்.

குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்தால், குறிப்பிட்ட நாட்களுக்குள் விசாரிக்க வேண்டும்! நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்கிறது இந்திய குற்றவியல் சட்டம்! இவையெல்லாம் குற்றவாளிகளுக்கு விசாரணை காலத்தில் வழங்கப்பட வேண்டிய சட்டப்படியான, சாதாரண உரிமைகள் என்று அது வரையறுக்கிறது. ஆனால் ரகசியமாக அல்ல; பகிரங்கமாகவே சட்டத்தை காலில் போட்டு மிதிக்கிறது, போலீசு, அதிகார வர்க்கம், நீதிமன்றம். இந்திய அரசியல் சட்டத்தில் கனத்த புத்தகத்திலிருந்து, அம்மாதிரியான விதிகள் வெளியே வந்து, சட்டத்தை மீறிய போலீசு கும்பலை இதுநாள் வரையில் தண்டிக்கவில்லை. இதற்கு முன் அவ்வாறு தண்டிக்கப்பட்டதாக வரலாறும் இல்லை.


காங்கிரசு மாநாடு என்ற கூத்தை கடந்த வருடம் ஏப்ரல் மாதம், நாம் கண்ணெதிரே சென்னையில் பார்க்கவில்லையா? பிரதமரும், அவரது பரிவாரங்களும் மாநாடு நடக்கும் மறைமலையடிகள் நகருக்கு போக வசதிச் செய்யப்பட்ட ஒரு தனி 'ஓசி' ரயில்!

அதற்கு முன்னோட்டமாக வெறுமனே ஆட்கள் இல்லாமல் ஒரு வெறும் ரயில்!

மாநாட்டுக்கு ஆட்களைப் பிடித்துப் போக, தமிழ் நாட்டிலிருந்து பல 'ஓசி' ரயில், ரகசியமாக அல்ல பகிரங்கமாகத் தான். இவ்வளவு திருட்டுத்தனங்களையும், போலீசு அதிகார வர்க்கத்தின் துணையோடு அரங்கேற்றியது, காங்கிரசு கும்பல். யாரோ ஒரு



www.padippakam.com
படிப்பகம்



ளது! இந்த அதிகார வர்க்கமும், நீதி மன்றமும் போலீசும் அப்போதெல்லாம் வாயில் விரலை வைத்துக் கொண்டுதானே இருந்தது?

இந்தியாவில், விதிவிலக்காக பீகார் மாநிலத்தில் மட்டும்தான் "ஆட்சி எந்திரமே முற்றும் முழுக்க கிரிமினல்கள் கூடாரமாக" குறிப்பாக, போலீசு துறையில் அவ்வாறு சில நபர்கள் சீரழிந்திருப்பதாக பசப்பித் திரிந்தன முதலாளித்துவ பத்திரிக்கைகள்.

இல்லை. போலீசின் இவ்வாறான கொடுமை "சுதந்திர" இந்தியா முழுக்க விரவிக்கிடக்கிறது. பகல்பூர் குற்றவாளிகள் கண்கள் பிடுங்கப்பட்டது முதல், அன்றாட போலசு நிலைய சித்திரவதைகள் வரை இது தொடர்கிறது. அதிலொன்றுதான் இந்த குரூரம்.

மனநோயாளியைத் தான் இவ்வாறு பிணைத்து வைத்திருப்பதை நாம் இதுவரை பார்த்திருக்கிறோம். சிகிச்சையளிக்க அந்நோயாளியே இவ்வாறு விலங்கிட்டு பூட்டி வைத்திருப்பதை உரிய சிகிச்சை முறையாக நாம் ஏற்பதில்லை. ஆனால், 100 ரூபாய் அபராதம் அல்லது ஒரு வாரம் சிறை தண்டனை என்று தாங்களே விலை நிர்ணயித்திருக்கும் ஒரு சிறு குற்றத்திற்கு போலீசு மிருகங்கள் சுயநினைவு உள்ள ஒரு மனிதனை இவ்வாறு அவமானப்படுத்துகிறது. இதன் மூலம் போலீசு கும்பல் தாங்கள் உண்மையில் யார் என்பதை நிரூபித்திருக்கிறது. வரைமுறையற்று அதிகார போதை தலைக்கேறி ஊர்மேயும் அதிகார பைத்தியங்கள் தான், போலீசு. இனிமேலும் இக்கும்பலிடம் நாம் அதிகாரத்தை விட்டுவைப்பது நமக்கு நாமே கழுத்தை அறுத்துக் கொள்வதற்கு சமம். இந்த அதிகார பைத்தியங்களைச் சிறைப்பிடித்து அதிகாரத்தைப் பிடுங்கிக் கொண்டு, விலங்கிட்டு தண்டிக்காதவரை, நாம் இந்த பைத்தியங்களிடமிருந்து தப்பிக்க முடியாது என்பதைத் தான் இச்சம்பவம் நிரூபிக்கிறது.

— பச்சையப்பன்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# விவசாய வளர்ச்சி

# - உண்மை நிலை

ஒட்டகத்துக்கு தொட்ட இடமெல்லாம் கோணல் என்பது போல இந்திய அரசின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களும் கோணல் மாணலாக, தாறுமாறாகத் தான் இருக்கிறது. குறிப்பாக, நாட்டின் முதுகெலும்பான விவசாயத் துறையில் அதன் திட்டங்களும் கொள்கைகளும் அராஜகமானதாக இருப்பதால், நாட்டின் பெரும் பகுதிகளில் விவசாய உற்பத்தி பாழடிக்கப்பட்டு நாடே பாலைவனமாகும் அபாயத்தில் உள்ளது.

ஒரிசாவின் கலகாந்தி, கோரபுட் மாவட்டங்களில் நான்கு ஆண்டுகளுக்கு முன் பரவிய வறட்சி - பஞ்சம் - பட்டினிச் சாவுகள் இன்னமும் தீராத வியாதியாக தொடர்ந்து நீடிக்கிறது. ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் தொடர்ந்து நான்காண்டுகளாக வறட்சி நீடிக்கிறது. தமிழ்நாடு, குஜராத் உட்பட எட்டு மாநிலங்களில் கடந்த மூன்றாண்டுகளாக வறட்சி தொடர்கிறது. அசாம், பீகார், மே.வங்கம் ஆகிய மாநிலங்களில் வெள்ளத்தில் மூழ்கி ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் மக்கள் பலியாகின்றனர். சுருக்கமாகச் சொன்னால் வறட்சி - வெள்ளம் - பஞ்சம் - பட்டினிச் சாவுகள் விதிவிலக்காக வந்து போவன அல்ல; இவையே வழக்கமான வியாதியாகி விட்டன.

அதே சமயம், நாட்டின் திட்டுத் திட்டான பகுதிகளில் மட்டும் வளமை கொழிக்கிறது. விவசாய உற்பத்தி பெருகுகிறது. நவீன உரம், பூச்சி மருந்துகள், டிராக்டர்கள், பம்புசெட்டுகள் என்று நவீன விவசாய முறைகள் புகுத்தப்பட்டு அப்பகுதிகள் பாலைவனச் சோலைகளாகப் பூத்துக்குலுங்குகின்றன. நாட்டின் ஆகப் பெரும்பான்மையான பகுதிகளில் வறுமையும் பட்டினிச் சாவுகளும் கொத்தடிமைத்தனமும் நீடிக்கும் அதே சமயம் பஞ்சாப், அரியானா, உத்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் வளமை கொழிக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி அதிகமாகக் கிடைக்கிறது.

விவசாயத்தில் மலைக்கும் மடுவுக்குமான இந்த ஏற்றத் தாழ்வு ஏன்? இந்த அராஜகத்துக்கும் சீரழிவுக்கும், சோசலிச சவடால் அடித்து நாட்டைப் படுகுழியில் தள்ளிய நேரு பரம்பரையே காரணம். 60களில் 'அன்னை' இந்திரா நிலப்பிரபுக்களையும் பணக்கார விவசாயிகளையும் கொழுக்க வைப்பதற்கும், அமெரிக்காவில் தேங்கியிருந்த உரம், பூச்சி மருந்துகள், விவசாயக் கருவிகள் முதலானவற்றுக்கு இந்தியாவில் சந்தை ஏற்படுத்துவதற்கும் 'பசுமைப் புரட்சி' திட்டத்தைக் கொண்டு வந்தார். இதன்படி நாட்டின் மேற்பரப்பு பாசன வசதிமிக்க 42 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நவீன விவசாய முறைகள் புகுத்தப்பட்டன. அப்பகுதிகளில் உற்பத்தி பெருகியதோடு நிலப்பிரபுக்களும் பணக்கார விவசாயிகளும் கொழுத்தனர். நவீன உரம் பூச்சி மருந்துகள் இல்லாமல் பயிர்கள் உயிர் வாழவே முடியாது என்ற அளவுக்கு நிலைமை மாறி விவசாயத்தில் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கமும் வளர்ந்தது. இயல்பான சீரான உணவு தானிய உற்பத்திக்குப் பதிலாக ஏகாதிபத்தியங்களுக்கு கச்சாப் பொருளாக எது தேவையோ அத்தகைய பயிர்கள் திணிக்கப்பட்டு, ஏகாதிபத்தியங்களின் உற்பத்தி பின்னிலமாக இந்தியா மாற்றப்பட்டது.

'பசுமைப் புரட்சி'யைத் தொடர்ந்த ஆண்டுகளில், நவீன விவசாயம் புகுத்தப்பட்ட பகுதிகளைக் குறிவைத்தே விவசாயத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. நீர்ப்பாசன வசதி, வடிகால் வசதி, அணைகள், நீர்த்தேக்கங்கள், மின்சார வசதி, சாலை போக்குவரத்து - சந்தை வசதிகள் முதலானவற்றோடு சலுகைகள் மானியங்கள் கொட்டப்படுகின்றன. அதேசமயம் நாட்டின் பெரும்பான்மையான பகுதிகளில் விவசாயம் அறவே புறக்கணிக்கப்பட்டு பின்னுக்குத் தள்ளப்படுகிறது. அனைத்து உணவு தானியங்களையும் விட, குறிப்பாக நவீன விவசாய முறைகள் புகுத்தப்பட்ட பகுதிகளில் எந்த பயிர் அதிகமாக விளைகிறதோ அந்தப் பயிர்களுக்கான ஆராய்ச்சிப் பண்ணைகளும் பயிற்சிகளும் முக்கியத்துவம் அளித்து ஊக்குவிக்கப்படுகிறது. குறிப்பாக, நெல், கோதுமை மற்றும் பணப் பயிர்களுக்கான ஆராய்ச்சிகள் வளர்க்கப்படும் அதே சமயம் வறட்சியை ஓரளவுக்குத் தாக்குப் பிடித்து வளரக் கூடிய பருப்பு, பயிறு வகைகளுக்கான ஆராய்ச்சிகள் புறக்கணிக்கப்படுகின்றன.



பசுமைப் புரட்சியின் காரணமாக குறிப்பாக, கோதுமை லாபகரமான பயிராக மாறியது. '60களில் மொத்த விளை நிலப்பரப்பில் 9% ஆக இருந்த கோதுமை பயிரிடப்படும் நிலப்பரப்பு, 70களில் 12.2% ஆக உயர்ந்தது. '80களில் 13.9% ஆக உயர்ந்துவிட்டது. அதிலும் குறிப்பாக அரியானா, பஞ்சாப், உ.பி. ஆகிய மாநிலங்களில் மட்டும் தான் இந்த மாற்றம் ஏற்பட்டது. இம்மாநிலங்களில் மட்டும் 60களில் 16.7% ஆக இருந்த கோதுமை பயிரிடும் நிலப்பரப்பு 80களின் துவக்கத்தில் 31.4% ஆக உயர்ந்தது.


கோதுமையை ஒப்பிடும் போது, நாட்டின் மொத்த விளை நிலத்தில் கால் பங்குக்கும் மேலான பரப்பில் நெல் பயிரிடப்படுகிறது. ஆனால் பசுமைப் புரட்சி புகுத்தப்பட்ட பின்னரும் கூட நெல் பயிரிடும் நிலப்பரப்பு உயரவில்லை. உரிய நீர்ப்பாசன வசதியின்மையால் அது எதிர்விளைவுகளையே ஏற்படுத்தியது. உதாரணமாக, ஒரிசாவில் 60களில் 73.7% ஆக இருந்த நெல் பயிரிடும் நிலப்பரப்பு 80களின் துவக்கத்தில் 52.8% ஆகச் சுருங்கியது.

அதே போல நாடு தழுவிய அளவில் பருப்பு பயிரிடும் மொத்த நிலப்பரப்பு விகிதம் 6.1%லிருந்து 4.5% ஆகக் குறைந்தது. குறிப்பாக அரியானாவில் மொத்த பயிரிடப்படும் நிலப்பரப்பில் 33.5% ஆக இருந்த பயிறுவகைகள் விளையும் நிலப்பரப்பு கடந்த பத்தாண்டுகளில் 15.1% ஆகச் சுருங்கிவிட்டது. அந்த இடத்தை கோதுமை பிடித்துக் கொண்டது. பயிறு வகை தானியங்களுக்கு புதிய தொழில் நுட்பம் - ஆராய்ச்சி, நவீன முறைகள் முதலானவை புறக்கணிக்கப்பட்டதாலேயே இந்த எதிர் விளைவு ஏற்பட்டது.

பசுமைப் புரட்சி புகுத்தப்படுவதற்கு முன்னர் வடக்கு - மேற்கு மாநிலங்களை விட கிழக்கு மற்றும் தென் மாநிலங்களில் தான் விவசாய உற்பத்தி அதிகமாக இருந்தது. ஆனால் எழுபதுகளின் துவக்கத்தில் இந்த நிலைமை தலைகீழாக மாறியது. நவீன பாசன வசதி, உரம், பூச்சி மருந்துகள், சலுகைகள், மானியங்களைக் கொண்ட நவீன விவசாய முறைகளின் காரணமாக பஞ்சாப், அரியானா, உ.பி. ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய வடக்கு - மேற்கு பகுதியில் உற்பத்தி பெருகியது. கிழக்கு - தெற்கு மாநிலங்களில் உற்பத்தி குறைந்து கொண்டே போனது. உதாரணமாக, தமிழகத்தில் 1960 முதல் 70 வரையிலான காலத்தைவிட 70லிருந்து 80 வரையிலான காலகட்டத்தில் உற்பத்தி வளர்ச்சி விகிதம் 2.55%லிருந்து

படிப்பகம்

www.padippakam.com



0.9% ஆக வீழ்ச்சி அடைந்தது. இதே காலத்தில் நாடு தழுவிய அளவில் மொத்த உற்பத்தியில் மூன்றாவது இடத்தை வகித்த மே.வங்கம் 7வது இடத்துக்கு சரிந்தது. அதே சமயம் 5வது இடத்திலிருந்த பஞ்சாப் முதலிடத்துக்குத் தாவியது.

பரங்கியர்கள் நம்மை அடக்கியாண்ட போது தமது கச்சாப் பொருள் தேவைக்கான உற்பத்திக்கே முன்னுரிமை கொடுத்தனர். நாட்டின் பரந்துபட்ட விவசாயத்தைப் புறக்கணித்துப் பாழாக்கினர். காபி, தேயிலை, புகையிலை, இண்டிகோ(நீலம் - அவுரி) முதலான பணப் பயிர்களின் உற்பத்தி பெருகிய அதேசமயம் நாட்டின் பெரும் பகுதியில் பஞ்சம் தலைவிரித்தாடி கொள்ளை நோய்க்கு மக்கள் பலியானார்கள். அதே போலத்தான் 'சுதந்திர' இந்தியாவின் ஆட்சியாளர்களின் விவசாயத் திட்டங்களும் அமைந்துள்ளன. நாட்டின் பெரும் பகுதியில் விவசாயம் புறக்கணிக்கப்பட்டு விவசாயிகள் போண்டியாகும் அதே சமயம் வறுமைக் கடலின் நடுவே சில தீவுகள் மட்டும் வளம் கொழிக்கின்றன. நவீன விவசாயம் புகுத்தப்பட்ட மாநிலங்களில் கூட ஒருசில மாவட்டங்களில் மட்டும் தான் இந்த நிலை உள்ளது. பெரும் பகுதிகளில் வறட்சி தாண்டவமாடுகிறது. பஞ்சாபில் லூதியானா, ஆந்திராவில் கோதாவரி, மே.வங்கத்தில் மித்னாபூர், கேரளத்தில் பாலக்காடு என்று திட்டு திட்டான பகுதிகளில் மட்டும் தான் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆந்திராவில் அதிலாபாத், கடப்பா, கர்நூல் போன்ற மாவட்டங்களில் வறட்சியும் பட்டினிச் சாவுகளும் தொடரும் அதே நேரத்தில் கிருஷ்ணா, கோதாவரி, நெல்லூர், போன்ற மாவட்டங்களில் உற்பத்தி குவிகிறது. பஞ்சாபில் ஒரு பகுதியில் வளம் கொழிக்கும் போது மற்றொரு பகுதியில் நிலப்பரப்பு விவசாயத்துக்குப் பயனற்று தரிசு நிலமாகக் கிடக்கிறது.

இந்த அதிர்ச்சியூட்டும் உண்மைகளை மூடி மறைத்துவிட்டு நாட்டின் விவசாய உற்பத்தி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி விட்டதாக ஆட்சியாளர்கள் தம்பட்டமடித்து ஏய்க்கின்றனர். ''உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து விட்டோம்; ஏற்றுமதி செய்யுமளவுக்கு முன்னேறி விட்டோம். இலக்கை விஞ்சிய உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளோம்'' என்று ஆட்சியாளர்களும் பத்திரிக்கைகளும் வானொலியும் கூப்பாடு போடுகின்றன.

ஆனால் உண்மையில் பல மாநிலங்களில் உற்பத்தி வளர்ச்சி விகிதம் குறைந்து அதளபாதாளத்துக்குப் போயுள்ளது. தமிழகத்தில் 1973லிருந்து 83 முடிய உள்ள பத்தாண்டுகளில் சராசரி வளர்ச்சி விகிதம் குறைந்து - 0.92% ஆக சுருங்கிப் போனது. அதேசமயம் ஆந்திராவில் இதே காலகட்டத்தில் 3.65% வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இப்படி பின்னேற்றத்தையும் முன்னேற்றத்தையும் சேர்த்துக் கணக்கிட்டு சராசரியாக 1.55% வளர்ச்சி தென் மாநிலங்களில் ஏற்பட்டுள்ளதாக புள்ளிவிவர சதவிகித கணக்கு காட்டி சதிராடுகின்றனர். இதேபோலத்தான் அகில இந்திய அளவில் பெரும்பான்மையான மாநிலங்களின் விவசாய உற்பத்தி வளர்ச்சி விகிதம் பின்னோக்கிச் செல்லும் போது, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில மாநிலங்களின் வளர்ச்சியைக் காட்டி சராசரியாக கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் விவசாய உற்பத்தி 2.42% உயர்ந்து விட்டது என்று ஏய்க்கின்றனர்.

இதேபோலத்தான் நாடு தழுவிய அளவில் கடந்த பத்தாண்டுகளில் விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி அதிகமாகக் கிடைத்துள்ளது என்று மோசடி செய்கின்றனர். நவீன விவசாய உற்பத்தி முறைகள் புகுத்தப்பட்டு திட்டுத்திட்டாக வெற்றி கண்டுள்ள பகுதிகளில் உற்பத்தி பெருகுகிறது. அதாவது கூலித் தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் பெருகுகிறது. எனவே இப்பகுதிகளில் ஒப்பீட்டளவில் கூலி அதிகமாகத் தரப்படுகிறது. அதேசமயம் நாட்டின் பெரும் பகுதிகளில் விவசாயம் புறக்கணிக்கப்பட்டு வருவதால் வறட்சியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் போண்டியாகிறார்கள். அற்பக் கூலிகூட கிடைக்காமல் கொத்தடிமைகளாகிறார்கள். ஆனால் அனைத்தையும் சேர்த்து சராசரியாக கணக்கு போட்டு மொத்தத்தில் கூலி அதிகம் வழங்கப்படுவதாக காதில் பூ சுற்றுகின்றனர்.

தேசத்தின் பெரும் பகுதியில் விவசாயம் பாழடிக்கப்பட்டு திட்டுத் திட்டான ஒரு சில பகுதிகளில் மட்டும் வளமை கொழிக்கும் தாறுமாறான அராஜகமான விவசாயத் திட்டங்களைப் பற்றியும் அதனால் ஏற்படும் விபரீதமான விளைவுகளைப் பற்றியும் ஆட்சியாளர்கள் எள்ளளவும் கவலைப்படுவதில்லை. மாறாக, தமது கவர்ச்சித்திட்ட நோக்கங்களுக்குக் கிடைத்த வாய்ப்பாக எண்ணி பூரிப்படைகின்றனர். அரசின் செல்லப் பிள்ளைகளான - நவீன விவசாயம் புகுத்தப்பட்ட திட்டுத் திட்டான பகுதிகளில் உற்பத்தி பெருகுகிறது; அதன் விளைவாக அரசு கிடங்குகள் நிரம்பி வழிகின்றன.

ஆனால் நாட்டின் பெரும் பகுதியில் விவசாயம் புறக்கணிக்கப்பட்டு மக்களிடம் வாங்கும் சக்தி இல்லாததால் அந்த உணவு தானியச் சேமிப்பும் பாழாகிறது. உரிய பராமரிப்பின்மையால் அழுகி, நாறி புழுப்புழுத்துப் போகின்றது. நாற்றமடிக்கும் கோதுமையையும், புழுப்புழுத்த அரிசியையும் வறட்சி நிவாரணப் பணி என்ற பெயரில் கொண்டு வந்து மக்களிடம் விநியோகித்து ஓட்டுப் பொறுக்கவும் தமது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளவும் ஆட்சியாளர்கள் கேடாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்தியாவை ஓட்டச் சுரண்டும் ஏகாதிபத்தியங்கள் தமது நாட்டில் மிதமிஞ்சி தேங்கி அழுகும் உணவு தானியங்களைக் கொடுத்து இந்தியாவுக்கு 'உதவி' செய்வதைப் போல, இலவச அரிசி, சத்துணவு, வறட்சிப் பகுதிகளில் கஞ்சித் தொட்டி அமைப்பது முதலான கவர்ச்சித் திட்டங்களுக்காக தேங்கிக் கிடந்து பாழாகும் உணவு தானியங்களை விநியோகித்து ஏழைகளின் நண்பனாக, தலைவனாக, வள்ளலாக வேடம் போடுகின்றனர்.

ஆகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள் அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் ஆளாகும் அதேசமயம், தொழிலாளி வர்க்கத்திலேயே ஒருசிறு பிரிவினருக்கு கூடுதல் சலுகைகள் கொடுத்து மேட்டுக்குடி தொழிலாளர்களாக ஆளும் வர்க்கம் மாற்றியுள்ளதைப் போலவே விவசாயத் துறையிலும் இந்த ஏற்றத் தாழ்வான அராஜகமான போக்கு அதிகரித்து வருகிறது. 'அன்னை' இந்திராவின் வாரிசு - பாசிச ராஜீவின் ஆட்சியில் குறிப்பாக, பஞ்சாபில் ''பெப்சிகோ'' குளிர்பான நிறுவனத்தின் கொள்ளைக்காகவே, நவீன விவசாய உற்பத்தி முறைகள் மேலும் திணிக்கப்பட்டு வருகின்றன. அதே சமயம் ஒரிசாவில் கடந்த நான்காண்டுகளாக நீடிக்கும் வறட்சியையும் பட்டினிச் சாவுகளையும் ஆளும் பாசிச கும்பல் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. ஒரிசாவில் தொடங்கிய இந்த நிலை இன்று நாடெங்கும் விரிவடைந்து கொண்டே போகிறது. தொடர்ந்து இதே நிலை நீடிக்குமானால் அடுத்த பத்தாண்டுகளில் நாடு பாலைவனமாக மாறும் என்று விஞ்ஞானிகளும் பொருளாதார நிபுணர்களும் எச்சரிக்கின்றனர். இப்படி விவசாயத்தைப் பாழடித்து நாட்டைப் பாலைவனமாக்கிய பெருமை நேரு - இந்திரா - ராஜீவ் பரம்பரையையே சாரும். இது அவர்களின் போலி சோசலிசக் கொள்கைகளின் நேர் விளைவே ஆகும்.

○ குமார்.

படிப்பகம்

www.padippakam.com

பம்பாய் துறைமுகத்திலிருந்து விஷவாயு ஏற்றிச்சென்ற கப்பல், அம்பலப்பட்டுப் போனதால் அவசரமாக திருப்பியழைக்கப்பட்டு விஷவாயு இறக்கப்பட்டது.



# நச்சு இரசாயன வாயு இரகசிய ஏற்றுமதி!

ஏகாதிபத்தியங்களின் உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடாக - அதன் உற்பத்திப் பின்னிலமாக இருக்கும் இந்தியா, பாசிச ராஜீவின் ஆட்சியில் இன்று மேலும் ஒருபடி முன்னேறிவிட்டது. இப்போது போர்வெறியர்களுக்குத் தேவையான கச்சாப் பொருளான நச்சு வாயுவையும் ஏற்றுமதி செய்யத் தொடங்கிவிட்டது. அரசின் ஒப்புதலுடனும் உடந்தையுடனும் நடந்து வந்த இந்த சாவு வியாபாரம் அண்மையில் அம்பலப்பட்டு உலக சமாதான நாடகமாடும் ராஜீவ் கும்பலின் முகத்தில் கரியைப் பூசியுள்ளது.

கடந்த ஜூலை மாத துவக்கத்தில் பரோடாவைச் சேர்ந்த ''ட்ரான்ஸ்பெக் இன்டஸ்ட்ரீஸ்'' என்ற நிறுவனம் 120டன் தியோனைல் குளோரைடு என்னும் இரசாயன வாயுவை பம்பாய் துறைமுகத்திலிருந்து ஷார்ஜாவுக்கு ஏற்றுமதி செய்தது. அது ஷார்ஜாவிலிருந்து ஈரானிலுள்ள மே.ஜெர்மனிக்குச் சொந்தமான ''ரெய்னிசன் கெமிக்கல்ஸ்'' என்ற மருந்தாலைக்குச் செல்வதாக இருந்தது. அங்கு ''மருந்து உற்பத்திக்குப் பதிலாக ஈரானின் பயங்கரவாத - போர்வெறி நோக்கங்களுக்கான விஷவாயுவாகப் பயன்படுத்தப்படலாம்'' என்ற சந்தேகத்தை ''நியூயார்க் டைம்ஸ்'' என்ற அமெரிக்கப் பத்திரிக்கை எழுப்பியதும், தோலுரிந்த இந்திய அரசு அந்தக் கப்பலை திருப்பியழைத்து, இரசாயன வாயுக் கலன்களை இறக்கிக் கொண்டது.

தியோனைல் குளோரைடு, பென்ஜைல் குளோரைடு, சோடியம் சயனைடு, ஹைட்ரஜன் சயனைடு - வாயில் நுழையாத இரசாயனப் பெயர்களைக் கொண்ட இவை எல்லாம் நச்சு வாயுக்கள். இவற்றை மருந்தாலைகள், இரசாயன உர ஆலைகளில் ஆக்கபூர்வமான பணிகளுக்குப் பயன்படுத்த முடியும். அதே சமயம் மனிதகுல பேரழிவிற்கான இரசாயன யுத்தத்திற்கும் பயன்படுத்த முடியும்.

திடீரென நாம் வாழும் பகுதி முழுவதும் காற்று மண்டலம் நஞ்சாகி மூச்சுத்திணறி மக்கள் அனைவரும் மாண்டு போவார்கள். இது ஒருவகை விஷவாயுத் தாக்குதல். திடீரென உடலெங்கும் அரிப்பெடுத்து கொப்புளங்கள் உண்டாகி எரிச்சலெடுக்கும். அதைத் துடைத்தால் பட்ட இடமெல்லாம் எரியும். திடீரென நீர்நிலைகள் நஞ்சாகும். பயிர்கள் அனைத்தும் கருகிப் போகும். கொள்ளை நோய் பரவும் - இத்தகைய கொடிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய மிருகத்தனமான, ஈவிரக்கமற்ற விஷவாயு யுத்தத்தை, ஏகாதிபத்தியங்களும் போர் வெறியர்களும் உலகப் போரிலிருந்து இன்று வரை நேரடியாகவும் இரகசியமாகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

பாசிச இட்லர் 4 லட்சம் யூத மக்களை ஆஷ்விட்ஸ் கொட்டடியில் பூட்டி விஷவாயு செலுத்தி மிருகத்தனமாக கொன்றான். வியட்நாமை ஆக்கிரமித்த அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்கள் அந்நாட்டு மக்கள் மீதும், பயிர்களின் மீதும் பெருமளவு விஷவாயு யுத்தத்தை நடத்தி கொலைவெறியாட்டம் போட்டனர். கடந்த பத்தாண்டுகளாகத் தொடர்ந்த ஈரான் - ஈராக் யுத்தத்தின் போது ஈராக் விஷவாயுவை ஏவி பலநூற்றுக்கணக்கான ஈரானியர்களை ஹாலப்ஜா நகரில் கொன்றொழித்தது. இப்போது ரஷ்யாவின் கொலை வெறியர்கள் சொந்த நாட்டு மக்கள் மீதே விஷவாயுவைச் செலுத்தி ஆயிரக்கணக்கான ஜார்ஜிய மக்களைக் கொன்றனர்.

இத்தகைய கொடிய இரசாயன யுத்தத்திற்குப் பயன்படும் நச்சுவாயுக்களில் ஒன்றுதான் தியோனைல் குளோரைடு. இந்த நச்சுவாயு கடந்த ஏப்ரல் மாதம் முதலாக மே.ஜெர்மனியில் தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், ஈரானிலுள்ள மே.ஜெர்மனியின் மருந்து நிறுவனம், இந்தியாவிலிருந்து இந்த வாயுவை துபாய் மூலமாக இறக்குமதி செய்ய முனைந்துள்ளது. நேரடியாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தால் விவகாரம் வெளியே தெரிந்துவிடும் என்பதால் இப்படியொரு ஏற்பாட்டைச் செய்தது. இந்தியாவும் 'நாங்கள் ஷார்ஜாவுக்குத்தான் அனுப்பினோம்; ஆனால் அவர்கள் இதை ஈரானுக்கு மறு ஏற்றுமதி செய்துவிட்டார்கள்' என்று நாடகமாட வசதியாக இருக்கும் என்பதாலேயே எழுதப்படாத இந்த ஏற்பாட்டின்படி நச்சு வாயுவை ஏற்றுமதி செய்தது.

இந்த நச்சுவாயு இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாவது இது முதன் முறையல்ல; இரகசியமாக நடப்பதுமல்ல. கடந்த பல ஆண்டுகளாக ட்ரான்ஸ்பெக் நிறுவனம் தனது ஆண்டு உற்பத்தியில் ஏறத்தாழ பாதியளவான 10,000 டன் வாயுவை ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்து வந்துள்ளது. இந்த நிறுவனம் தவிர குஜராத்தைச் சேர்ந்த மேலும் இரு நிறுவனங்கள் இந்த நச்சுவாயுவை உற்பத்தியும் ஏற்றுமதியும் செய்து வருகின்றன.

இதில் கொடுமை என்னவென்றால் அரசு வர்த்தக நிறுவனமே (STC) இவ்வாண்டு ஜனவரியில் 60 டன் நச்சுவாயுவை ஈரானுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. அது எந்த நோக்கத்துக்காக அனுப்பப்படுகிறது என்ற விபரம்கூட இரகசியமாக வைக்கப்பட்டது. ''வியாபாரத்தில் இது வழக்கமான நடைமுறைதான்'' என்று இந்த அயோக்கியத்தனத்தை நியாயப்படுத்துகிறது, ட்ரான்ஸ்பெக் நிறுவனம். இந்த வாயு எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பற்றி இந்திய அரசுக்கோ, ஏற்றுமதி செய்யும் நிறுவனத்துக்கோ எள்ள

படிப்பகம்

www.padippakam.com

ளவும் கவலையில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் பணம்! பணம்! இதை அறிந்துதான் மருந்தாலையோ, உர ஆலையோ இல்லாத சிங்கப்பூர், ஹாங்காங் முதலான நாடுகள் கூட இந்தியாவிலிருந்து இந்த நச்சு வாயுவை இறக்குமதி செய்து, அவற்றை நடுக்கடலிலேயே வேறு நாட்டுக்கு மறு ஏற்றுமதி செய்து கொள்ளையடிக்கின்றன.

ஒப்பீட்டளவில் செலவு குறைவானது, அதேசமயம் அணு ஆயுதப் போரின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்பதால் ஏகாதிபத்தியங்களும், ஏழைநாடுகளின் போர் வெறியர்களும் விஷவாயு யுத்தத்திற்கான தயாரிப்பில் இரகசியமாக ஈடுபட்டு வருகின்றனர். ஆயுத வியாபாரம், போதை மருந்து வியாபாரத்தைப் போலவே பெருமளவில் கொள்ளையடிப்பதற்கேற்ற தொழிலாக விஷவாயு உற்பத்தியும், இரகசிய ஏற்றுமதியும் வளர்ந்து விட்டது.

மேற்காசியாவில் பேட்டை ரௌடியாக வலம் வரும் இஸ்ரேலின் அணு ஆயுதத் தயாரிப்புக்கு எதிராக சிரியா நச்சு வாயு ஆயுதங்களை தயாரிக்கிறது. ஈராக் நீண்ட காலத்திற்கு முன்னரே சமாராவில் இரசாயன ஆயுத தளவாட உற்பத்தியை செய்து வருகிறது. இவை முஸ்லீம் தீவிரவாதிகளின் கையில் கிடைத்தால் நிலைமை விபரீதமாகி விடுமே என்று அமெரிக்காவும் இஸ்ரேலும் அஞ்சுகின்றன. அதிலும் குறிப்பாக இப்போது அமெரிக்க இஸ்ரேலிய பிணைக் கைதிகளைக் கொண்டு மிரட்டி வரும் பயங்கரவாதிகளைப் பணிய வைப்பதற்காக, முஸ்லீம் நாடுகளிடம் குறிப்பாக ஈரானிடம் அமெரிக்கா பேரம் பேச வேண்டிய பரிதாப நிலையிலுள்ளது. எனவேதான் இந்தியாவிலிருந்து ஷார்ஜா மூலமாக ஈரானுக்கு இறக்குமதியாகவிருந்த நச்சு வாயு விவகாரத்தை துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துகிறது. இதோடு தனது புதிய "சூப்பர் 301" சட்டப்படி இந்தியா முறையற்ற வர்த்தகம் செய்வதாக குற்றம் சாட்டி மிரட்ட முடியும்.

— இப்படி ஒரே கல்லில் கொத்தாக மாங்காய்களை வீழ்த்தும் உத்தியோடுதான் இந்தியாவிலிருந்து விஷவாயு ஏற்றுமதியான விவகாரத்தை அம்பலப்படுத்தியது அமெரிக்காவின் "நியூயார்க் டைம்ஸ்" ஏடு. மற்றபடி, விஷவாயு உற்பத்தியையும் ஏற்றுமதியையும் தடுப்பதல்ல அதன் நோக்கம். ஏனெனில் அமெரிக்காவே இத்தகைய விஷவாயு ஆயுதங்களை ஏராளமாக குவித்து வைத்துள்ளது. இந்தியாவைப் பொருத்தவரை ஏற்கனவே அமெரிக்காவின் "சூப்பர் 301" சட்டப்படி முறையற்ற வர்த்தகம் செய்வதாக கருப்புப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளதால், அமெரிக்க மாமாவின் கோபத்திற்கு ஆளாக நேரிடுமே என்ற பீதியின் காரணமாகவே ஏற்றுமதி செய்த நச்சு வாயுவை திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளது. மற்றபடி இந்த நச்சுவாயு உற்பத்திக்குத் தடை விதிக்கும் எண்ணம் அதனிடம் இல்லை. போபாலில் விஷவாயு 'விபத்து' மூலம் ஆயிரக்கணக்கானோரைக் கொன்ற பாசிச கும்பலின் ஆட்சியில் வேறு எதை எதிர்பார்க்க முடியும்? நேற்று போபாலில் மிதைல் ஐசோசயனைடு; இன்று தியோனைல் குளோரைடு! நாளை....?

○ மணி



"கள்ளச்சாராயம் காய்ச்சு! எங்களுக்கு மாமூல் கொடு!"

## - அப்பாவி மக்களை அச்சுறுத்தும் போலீஸ் ரௌடிகள்

உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள தேவாரம் என்ற ஊரின் முதலாவது வார்டுதான் மூணாண்டிப்பட்டி. இங்கே உள்ள பெருவாரியான மக்கள் நிலமற்ற கூலி விவசாயிகள். வாழவழியற்ற நிலையில் கஞ்சா, சாராயம் போன்ற போதைப் பொருள் கள்ள விற்பனைக்குத் தள்ளப்பட்டவர்கள். இவர்களின் செயலுக்கு ஒத்துழைப்பு கொடுத்து வழிகாட்டி இயக்குபவர்களே போலீசுக்காரர்கள்தான் அப்பாவிகளைக்கூட இத்தொழிலில் ஈடுபட நிர்பந்திப்பது போலீசு கும்பலின் சமூக சேவை.

அண்மையில் மூணாண்டிப்பட்டியில் வாழும் தனது நண்பரைப் பார்க்க வந்த கூடலூரைச் சேர்ந்த ஒச்சு என்பவரை இரவு அவர் உறங்கிக் கொண்டிருந்தபோது அவரிடமிருந்த கத்தியைப் பறித்துக் கொண்டு, "கத்தி வைத்திருப்பது குற்றம்; நட ஸ்டேஷனுக்கு" என்று போலீசார் அரட்டினர். அவர் மறுத்து, காலையில் வருவதாக உறுதியளித்தும் கத்தியைப் பிடுங்கிக் கொண்டு போய்விட்டனர். மறுநாள் கத்தியை வாங்குவதற்காக தேவாரம் போலீஸ் நிலையத்துக்குச் சென்ற ஒச்சுவை, "உன் மேல் சந்தேகமிருக்கிறது" என்று கூறி பிடித்து வைத்துக் கொண்டனர். இதுபோல் வெளியூரிலிருந்து வருகின்ற உறவினர்களைப் பிடித்து வைத்துக் கொண்டு கணிசமான தொகை இலஞ்சம் கொடுத்தால்தான் வெளியே விடுவது என்பது தேவாரம் போலீசாரின் பண்பாடு. ஆனால் ஒச்சுவிடம் அவர்களின் எத்துவேலை பலிக்காமல் போகவே ஏமாற்றத்தோடு அவரை விடுவித்தனர்.

இந்த நிகழ்ச்சியை ஒட்டி பகுதி மக்களிடம் நாம் விசாரித்தபோது, "இந்த மாதிரி அன்றாடம் நடக்குதுங்க; தொழிலிலே ஈடுபடாம இருந்தாக்கூட வீட்டுக்குள்ள வந்து சோதனை போடறோம்னு போலீசுகாரங்க எதையாவது தூக்கிட்டு போயிடறாங்க. வீட்டுல அரிவாள் வெச்சிருந்தாகூட, அது எதுக்குன்னு கேட்டு ஸ்டேஷனுக்கு இழுத்துக்கிட்டு போறாங்க. ஒரு வீட்டுல இருந்த எடை போடற தராச பார்த்து, இதை கஞ்சா எடை போட்டு விக்கத்தான் வச்சிருக்கேன்னு சொல்லி பிடிச்சிட்டு போயி அந்த வீட்டுப் பையனோட படிப்பையே பாழாக்கிட்டாங்க. விருந்தாடி வர்றவங்களைக்கூட பிடிச்சிகிட்டுப் போயி அசிங்கப்படுத்துறதனால எங்களுக்கு ரொம்பக் கேவலமா இருக்குங்க" என்று அவர்கள் போலீசின் அட்டூழியத்தை வேதனையுடன் விவரித்தனர்.

இப்பகுதி வாழ் மக்களுக்கு அரசு அறிவிக்கும் வறட்சி நிவாரணம், கடனுதவி முதலான அற்ப சலுகைகளைக் கூட வார்டு உறுப்பினர்களான "போலீஸ்", "வீரணன்" போன்றவர்கள் ஏப்பம் விட்டுவிடுகின்றனர். இதை அம்பலப்படுத்தி தேவாரத்தில் சமூக உணர்வு கொண்ட சந்திரன், பாக்கியராஜ் எனும் இருவர் முழக்க அட்டைகளை எழுதி வைத்தனர். உடனே போலீசார் அவர்களை காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றதும், "உங்களுக்கு என்ன வேண்டும், கடனுதவி வேண்டுமென்றால் என்னைக் கேட்க வேண்டியது தானே? எதற்காக இப்படி எழுதி வைக்கிறாய்?" என்று சப்-இன்ஸ்பெக்டர் 'அறிவுரை' வழங்கி கொள்ளைக்காரர்கள் என் பங்காளிகள் தான் என்பதை உணர்த்தியுள்ளார்.

எங்கேயோ ஒரு பகுதியில் போலீசார் கள்ளச்சாராயத்தை ஒழித்து அம்மக்களுக்கு மாற்று தொழில் செய்ய ஏற்பாடு செய்தனர் என்ற செய்தியை பத்திரிகைகள் பெரிதாக விளம்பரப்படுத்துகின்றன. தெருவெங்கும் கள்ளச்சாராயம் பெருகி அதற்கு போலீசாரே உடந்தையாக இருக்கும் அயோக்கியத்தனம் இப்போது சந்தி சிரிக்கிற விவகாரமாகி, மக்களுக்கு போலீஸ் துறையின் மீதே வெறுப்பும் அவநம்பிக்கையும் ஏற்பட்டுள்ளதால், இப்படி சில சூரத்தனங்களைச் செய்து அவர்கள் பிரமையூட்டுகின்றனர். ஆனால் கருவாட்டைப் பூனை வெறுக்காது; காக்கிச் சட்டைகள் கள்ளச் சாராயத்தை ஒருக்காலும் ஒழிக்காது என்பதற்கு தேவாரம் போலீஸ் நிலையம் இன்னுமொரு சாட்சி!

— தகவல் : விவசாயிகள் விடுதலை முன்னணி உத்தமபாளையம் வட்டம்.

படிப்பகம்

www.padippakam.com


# மாநில அரசியலைப் பந்தாடும் பீடி சுல்தான்கள்

பணப்பெட்டி அல்லது பச்சை தங்கம்! பீடி இலைக்கு பீடி சுல்தான்கள் வைத்திருக்கும் செல்லப் பெயர் இது. நடுரோடில் பணத்தை வாறுவது மாதிரி பீடி இலை கொள்முதலில் கோடி கோடியாக பணத்தை குவிக்கிறார்கள், பீடி சுல்தான்கள். ஆனால், அந்த பணப்பெட்டியை, பச்சை தங்கத்தை பறித்துக் கொடுக்கும் பழங்குடிகள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்நிலைமை துண்டு பீடியாக வீதியில் கிடக்கிறது.

ஆந்திரா, மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், ஒரிசா ஆகிய மாநில எல்லைகளை உள்ளடக்கிய காடுகளில்தான் நாட்டின் 80 சதவிகிதத்திற்கும் மேலான பீடி இலை பறிக்கப்படுகிறது. இதில் பெரும்பங்கு ம.பி. மாநிலத்திற்கு சொந்தம்; அதாவது 65 சதவிகிதம்! நாளொன்றுக்கு 3 கோடி ருபாய்க்கு பீடி தயாரிக்கும் சுல்தான்களின் கையில்தான் இத்தொழில் பந்தாடப்படுகிறது. ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலத்தை தவிர்த்து மற்ற இரண்டு மாநிலங்களிலும் இப்பீடி சுல்தான்கள்தான் அம்மாநிலங்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகிக்கிறார்கள். மகாராஷ்டிரமும், ஆந்திர மாநிலமும் ஏதோ தூய்மையான அரசியல் நடத்துவதால் அங்கு பீடி சுல்தான்களால் வாலாட்ட முடியவில்லையென்பதல்ல! நக்சல்பாரிகள் அங்கு தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறார்கள்! குறிப்பாக, பீடி இலை பறிக்கும் பழங்குடிகள் தாழ்த்தப்பட்டவர்களின் மத்தியில் வலுவான சங்கங்களை கட்டி வேரூன்றியிருக்கிறார்கள் நக்சல் பாரிகள்! பீடி சுல்தான்களுக்கு அவர்கள் முறையிலேயே பாடம் கற்பித்து அங்கிருந்து விரட்டியடித்திருக்கிறார்கள்.

சுமார் 12 லட்சம் பழங்குடிகள், மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் ம.பி. மாநிலத்தில் நேரடியாக இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஆண்டுக்கு 40 நாட்கள் மட்டுமே இருக்கும் இத்தொழிலை நம்பித்தான் அவர்கள் ஆண்டு முழுவதும் காத்திருக்கின்றனர். ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் மத்தியில் துவங்கும் பீடி இலை பறிக்கும் பருவம் மே மாத கடைசியிலேயே அதன் பரபரப்பு அடங்கிவிடுமளவு துரிதமாக நடக்கும். பகுதி கூலி ஏழை விவசாயிகள் மொத்தமாக அவ்வேலையில் குவிந்து விடுவார்கள்.

இப்பருவக் காலங்களில், அப்பகுதி கிராமங்களுக்குச் சென்றால், அக்கிராமங்களில் மனித நடமாட்டத்தையே காண முடியாது! அனைவரும் விடியற்காலை 3, 4 மணிக்கே எழுந்து பீடி இலைகாடுகளுக்கு நடந்து செல்கிறார்கள். இடுப்பில் சில மாதங்களே ஆன பச்சைமண்கள், முந்தானையைப் பிடித்துக் கொண்டு விழுந்து எழுந்து பின்னால் ஓடிவரும், சின்னஞ்சிறுசுகள். பரந்த வெளியில் அல்ல காடுகளுக்குள்ளேயே கொடிவழித் தடங்களிலும் அவர்கள் நடக்க வேண்டும். காட்டுக்குள்ளே செல்ல செல்லத்தான் தரமான இலைகள் அதிகமாகக் கிடைக்கும். சில நேரங்களில் உயிரையும் பணயம் வைக்க நேரிடும். விஷப்பூச்சிகள் கடிக்கும், காட்டு விலங்குகள் குறுக்கிடும். ஒவ்வொரு வருடமும் ஒரு சிலராவது இறப்பது சர்வ சாதரணம்! மதியம் வரை எறும்பு மாதிரி வேலை செய்தளால் 3 பேர் கொண்ட குடும்பம் அதிகபட்சம் 40 ருபாய் சம்பாதிக்கலாம்.



பீடி இலை பறித்துக்கொண்டு திரும்பும் பழங்குடி பெண்கள்;

இதுவே அவர்களுக்கு மலையைப் புரட்டியது மாதிரி! வேலையிருக்கும் 2 மாதங்களில் இப்படி ரத்தத்தைக் கொட்டினால் தான் அடுத்த 2, 3 மாதங்களுக்கு ஒரு வேளைக் கஞ்சிக்காவது சேர்த்து வைக்க முடியும்! மற்றக் காலங்களில் பீடி சுருட்டியோ, விறகு வெட்டியோ, வேறுகாட்டுப் பொருட்கள் சேகரித்தோ வயிற்றைக் கழுவுகிறார்கள்.

இவ்வாறு இவர்கள் சேகரிக்கும் பல கோடி ருபாய் பெறுமானமுள்ள பீடி இலைகளை வெறும் சில லட்ச ருபாய்களை மட்டுமே கூலியாகக் கொடுத்து சுருட்டிக் கொள்கிறார்கள் பீடி இலை சுல்தான்கள்! இந்த அப்பாவி பழங்குடி - 'தாழ்த்தப்பட்ட' மக்களை வரைமுறையின்றி சுரண்டுவதற்காக, அதற்கு வசதியாக தேவையான அரசாங்கங்களைத் தேர்ந்தெடுக்க, விலைபேச பல கோடிகளை இறைக்கிறார்கள். காங்கிரசுக் கட்சியின் மத்திய பிரதேச மாநிலத்தின் தூணாக இருந்தவர், அர்ஜூன் சிங். இந்திராவின் சாவை அடுத்து அதன் ஒப்பாரியின் நடுவே ராஜீவ் காந்தி டில்லியின் அரியணை ஏற ம.பி. யில் முதன் மந்திரியானார், அர்ஜூன் சிங். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்துப் போட்டுக் கொண்டிருக்கும் ராஜ்புத் மற்றும் பார்ப்பனர்கள் உயர் சாதி காங்கிரசு நில முதலைகளின் சார்பில் அரியணை ஏறினார் அர்ஜூன் சிங். நிலச் சீர்திருத்தம், பினாமிநிலம் ஒழிப்பு, காட்டு விளைப்பொருட்கள் மீதான அப்பகுதி, பழங்குடிகள், தாழ்த்தப்பட்டவர்களுக்கான உரிமை ஆகிய தன்னுடைய தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் காற்றில் பறக்க விட்டார். இருந்தாலும், பீடி இலைப்பறிப்பு தொழிலையும், காட்டு உபப்பொருட்கள் சேகரிப்பிலும் ஈடுபட்டிருக்கும் 12 லட்சம் கூலி ஏழைகளின் ஓட்டை எதிர்க்கட்சிகள் பறிக்காமல் இருக்க முழுகவனம் செலுத்தினார். 1983, '84, '85, '87 மற்றும் '88 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக, மேற்கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முன்னோட்டமாக பல கமிட்டிகளும், சவடால் அறிக்கைகளும் வெளியிட்டு பரபரப்பு ஏற்படுத்தினார்.

அதிலொன்று '87 ஆம் ஆண்டு இடைத்தேர்தலின் போது, காட்டு உபப்பொருட்களின் அனுபோக உரிமையை பழங்குடிகளிடம் மீட்டுத் தருவதற்கு சட்டங்கள் வகுப்பதற்கான ஆலோசனைக் கமிட்டி. மறுபுறம், ஆளுங்கட்சியின் இம்முடிவுக்கு எதிராக, மந்திரி சபையிலேயே ஒரு கும்பலை கிளப்பி விட்டார். அக்கும்பலின் எதிர் அறிக்கையில் இருக்கும் அம்சங்களையும் கணக்கில் கொண்டு தம் முடிவை தள்ளி வைப்பதாக நாடகமாடினார். பல சமயங்களில், அதிகார வர்க்கமே ஆளுங்கட்சியின் முடிவை அமுல்படுத்த சுணக்கம் காண்பிப்பதாக பிரச்சாரம் செய்து, ஏமாற்றினார்.

அர்ஜூன் சிங்கின் பழங்குடிகளுக்கு சார்பான வெற்று சவடால்களைக்கூட சகித்துக் கொள்ள முடியாத பீடி சுல்தான்களும், நில முதலைகளுமான ராஜ்புத், பார்ப்பன கும்பல் அர்ஜூன்சிங் ஆட்சிக்கு நெருக்கடி கொடுப்பதில் இறங்கியது. இக்கும்பல், அர்ஜூன் சிங்குக்கு எதிரான கட்சி மேல்மட்டத்துடன் தொடர்பு கொண்டது. தற்போது அம்மாநிலத்தின் முதல்வராய் இருக்கும் மோதலால் வோராவும், மத்திய மந்திரியான மாதவராவ் சிந்தியாவும் எதிர்ப்புக் கும்பலுக்கு தலைமை தாங்கினார்கள். சூரத் லாட்டரி ஊழலை கிண்டி கிளறி அர்ஜூன்சிங்கை வெளியேற்றுவதில் வெற்றி பெற்றனர். பழி வாங்கப்பட்ட அர்ஜூன்சிங், பழங்குடிகளுக்கு எதிராக நீலிக்கண்ணீர் வடிக்காமலிருக்க, வோரா கும்பலே இப்போது பீடி இலை அறுவடையை அரசுடமையாக்கி இருக்கிறது. காடுகளை பல பாகங்களாகப் பிரித்து பீடி சுல்தான்களுக்கு 'காண்ட்ராக்ட்' விட்ட அரசு, அவ்விடங்களில் எல்லாம் இப்போது நேரிடையாக கொள் முதல் மையங்களைத் திறந்து பீடி இலை பறிப்பவர்களிடமிருந்து நேரிடையாக கொள்முதல் செய்கிறது. ஆண்டொன்றுக்கு சுமார் 57 லட்சம் மூடைகள் கொள்முதல் செய்யப்படும் அம்மாநிலத்தில் தற்போது 37 லட்சம் மூடைகளே (ஒரு மூடை சுமார் 50 கிலோ) கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. கிலோ ஒன்றுக்கு சில பத்து காசுகள் கூலியை பழங்குடிகளுக்கு கொடுத்து அவர்களை குளிர வைக்கிறது. மறுபுறம், பாதியாக கொள் முதல் செய்வதன் மூலம் பழங்குடிகளுக்கு கிடைக்கும் மொத்த வருவாயை வெட்டிக் குறைத்து விட்டது. மேலும், 40 நாட்கள் தவிர ஆண்டு முழுவதும் அவர்கள் நம்பிக்கொண்டிருக்கும் பீடி சுருட்டும் வேலைக்கு வேட்டு வைக்கிறது. ஆக, அரசு கொள்முதலால், சில



படிப்பகம்

www.padippakam.com

பைசா கூலி கூடுதலால் விடிவு ஏதும் இல்லை, பீடி சுல்தான்கள் தான் நமக்கு கண் கண்ட தெய்வம் என்று பழங்குடிகள் மனம் மாறும் அளவுக்கு நிலைமையை சிக்கலாக்கு கிறது கிழநரி வோரா கும்பல்.

90 ஆண்டுகளாக உ.பி. மாநிலத்தில், பீடி இலை கொள்முதல் மற்றும் பீடி தயாரிக் கும் தொழில் ஏகபோகம் வகிக்கும், நாளொன்றுக்கு ரூபாய் 3 கோடி பீடிகள் தயா ரிக்கும். மோகன்லால் ஹர்கோவிந்தாஸ்; காங்கிரசு எம்.எல்.ஏவும், அம்மாநில நவீன் தன்யா இந்தி தினசரியின் உரிமையாள ரும், மிகப்பெரும் பீடி சுல்தானுமான, ஷர் வன்பாய் பட்டேல், பாபுராவ், விரிஜிலால் மனிலால், பீச்சார்பாய் பட்டேல் ஆகிய பீடி சுல்தான் கும்பல், ''இழப்புகளை (நட் டத்தை) சந்திக்க நாங்கள் தயாராகி விட் டோம்!... நிலைமை இப்படியே தொடர்ந் தால் (அரசு தொடர்ந்து கொள்முதல் செய் தால்) பீடி ஆலைகளை இழுத்து மூடிவிடு வோம்!'' என்று அரசை மிரட்டுவது போன்று பீடி தொழிலாளர்களுக்கு பகிரங்கமாக பீதி யூட்டுகின்றனர். மக்களுக்கு ஆதரவான கொள்கைகளைக் கூட மக்களே வேண்டாம் என்று எதிர்க்குமளவு வக்கிரமான முறை யில் தனது நலனை சாதிக்கிறது, காங்கிரசு கும்பல்!

ஒரிசா மாநிலத்தின் அரசியல் தலைவி தியை தீர்மானிப்பதில் 1956 ஆம் ஆண்டு முதலே பீடி சுல்தான்கள் வெற்றி பெற்றுவரு கிறார்கள். ஆண்டொன்றுக்கு அரசுக்கு 40 கோடி ரூபாய் வருவாய் தேடிக் கொடுக்கும் இத்தொழில் ஏக போகமாக இருக்கும் பீடி சுல்தான்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பல அரசியல் கட்சிகள் இயங்குகின்றன. அம்மாநில அரசியலை ஆட்டி படைக்கின் றன.

ஹரேகிருஷ்ண மகதேவ் 1956 வரை மகாராஷ்டிரா மாநில கவர்னராய் இருந்த வர். அதன் பிறகு ஒரிசாவுக்கு திரும்பி, '56 ஆம் ஆண்டு முதல் '61 ஆம் ஆண்டுவரை சிறுபான்மை காங்கிரசு எம்எல்ஏக்களை வைத்தே ஒரிசாவில் ஆட்சி நடத்தியவர். 140 மொத்த சட்டசபை உறுப்பினர்களில்; காங்கிரசுக்கு '52ல் 68 பேரும் '57ல் 56 பேர் மட்டுமே! மற்றும் 'ஜனாந் திர பரிஷத்' போன்ற பிராந்தியக் கட்சிகள் முழுக்க பீடி சுல்தான்களை பிரதிநிதித்துப் படுத்தின. ''தாராள வர்த்தகம்'' என்று பீடி இலை காடுகளை தாரைவார்த்துக் கொடுத்து, அக்கட்சிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சிக் கட்டிலில் ஒட்டிக் கொண்டி ருந்தார், ஹரேகிருஷ்ண மகதேவ். '61 ஆண் ஆண்டிலிருந்து '67 ஆண் ஆண்டுவரை மேல் மட்ட காங்கிரசு ஆதரவுடன், பிஜுபட் நாயக், பைரன்மித்ரா, சதாசிவ திருப்பதி என்று மூன்று முதன் மந்திரிகளை ஆட்சிக் கட்டிலில் ஏறி இறங்கினர். மீண்டும் '67 தேர் தலில் காங்கிரசு 31 எம்எல்ஏக்களைப் பெற்று குப்புற விழுந்தது.

பதவி பிடுங்கப்பட்டு காங்கிரசலிருந்து முறித்துக் கொண்டு ஜனகாங்கிரசு என்ற புதி யக் கட்சிக்கு மகதேவ் தலைமை தாங்கினார். திரும்பவும் பழைய பெருச்சாளிகளை வைத் துக்கொண்டு கூட்டு மந்திரிசபை அமைத் தார். திரும்பவும் '71 தேர்தலில் அனைவ ரும் மண்ணைக் கவ்வினர். இதற்குள் காங்கி ரசிலிருந்து ஓடிப்போன, பிஜுபட்நாயக், சுதந்திரா கட்சியின் தலைவரானார்! உக்கல் காங்கிரசு என்ற இன்னொரு பிராந்திய கட்சி யின் தலைவரான தாஸ் என்பவருடன் கூட் டுச் சேர்ந்து முதல் தவணை ஆட்சி அமைத் தார். அவர்களை கவிழ்த்து விட்டு இரண் டாவது தவணை ஆட்சியை, பிரஜா சோச லிஸ்ட்டுடன் சேர்ந்து நந்தினி சத்பதி தலை மையில் ஆட்சியை அமைத்தது, காங்கிரசு. இவ்வளவு ஆட்சிக் கவிழ்ப்புகளும் பீடி சுல் தான்களுக்கும் அரசுக்கும் நடந்த மோதலின் வெளிப்பாடாகவே இருந்தது.

இதன் நடுவில், ஒவ்வொரு ஆட்சிக் கவிழ்ப்பின் போதும் விசாரணை கமிஷன் கள் அமைத்து ஒருவருக்கொருவர் தோலு ரித்துக் கொண்டனர். ''கன்னா'', ''சரோஜ் பிரசாத்'' என்று காங்கிரசுக் கட்சி போட்டியா ளர்களால் அமைக்கப்பட்ட இரு விசார ணைக் கமிட்டிகள், காங்கிரசு முதல் மந்திரி கள், பீடி சுல்தான்களிடம் தேர்தல் நிதி, தனிப்பட்ட கையூட்டு என்று பல லட்சக் கணக்கான ரூபாய்களை லஞ்சம் வாங்கி யதை உறுதிப்படுத்தின. கடைசியில் ஆட்சிக் கட்டில் ஏறிய நந்தினி சத்பதி, பீடி இலைப்ப றிப்பு தொழிலை அரசுடமையாக்க கோரிய ஆதரவு குரல்களுக்கு எதிராக பகிரங்கமாக எதிர்ப்பு தெரிவித்தார். ''மிகவும் அதிக பொறுப்புள்ள இத்தொழிலை பலவீனமான அரசு நிர்வாகத்திடம் ஒப்படைப்பது அபாய கரமானதாக முடியும்'' என்று பீடி சுல்தான்க ளுக்கு வக்காலத்து வாங்கினார். கடைசியில் தன்னுடைய தலைமையை நிலை நிறுத்திக் கொள்ள, பீடி சுல்தான்களிடம் கூட்டணிக் கட்சிகளுக்கு இருந்த அரவணைப்பைக் கரு வறுக்க திடீரென அத்தொழிலைஅரசுடமை யாக்கினார்.

நக்சல்பாரி புரட்சியாளர்களாலும், அவர்களுடைய தலைமையிலான உறுதி யான சங்க நடவடிக்கைகளாலும் மூக்கு டைப்பட்டன ஆந்திரா, மகாராஷ்டிரா ஆளும் கட்சி அரசாங்கங்கள். சளையாத போராட்டத்தாலும், பணியாத பீடி சுல்தான் களின் கிடங்குகளை தீக்கிரையாக்குவது என்ற அதிரடி நடவடிக்கைகளாலும் ''நியா ய''மான கூலியைப் பெற்றனர், புரட்சிகரசங் கங்களில் திரண்டுள்ள மக்கள். திடீர் பரிசுத் தம் வி.பி.சிங் கும்பல், பீடி இலை பறிப்பு பழங்குடிகளிடம் திடீர் தரிசனம் காட்டியது. ராம் ஜெத் மலானி தலைமையில் இயங்கும் பாரத் முக்தி மோர்ச்சாவுடன் இணைந்து செயல்படும் அனில்கோட் தலைமையி லான ஆதிவாசி முக்திமோர்சா, மகாராஷ்டி ரத்தில் கூலி உயர்வு பாதயாத்திரை நடத்தி யது. இதனுடன் ஜனதாதள் வி.பி.சிங்கும் மாட்டு வண்டியில் பயணம் மேற்கொண்டு கூலி உயர்வுக்கு கொடி தூக்கினார். அவர்க ளுடன் அடிவருடி கும்பல்கள்தான் உடன் சென்றது; ஆதிவாசிகள் யாரும் இல்லை என்று அவரை ஆதரிக்கும் முதலாளித்துவ பத்திரிக்கைகளே கிண்டலடித்தன.

''மகாராஷ்டிராவின் அரசியல் சதுரங்க விளையாட்டில் உண்மையான அதிகாரம் அதன் தலைமைச் செயலகமான 'மந்திரால ய'த்தில் இல்லை. அமைச்சரகங்களிலோ, அமைச்சர்களது மாளிகைகளிலோ இல்லை. மகாராஷ்டிராவின் வெள்ளைக் கோட்டை கள் என்று அழைக்கப்படும் 92 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலே உள்ளது. இவர்கள் தான் மகாராஷ்டிராவின் மந்திரி சபைகளை உருவாக்குபவர்கள் அல்லது வீழ்த்துபவர் கள். இவர்கள் பல அரசியல் தலைவர்களின் உயர்வுக்கும் வீழ்ச்சிக்கும் திட்டமிடுபவர் கள்.'' இவர்கள்தான் வெள்ளைக் கோட்டை தளபதிகள் (சர்க்கரை ஆலை அதிபர்கள்)..'' என்று (16-31 ஆகஸ்ட் '87) புதிய ஜனநாய கத்தில் எழுதியிருந்தோம். அவர்களுக்கு சற் றும் குறையாதவர்கள்தான் இந்த பீடி சுல் தான்கள்! ஒரிசாவிலும், மத்திய பிரதேசத்தி லும் இவர்கள்தான் அரசாங்கங்களை உரு வாக்குகிறார்கள். அல்லது வீழ்த்துகிறார்கள்! பல மைல் தூரம் காடுகளுக்குள் சென்று உயிரை பணையம் வைத்து பீடி இலை பறிக் கும் பழங்குடிகளோ கூலி உயர்வு கேட்டு குண்டடிப்பட்டு சாகிறார்கள்!

○ பழநி.

கங்காணிகளிடம் பீடி இலையை ஒப்படைக்கக் காத்திருக்கும் பழங்குடி பெண்கள்; கங்காணிகளின் திருட்டுக் கணக்கு - இரட்டைச் சுரண்டலை அறியாத அப்பாவிகள்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒட்டுண்ணி 'சமூகசேவகர்'களின் அரக்கத்தனம்!

சிலோவாம் சபை எனும் கிறித்துவ தன்னார்வ அமைப்பின் கிளை ஒன்று திருச்சி சுப்ரமணியபுரத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் அகில உலக இயக்குனர் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த காரல் பெக்கர் ஆவார். திருச்சி பொன்மலை ரயில்வே ஒர்க் ஷாப்பில் வேலை பார்த்த ஜேக்கப் என்கிற ராமானுஜத்தை பண ஆசைக்காட்டி தன்வசப்படுத்தி - மதமாற்றி தென்னிந்தியாவின் தலைமை மையமாக திருச்சியில் இந்த சிலோவாம் சபையை நிறுவினார், காரல் பெக்கர். நல்லதொரு வாய்ப்பை நழுவவிடாமல் ஜேக்கப்பும் ரயில்வே வேலையை தூக்கியெறிந்து விட்டு வந்து இந்நிறுவனத்தின் இயக்குனர் பொறுப்பேற்று வெளிநாட்டிலிருந்து காரல் பெக்கர் அனுப்பும் நிதியையெல்லாம் தன் குடும்ப சொத்தாக மாற்றி தன்னை கோடீசுவரனாக மாற்றிக்கொண்டார். 'நரிக்குறவர்களுக்கு நல்வாழ்வுத் திட்டம்', 'பழங்குடியினருக்கு நல்வாழ்வுத் திட்டம்', 'இலவச கண்சிகிச்சை முகாம்' 'அனாதை குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லம்' 'தொழுநோயாளிகளுக்கு இலவச மருத்துவ உதவி' போன்ற போலியான சேவைத் திட்டங்களை அறிவித்து கண் துடைப்பதற்காக சிலவற்றை செய்து பொய்யான கணக்கு காட்டி கொள்ளையடித்து தான் கோடீசுவரராக ஆனார். இவர் இப்படி கொட்டமடித்து வந்தபொழுது 1987ல் இந்நிறுவனத்தின் மீது மத்திய புலனாய்வுத் துறை சோதனை நடத்தியதில் 5 கோடி ரூபாய் கணக்கில்லாத கள்ளப்பணம் சிக்கியது. இது ஜேக்கப்பிற்கு மிகப்பெரிய தலைவலியாக மாறவே இந்த அமைப்பின் இயக்குநர் பொறுப்பை தனது மருமகனான கமலநாதனுக்கு மாற்றிக் கொடுத்து தன்னையும், அமைப்பையும் பாதுகாத்துக் கொண்டார். ஜேக்கப்பின் பதுக்கல் தொழிலுக்கு வழிகாட்டியாக - உடந்தையாக இருந்த சர்வதேச பதுக்கல் மன்னன் காரல் பெக்கர் தனது செல்வாக்கால் இந்திய அதிகாரிகளை முடமாக்கவே, குரைத்துக் கொண்டிருந்த புலனாய்வுத் துறை நாய்களும் விசுவாசிகளாக மாறிவிட்டன. இது கமலநாதனுக்கு நல்ல பாதுகாப்பாக இருக்கவே மாமனாருக்கு மிஞ்சி மருமகனாக தனது கொள்ளையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

ஊனமுற்ற அனாதை குழந்தைகளுக்கு மறுவாழ்வளிக்கும் திட்டம் என்று பகட்டாக விளம்பரப்படுத்தி, சில ஊனமுற்ற குழந்தைகளை சேர்த்துக் கொண்டு, இந்த பிள்ளைகளின் உணவு, உடை, இடம், கல்விக்காக செலவிடுவதாக கணக்கு காட்டி, அந்த பணம் முழுவதையும் தன்னுடைய குடும்பத்தின் ஆடம்பரமான செலவுகளுக்காக வாரியிறைக்கிறார், கமலநாதன்.

இதோ, இந்த ஊனமுற்ற இளம் பிஞ்சுகள் காலூன்ற முடியாமல் கோலூன்றி நடந்து செல்கிறார்களே, இவர்கள் தினமும் பள்ளிக்கு இந்த அமைப்பின் முகாமிலிருந்து 2 கி.மீ. நடந்துபோய் நடந்து வருகிறார்கள் என்றால் உங்களால் நம்ப முடியாதல்லவா? ஆனால் கடுமையான வெயிலானாலும், மழையானாலும் இது திருச்சி சுப்ரமணியபுரத்தில் அன்றாடம் நடக்கும் காட்சி. இந்த பிள்ளைகள் பள்ளிக்குச் சென்று வருவதற்காக என "வேன்" ஒன்று வாங்கி அதை தனது மகள் தனியே பள்ளிக்கு செல்வதற்காக பயன்படுத்தி வருகிறார் கமலநாதன். ஊனமுற்ற குழந்தைகளை ஏற்றிச் செல்லவேண்டிய இந்த "வேன்" கமலநாதனின் ஊனமற்ற மகளை தனியே ஏற்றிச் செல்லும் கொடுமை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

இதேபோல் வெளிநாட்டிலிருந்து நிதிவரவில்லை என்று ஒவ்வொரு மாதமும் பாட்டுபாடி இந்நிறுவனத்தில் வேலைசெய்யும் பணியாளர்களுக்கு முறையாக சம்பளமும் கொடுப்பதில்லை. அதே நேரத்தில் கமலநாதனின் மகள் தனது ஆடம்பரமான - வக்கிரமான செலவுகளுக்காக தினமும் ஆயிரக்கணக்கில் அள்ளி விரயமாக்கி கூத்தடிப்பதைக் கண்டு ஆத்திரமடைந்து வெளியேறிய பணியாளர்களும் உண்டு.

சுப்பிரமணியபுரத்தில் பாதி பரப்பளவை வளைத்துப் போட்டு கட்டிடங்களாக கட்டியிருக்கிறார் ஜேக்கப். அவர் விட்டுச்சென்ற பணியை தொடரவேண்டும் என்று மீதிபாதி இடங்களையும் சொந்தமாக்கும் முயற்சியில் பொது சாலையையும் ஏன் விட்டு வைப்பானே என்று அதையும் ஆக்கிரமிக்க முயற்சியெடுத்து பகுதிமக்கள் பிரச்சினை கிளப்பவே மூக்குடைபட்டு போயிருக்கிறார் கமலநாதன்.

திருச்சி சுப்ரமணியபுரம் அண்ணா சாலையின் இருபுறங்களிலும் (சுந்தர்ராஜன் நகர் அருகே) உள்ள இடங்களை விலைக்கு வாங்கி கட்டிடங்கள் எழுப்பிய இந்த 'சிலோவாம் சபை' அண்ணா சாலையையும் தனது இடம் என்று கூறி எதிர்எதிராக இருக்கும் தனது இரு கட்டிடங்களை இணைக்க முயற்சி எடுத்து அஸ்திவாரம் போட்டுக்கொண்டிருந்தது. இந்த சாலை வழியாகத்தான் அருகே உள்ள பொன்மலை ரயில்வே தொழிற்சாலைக்கு சுப்ரமணியபுரத்தில் குடியிருக்கும் தொழிலாளர்கள் எல்லாம் வேலைக்குச் செல்கிறார்கள். பொதுமக்களும் அதிகமாக இந்த சாலையை

# அதிகாரிகள் காண்டிராக்டர்களின் கூட்டுக்கொள்ளை!


# தொழிற்சங்கங்களின் கையாலாகாத்தனம்!

அரசுத் துறை ஆலைகள் என்றாலே அது அதிகாரிகளும் காண்டிராக்டர்களும் கூட்டு கொள்ளை நடத்தும் இடம் என்பது யாவரும் அறிந்ததுதான். ஆனால் இப்படியும் நடக்குமா என்று தொழில் முறை கொள்ளையர்களே மூக்கில் விரலை வைக்குமளவுக்கு பகிரங்க சூறையாடல் பொன்மலை இரயில்வே பணிமனையில் நடந்துள்ளது.

பணிமனையை நவீனப்படுத்தும் திட்டத்தில் உயர்மின் அழுத்தம் மற்றும் குறைவான மின் அழுத்தம் கொண்ட 100 கேபிள் இணைப்பு வேலையும் ஒன்று. இவ்வேலையை ரோகிணி எலக்ட்ரிகல் கன்ஸ்ட்ரக்ஷன் ஒர்க்ஸ் என்ற தனியார் நிறுவனத்துக்கு காண்டிராக்ட் விட்டுள்ளனர்.

ஒப்பந்தப்படி ரோகிணி எலக்ட்ரிகல் நிறுவனம் தான் அனைத்து பொருட்களையும் வாங்கி தனது ஆட்களைக் கொண்டு வேலையை முடிக்க வேண்டும். ஆனால் நடப்பது என்ன தெரியுமா? பணிமனையில் பவுர்ஹவுஸ் பிரிவிலுள்ள செப்புத்தகடுகள், ரெய்ச்செம் முதலானவற்றைப் பயன்படுத்துவதோடு இந்நிறுவனம் பணிமனையிலுள்ள தொழிலாளர்களைக் கொண்டே இவ்வேலையை நடத்தி வருகிறது. இந்த காண்டிராக்டின் மதிப்பு எவ்வளவு என்று தெரியவில்லை. ஆனாலும் கேபிள் இணைப்புக்கான பொருட்களின் மதிப்பு, வேலையாட்களுக்கான கூலி என்று மட்டும் உத்தேசமாக கணக்கிட்டாலே ரூ.3000க்கு மேல் செலவாகும். 100 இணைப்புகள் என்றால் 3 லட்ச ரூபாய்களாகும். ஆனால் ஒரு சல்லிக்காசு கூட செலவழிக்காமல், ஒப்பந்தத்தில் வெறும் கையெழுத்து மட்டும் போட்டு விட்டு மூன்று லட்சம் ரூபாய்களை ரோகிணி நிறுவனம் ஏப்பமிட்டு விட்டது.

கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்த கதையாக பட்டப்பகலில் இந்த அயோக்கியத்தனம் அதிகாரிகளின் உடந்தையோடு தான் நடந்துள்ளது.




படிப்பகம்

www.padippakam.com



பயன்படுத்துகிறார்கள். எனவே, இந்த அமைப்பின் பொதுசாலை ஆக்கிரமிப்பிற்கு எதிராக பொதுமக்கள் வெகுண்டெழுந்து குரல் கொடுத்தனர். இப்பகுதியிலிருக்கிற மக்கள் அதிகாரிகளிடம் மனு கொடுத்ததோடு எதிர்ப்பு தெரிவித்து துண்டுப்பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டனர்.

பிரச்சினை தீவிரமடையவே சும்மா பார்த்துக் கொண்டிருந்தால் மக்கள் அடுத்தமுறை ஓட்டுப்போட மாட்டார்கள் என்று இப்பகுதியின் சட்டமன்ற உறுப்பினரான, போலி கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த பாப்பா உமாநாத் தனது கட்சியின் இளைஞர் அமைப்பை(DYFIயை)இப்பிரச்சினையில் தலையிட உசுப்பியிருக்கிறார். அவ்வமைப்பின் இளைஞர்களும் முழக்க அட்டைகள் எழுதி பகுதியெங்கும் கட்டினார்கள்.

பகுதி முனுசிபல்கவுன்சிலர்(தி.மு.க.) முன்னாள்கவுன்சி ஓ, அ.தி.மு.க.) ஆகியோரெல்லாம் இப்பிரச்சினையில் மூக்கை நுழைக்கவே, கமலநாதன் அனைத்து கட்சிகளையும் தனக்கே உரிய நரித்தனத்தோடு தனித்தனியே கூட்டி பேரம் பேசி கவனிக்கவே எல்லோரும் வாயடங்கிப் போய்விட்டார்கள். பகுதி எம்.எல்.ஏ. என்பதற்கிணங்க உமாநாத்தின் பிரதிநிதியான சி.ஐ.டி.யு.வை சேர்ந்த புருஷோத்தமன் சிறப்பாக கவனிக்கப்படவே பகுதியில் கட்டியிருந்த முழக்க அட்டைகள் எல்லாம் அடுத்தநாளே காணாமல் போய்விட்டன. அதாவது முழக்க அட்டைகளை எடுத்துவிடும்படி தலைமையிடமிருந்து - பாப்பா உமாநாத்திடமிருந்து உத்திரவு வரவே தட்டிகள் காணாமல் போனது. கட்சி மீது நம்பிக்கை வைத்திருந்த சில இளைஞர்களும், இந்த பிரச்சினையில் நேர்மையாக செயல்பட இளைஞர்களும் கட்சித் தலைமையின் செய்கையால் நம்பிக்கையிழந்து அமைப்பிலிருந்து வெளிபேறி பகுதி மக்களிடம் அதை அம்பலப்படுத்தியிருக்கின்றனர். சந்தி சிரித்துப்போன எம்.எல்.ஏ. பாப்பா உமாநாத், அந்த இளைஞர்களை கமலநாதன் துணையோடு பழிவாங்க துடித்துக் கொண்டிருக்கிறார்.

ஏகாதிபத்தியங்கள் இந்தியா போன்ற மூன்றாம் உலகநாடுகளை ஒட்டச்சுரண்டி கொள்ளையடித்துவிட்டு அதை மறைப்பதற்காக 'உதவி' என்ற பெயரில் தன்னார்வக் குழுக்கள் மூலம் 'சமூக சேவை' செய்கின்றன; மக்களை ஏய்த்து அவர்களைப் புரட்சியின் பக்கம் திரும்பிவிடாமல் மழுங்கடித்து வருகின்றன. இந்த அயோக்கியத்தனத்திற்கு எதிராக - தேச விரோத தன்னார்வக் குழுக்களுக்கு எதிராகப் போராடுவதை விடுத்து, அவர்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வதோடு, தமது கட்சியிலுள்ள புரட்சிகர உணர்வுகொண்ட இளைஞர்களையும் ஏய்த்துவிட்டது 'மார்க்சிஸ்ட்' கட்சித் தலைமை.

வலது கம்யூனிஸ்டுகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எச்சில் காசில் சென்னையில் மருத்துவமனை கட்டி 'சமூக சேவை' செய்கிறார்கள் என்றால் 'இடது'கள் ஏகாதிபத்திய தயவில் ஏசுவின் பெயரால் வயிறு வளர்க்கும் மக்கள் விரோத 'சமூக சேவை'களுக்குப் பாதுகாப்பாக நடந்து கொள்கின்றனர். இந்த லட்சணத்தில் இந்தப் போலிக் கம்யூனிஸ்டுகள், தன்னார்வக் குழுக்களை அம்பலப்படுத்தி வெட்கமின்றி மேடைதோறும் முழங்குகின்றனர். கம்யூனிசப் புரட்சியாளர்களுக்கு ஏகாதிபத்தியங்களிடமிருந்து காசு வருகிறது என்று கூசாமல் அவதூறும் செய்து வருகின்றனர்.

போலிக்கம்யூனிஸ்டுக் கட்சிகளிலுள்ள புரட்சிகர இளைர்களே, உங்களை ஏய்த்துவரும் துரோகத் தலைமைக்கு எதிராக எப்போது கலகம் செய்யப் போகிறீர்கள்? புரட்சிகர அமைப்புகளில் எப்போது அணிதிரளப் போகிறீர்கள்?

**— தகவல் : மாண், திருச்சி**

---

கட்டுமானப் பிரிவில் இவ்வேலையை மேற்பார்வையிட்டு வரும் வில்லியம், சார்ஜ்மேன் திருநாவுக்கரசு மற்றும் இதர அதிகாரிகளின் மிரட்டல்களுக்குப் பயந்து தொழிலாளர்கள் இவ்வேலையைச் செய்து வருகின்றனர். பவர் ஹவுஸிலிருந்து கிருஷ்ணன், ஜெயராஜ் ஆகிய சூப்ரவைசர்கள் பொருட்களை தாராளமாக சப்ளை செய்கின்றனர். இந்தக் கொள்ளையில் இடைநிலை அதிகாரிகளுக்கான பங்காக ஒரு இணைப்புக்கு ரூ.750 விதம் 100 இணைப்புகளுக்கு ரூ.75,000 என்று பேரம் நடந்துள்ளது. இதில் ஒரு தொழிலாளிக்கு ஒரு இணைப்புக்கு ரூ.55 விதம் பங்கு தரப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்குப் பொறுப்பான தலைமை அதிகாரிகளான வரதராஜ், அய்யாதுரை ஆகியோருக்கு தனியாக எவ்வளவு கைமாறியதோ; கொள்ளையர்களுக்கே வெளிச்சம்! இப்பகற்கொள்ளை திட்டத்தை தயாரித்து உருவாக்கியது அருணாசலம் என்ற அதிகாரிதான். தற்போது ரோகிணி எலக்ட்ரிகல் நிறுவனத்தில் வேலை பார்க்கும் முன்னாள் பணிமனை தொழிலாளியான நடேசன் என்பவர்தான் இடைத்தரகராக இருந்து பேரம்பேசி முடித்த இப்பகற் கொள்ளை பல தொழிலாளர்களுக்குப் புதுமையாக இருந்த போதிலும் குறிப்பிட்ட அந்த பிரிவில் வேலை செய்யும் அனைத்து தொழிலாளர்களும் அறிந்ததுதான். அனைத்து தொழிற் சங்கங்களுக்கும் தெரிந்ததுதான். தொழிற்சங்கங்கங்களே இதைக் கண்டு கொள்ளாமல் முடங்கிக் கிடக்கும் போது நம்மால் என்ன செய்ய முடியும் என்று வெறும் பார்வையாளர்களாக இருந்து மனம் குமுறினார்கள்.

இந்நிலையில், காண்டிராக்டர்கள் - அதிகாரிகளின் கூட்டுக் கொள்ளையை அணு அணுவாகத் தோலுரித்துக் காட்டியும், தொழிற்சங்கங்களின் கையாலாகாத்தனத்தை அம்பலப்படுத்தியும் சிறிய சக்தியேயானாலும் புரட்சிகர வீரியமிக்க தொழிலாளர் பிரச்சாரக் குழு பிரசுரம் ஒன்றை வெளியிட்டது. அரண்டு போன அதிகாரிகளும் காண்டிராக்டர்களும் தமது கொள்ளை அம்பலப் பட்டு போன பீதியில் மின் இணைப்பு வேலையையே நிறுத்திவிட்டனர். வகையாக சிக்கிக் கொண்டு அம்பலப்பட்டுப் போன ரோகிணி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் முதலாளி செல்வராசு, தமது நிறுவனத்தையும், இரயில்வே மேலதிகாரிகளையும் அவமானப்படுத்தி விட்டதாக கூறி நமது பிரசுரத்தை அச்சிட்ட அச்சக உரிமையாளர் மீது 75,000 ரூபாய் மானநஷ்டஈடு கேட்டு வக்கீல் நோட்டீசு அனுப்பியுள்ளார். இரயில்வே அதிகாரிகளை அம்பலப்படுத்தியதற்கு இவர் கோபமடைவதிலிருந்தே இந்தக் கும்பலின் கூட்டுக்களவாணித்தனம் வெளிப்படையாகி விட்டது. இது அவரே கொடுத்துள்ள ஒப்புதல் வாக்குமூலம்தான் என்று மீண்டும் சுவ ரொட்டிகள், முழக்க அட்டைகள் மூலம் அம்பலப்படுத்தினோம்.

தற்போது தொழிலாளர் பிரச்சாரக் குழுவின் ஒவ்வொரு நடவடிக்கையையும் தொழிலாளர்கள் ஆர்வத்துடன் வரவேற்கிறார்கள்; புதிய சிந்தனையுடன் மேலும் எதிர்பார்க்கிறார்கள். பிழைப்புவாத தொழிற்சங்கங்கள் அனைத்தும் கூனிக்குறுகி தொழிலாளர்களிடம் அவமானப்பட்டு போயுள்ளன.

இதன் தொடர்ச்சியாக 26.7.89 அன்று தொழிலாளர் பிரச்சாரக்குழு சார்பாக, மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் பொதுக் கூட்டம் பொன்மலையில் நடைபெற்றது. தோழர் தமிழ்மணி தலைமைதாங்க, சிறப்புரையாற்றிய தோழர் காளியப்பன் தொழிற்சங்க புரோக்கர்களின் துரோகங்கள் ஊழல்களை அம்பலப்படுத்தியதோடு, ஒரு புதிய புரட்சிகர தொழிற்சங்கத்தை தொழிலாளர்கள் கட்டியமைக்க வேண்டிய அவசியத்தை விளக்கினார். எந்த ஒரு தொழிற்சங்க கூட்டத்திற்கும் இல்லாத அளவுக்கு தொழிலாளர்கள் திரளாக வந்திருந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர். கூட்ட முடிவில் ம.க.இ.க. கலைக்குழுவினர் வழங்கிய புரட்சிகர இசை நிகழ்ச்சி முத்தாய்ப்பாக அமைந்தது.

**தகவல்: தொழிலாளர் பிரச்சார குழு**
**திருச்சி**

படிப்பகம்

www.padippakam.com

# பத்திரிக்கையாளர் மீதுவெறித்தாக்குதல்! காங்கிரசு - மாஃபியா போலீசு கூட்டு!



சட்டவிரோத பீகார் கிரிமினல் மாஃபியா தலைவன் தபேஸ்வர்சிங்குடன் பீகாரின் சட்டபூர்வ கிரிமினல் முதல்வர் சின்ஹா.

போதைக் கவிஞன் கண்ணதாசன் பாணியில், "சுட்ட பிணம்கூட எழுந்து நடக்கலாம்!... உப்பு கடல் நீரும் சர்க்கரையாகலாம்!" ஆனால் போலீசு மிருகங்களும் காங்கிரசு கதர் குல்லாய்களும் என்னாளும் மக்களுக்கு நண்பனாக முடியாது என்பதற்கு ஏகப்பட்ட சான்றுகள் உண்டு! அதற்கு இன்னுமொரு உதாரணம் சமீபத்திய பீகார் மற்றும் உத்திரப்பிரதேச சம்பவம்.

ஜுலை 28. காலை 11 மணி. பீகார் தன்பாத் நகரம். மாவட்ட ஆட்சித் தலைவர் கலெக்டர் அலுவலக நுழைவாயில்; மாவட்ட மக்களின் உயிருக்கும் உடமைக்கும் உச்சமட்ட பாதுகாப்பு தருவதற்கு இயங்கும் அதிகார அமைப்பின் தலைமை பீடம்! அங்கு அனுமதி வாங்கி தங்கள் கோரிக்கைளை வலியுறுத்தி கோஷமிட திரண்டிருந்தனர், தாழ்த்தப்பட்ட மாணவர்கள்! செய்தி திரட்ட சென்றிருந்த பத்திரிக்கையாளர்கள், கோஷமிட்ட மாணவர்களை புகைப்படம் எடுத்தனர். அப்போது வளாகத்தினுள் நுழைந்த மாவட்ட துணை நீதிபதி - பெண் 'புலி' ராஜ் பாலா வர்மா புகைப்படம் எடுப்பதை வெறியோடு தடுக்க முன்றார். பின்னால் வந்து கொண்டிருந்த அவரது காவலர்கள் பத்திரிகையாளர்களை அடித்த அடியில் அவர்கள் அங்கேயே சுருண்டு விழுந்து விட்டனர். இதில் ஒரு பத்திரிகையாளர் மூச்சடைத்து நினைவு இழக்க, அவரை அப்படியே போட்டுவிட்டு, இன்னொரு பத்திரிகையாளரை விலங்கு பூட்டி இழுத்துச் சென்று நீதிமன்ற காவலில் வைத்து பிறகு மருத்துவமனையில் சேர்த்தனர். இதற்குள், நினைவு இழந்தவர் எழுந்து போலீசின் மிருகத்தனத்திற்கு எதிராக தம் போராட்டத்தைத் தொடர்ந்தார். செய்தியறிந்து 'நவபாரத் டைம்ஸ்' பத்திரிகையாளர் வர்மா, விரைந்து வந்து விசாரித்தார்.

அதே அலுவலகத்தில் சிவில் நிர்வாகத்தினை துணை கமிஷனராகப் பணிபுரியும் அந்த பெண் 'புலி' நீதிபதியின் கணவர் துபைத், விசாரிக்க வந்த வர்மாவை சரமாரியாக அடித்தார். கயிறு போட்டு கட்டி அவரையும் நீதிமன்ற காவலில் வைத்தது அதிகார வர்க்க கூட்டம். இதைக் கண்ணெதிரே பார்த்துக் கொண்டிருந்த மாணவர்கள், தங்கள் கோரிக்கை கோஷங்களை ஒத்திவைத்துவிட்டு, பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு ஆதரவாக ஆவேசத்துடன் குரல் கொடுத்தனர். அதற்குள் பெருமளவு மாணவர்களும், பத்திரிகையாளர்களும் திரண்டனர்.

இவர்களைக் கலைக்க மீண்டும் தடியடி நடத்துமாறு போலீசுக்கு உத்திரவிட்டார், நீதிபதி பெண் 'புலி'. ராஜ் பாலா. பாதசாரிகளும், பத்திரிகையாளர்களும், மாணவர்களும் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டனர். கிரிமினல் பொய்வழக்கு சோடித்து 11 பேரை கைது செய்து சிறையிலடைத்தது, அதிகார வர்க்கம். கொதிப்படைந்த பத்திரிகையாளர்கள் ஒட்டுமொத்தமாக எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்கினர்.

பெண் நீதிபதி, அவரது கணவன், தன்பாத் நகர போலீசு 'சூப்பிரண்டண்ட்', துணை 'கமிஷனர்' அடங்கிய கும்பல் மீது வழக்கு தொடுத்தது, உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம். இக்கும்பலை உடனடியாக கைது செய்து தண்டனை வழங்க வேண்டும் என்று உச்சமட்ட டில்லி போலீசு மற்றும் சிவில் நிர்வாகத் துறைகளுக்கு தந்தி கொடுத்தனர். அவர்கள் தண்டிக்கப்படும் வரை, பீகார் அரசு நிகழ்ச்சிகளை புறக்கணிப்பது, கருப்பு அட்டை அணிவது என்று முடிவெடுத்தனர். 'அமிர்த பசார் பத்திரிக்கா' 'இந்தி உதித்வாணி' 'நவகாரத் டைம்ஸ்' 'நியூ ரீபப்ளிக்கன்' போன்ற பத்திரிகைகளும் மூன்று நாட்களுக்கும் மேலாக தங்கள் பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் ஒரு பகுதியையும், தலையங்க இடத்தையும் வெற்றிடங்களாக விட்டு தங்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. "பத்திரிகைக் குரலை நெறிப்பதற்கு எதிரான எங்கள் எதிர்ப்பு" என்ற வாசகங்களை அதில் அச்சிட்டு அப்பகுதிகளை காலியாக விட்டன.

தன்பாத் "போலீசு அத்துமீறல்களை" சாட்சியங்கள் மூலம் செய்தி திரட்ட நேரடியாக வந்தனர் பல்வேறு பத்திரிகை ஆசிரியர்கள். தன்பாத் சம்பவங்களுக்கு 15 நாட்களுக்கு முன்னர், முதுபெரும் பத்திரிகையாளர் மீது போலீசு புரிந்த அட்டூழியம் வெளியில் வந்தது. 'ஆவாஷ்' என்ற உள்ளூர் இந்தி நாளிதழின் 84 வயது முதிர்ந்த ஆசிரியர் பிரமதேவ் சின்கா சர்மா நடு இரவில் போலீசு கும்பலால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டதும், தங்கள் ஆசிரியர் பற்றி விபரமறிய சென்ற அப் பத்திரிகையின் 4 செய்தியாளர்களும், மிருகத்தனமாக தாக்கப்பட்டு கைவிலங்கிடப்பட்டு சிறையடைக்கப்பட்டதும் வெளியில் வந்தது. போலீசுக்காரர்களால் சதிமுறையில் ரகசியமாக மேற்கொள்ளப்பட்ட இந்த அக்கிரமத்திற்கு எதிராக பெரிதாக குரல் கொடுக்க துணிவற்று இருந்திருக்கின்றனர் உள்ளூர் சிறு பத்திரிகையாளர்கள்.

செய்தி சேகரித்த ஆசிரியர்கள் குழு, பின்வரும் கோரிக்கைகளை உள்ளடக்கி ஆவேசமான அறிக்கையை மைய, மாநில அரசுகளுக்கு அனுப்பியது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, எந்தச் சூழ்நிலையிலும், பத்திரிகையாளர்களை அவமானப்படுத்தும் முகமாக கைவிலங்கிட்டு அழைத்துச் செல்லக்கூடாது என்பதை பீகார் போலீசுக் கும்பல் பகிரங்கமாக மீறியிருப்பதை சுட்டிக் காட்டினார்கள். குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து தண்டிக்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ, மற்றும் நட்டஈட்டுத் தொகையாக அரசு தலா ஒரு லட்சம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். திணவெடுத்த மாநில காங்கிரசு கவர்னர் பகாடியா, "இது மாநில விவகாரம், என்னால் தலையிட முடியாது" என்று 'சட்டம்' பேசினார். மாநில போலீசு கும்பல் ஒன்று திரண்டு போராடியவர்களை மேலும் நக்கல் செய்தது. போராட்டக்காரர்கள் தன்பாத் நகரத்தில் சட்டபூர்வமாக கூடுவதையும் தடைவிதித்தது. காலவரையற்ற 144 தடையுத்திரவு பிறப்பித்தது, போலீசு. தன்பாத் கலெக்டர் அலுவலகத்திலிருந்து, காந்தி சேவா சதன் பகுதி உள்ளடங்கிய பல கிலோமீட்டர் பரப்பளவுள்ள ஜனசந்தடி மிக்க பகுதியை "பாதுகாக்கப்பட்ட பகுதி" யாக அறிவித்தது. 'பாரத் டைம்ஸ்', 'ஸ்டேட்ஸ்மென், 'இந்துஸ்த்தான் டைம்ஸ்' பத்திரிகை ஆசிரியர்கள், காங்கிரசு பெருச்சாளியும் அம்மாநில முதன் மந்திரியுமான எஸ். என்.சின்காவுக்கு சூடாக அறிக்கை அனுப்பி அப்பெருச்சாளியை தோலுரித்தனர். ரகசிய உலக கிரிமினல்களுடன், மாஃபியா கும்பல்களுடன் கைகோர்த்துக் கொண்டிருக்கும் போலீசும், அக்கும்பலுடன் ஒன்று கலந்திருக்கும் மாநில அரசும்தான் உண்மையிலேயே சட்டம் - ஒழுங்கு, மக்கள் நலன்,



படிப்பகம்

www.padippakam.com

பொது அமைதிக்கு எதிரானவர்கள்; கேடு விளைவிப்பவர்கள்; பத்திரிகையாளர்கள் அல்ல என்று பல ஆதாரங்களை அரசின் முகத்தில் வீசியெறிந்தனர்.

● பீகார் மாநில நிலவள வங்கி, நுகர் பொருட்கள் வர்த்தக தலைமை கூட்டுறவு சங்கம், பீகார் மாநில தலைமை கூட்டுறவு வங்கி ஆகியவைகளில் ஏகபோகமாக தங்கள் பினாமிகளை நுழைத்து தபேஸ்வர் சிங், ரஜோசிங் ஆகிய காங்கிரசு எம்.எல்.ஏ.க்கள் 40 லட்ச ரூபாய் சூறையாடியது;

● கொலை வழக்கில் சிக்குண்ட நரேந்திர தேவ் சிங் என்ற தன்பாத் நிலக்கரி சுரங்க மாஃபியாவை பீகார் காங்கிரசு தலைவர் மிஸ்ராவும் சட்ட அமைச்சர் ரகுமானும். தப்புவித்தது; அதற்காக அவனுடன் விருந்துண்டது; அவனால் பழிவாங்கப்பட்ட தன்பாத் போலீசு துணை கமிஷனர் இவ்விவகாரத்தை ரகசிய கடிதம் மூலம் பீகார் தலைமைச் செயலருக்கு புகார் அனுப்பியது; அதை பத்திரிகைகள் வெளியிட்டு அம்பலப்படுத்தியது;

● அரசுக்கு இணையாக, பீகார் மாநில கல்விக் கழகம் ஒன்று தனியாக நிறுவிக் கொண்டு, பெரும்பாலான காங்கிரசு எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் மாநில கல்வியை ஏகபோகமாக்கிக் கொண்டது; சட்டவிதிக்கு மாறாக, அதில் 40 சதவிகித நிறுவனங்கள் 3, 4 அறைகளே கொண்ட வாடகை நிறுவனங்களில் இயங்கி வந்தது; போலிச் சான்றிதழ்களை ஏராளமாக அச்சடித்து பல லட்ச ரூபாய்களுக்கு விற்றது; மத்திய உளவுதுறை (சி.பி.ஐ.) இதை கையும் களவுமாக பிடித்து அமுக்கி வைத்துக் கொண்டது என்பதை பத்திரிகைகள் அம்பலப்படுத்தியது;

● கங்கை ஆற்றை சொந்தம் கொண்டாடும், மூன்று 'பாணிதாரி' மாஃபியாக்களில் ஒருவன் பாச்சாபாபு. இவன் தனக்கு போட்டியாக, கிழக்கு பிராந்திய ரயில்வே நிர்வாகம், நாராயண் பூரிலிருந்து மணிஹரிகாட்க்கு விட்டுக் கொண்டிருந்த படகு போக்குவரத்தையே தனது அரசியல் செல்வாக்கால் 85-ல் நிறுத்தியவன். இவனுக்கும் முன்னாள் பீகார் மாநில காங்கிரசு தலைவர் தாரிக் அன்வர் என்பவனுக்கும் இருந்த கூட்டு, கைமாறிய பணம் ஆகியவற்றை அம்பலப்படுத்தியது.

● பீகார் மாநிலம் '67 ஆம் ஆண்டு கொண்டுவந்த நில உச்சவரம்பு சட்டத்தை விட தனது பெயரிலே 20 மடங்கு அதிகமாக நிலங்களை வைத்திருக்கும் தினேஷ்குமார் சிங், சலாஹூதின் ஆகிய காங்கிரசு எம்.எல்.ஏ.க்களை அம்பலப்படுத்தியது.

● காங்கிரசின் ஐந்தாம் படையாக இருக்கும் ஜனதாதள தலைவர் சந்திரசேகருக்கும் மற்றும் காங்கிரசு பெரும் புள்ளிகளுக்கும் வலதுகரமாக இருக்கும் தன்பாத் நிலக்கரி சுரங்க மாஃபியா தலைவர் சூரியதேவ் சிங்கை காங்கிரசு அரசாங்கம் குளிப்பாட்டியது; குறிப்பாக, காங்கிரசின் நேரடி கையாளான தன்பாத் போலீசு 'சூப்பிரண்டண்ட்' ஜெகதீஷ் ராஜ், சூரியதேவுக்கு காட்டிய ராஜ மரியாதை, கொலை வழக்கில் சிக்குண்ட அவன், நீதிமன்ற காவலில் இருக்கும்போது, பாடலிபுத்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளியாக சேர்த்து ஐந்து நட்சத்திர உபசரிப்பு செய்தது. சட்டத்துக்கு புறம்பாக அவனுடைய கிரிமினல் கூட்டாளிகள் அவனை பார்க்க அனுமதி கொடுத்தது. அவன் உடம்புக்கு ஒன்றுமில்லை என்று மருத்துவ சான்றிதழ் வந்தபிறகும், நோயாளி என்று அவனை கோர்ட்டுக்கு அழைத்துவர மறுத்தது, அவனைப் போன்ற பல மாஃபியாக்களுக்கு எதிராக அரசு தரப்பில் வழக்காடிய சிறப்பு வழக்குறைஞர்களுக்கு நீதிமன்றம் உத்திரவு பிறப்பித்தும் போலீசு பாதுகாப்பு வழங்க மறுத்தது. மாஃபியாக்களின் சட்டவிரோதமான நில ஆக்கிரமிப்புகளை கையகப்படுத்துமாறு 'கோர்ட்' உத்திரவு பிறப்பித்தும், போலீசு கும்பல் சட்டை செய்யாமல் விட்டது.



பீகார் காங்கிரசு கிரிமினல் முதல்வர் எஸ்.என்.சின்ஹாவை ''கெரோ'' செய்யும் பத்திரிக்கையாளர்கள்.

● தன்பாத்தில் கடந்த ஜூலை மாதம் 6-ம் தேதி ஆதிவாசி இளம் பெண்ணை அவர் குடிசையில் வைத்து கூட்டாக கற்பழிக்க முயற்சித்தன, போலீசு நாய்கள்! முடியாமல் போகவே அவரை நடுவீதியில் வைத்து நிர்வாணமாக்கி மயங்கி விழும்வரை வக்கிரமாக அடித்து சாய்த்துவிட்டு திரும்பியது போலீசு. செய்தியறிந்தும் தொடைநடுங்கிய பத்திரிக்கைகள் மௌனம் சாதித்தபோது, கொதித்தெழுந்தார் 84 வயது 'ஆவாஸ்' பத்திரிகை ஆசிரியர். ''போலீசு நாய்களுக்கு இதற்குதான் லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்களா?'' என்று ஆவேசமாக அச்சம்பவத்தை அம்பலப்படுத்தினார். நேரம் பார்த்துக் கொண்டிருந்த போலீசு ஜூலை 13-ம் தேதி கைது செய்து சிறையில் அடைத்ததை வெளிப்படுத்தியது.

போலீசுக்காரர்கள், காங்கிரசுக்காரன்கள், ரகசிய உலக கிரிமினல்கள் இவர்கள் கையில்தான் பீகார் மாநிலம் பந்தாடப்படுகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும், உறவு முறையிலும், தொழில் முறையிலும் இவர்கள் கைகோர்த்துக் கொண்டு பீகார் மாநிலத்தை சூறையாடுகிறார்கள். சட்டப்படியும் சட்டவிரோதமாகவும் நீதிமன்றம் இவர்களுக்கு பக்கபலமாக நிற்கிறது. இதை தட்டிக் கேட்கும் எவர் ஒருவரும் அதன் மிருகப்பிடியிலிருந்து தப்ப முடியாது! ''பத்திரிகையாளர்கள் மட்டும் என்ன கொம்பு முளைத்தவர்களா? விறகொடித்து பிழைக்கும் ஆதிவாசி பெண்ணும், பேனா பிடித்து பிழைக்கும் பத்திரிகையாளர்களும் எங்களைப் பொறுத்தவரை அன்றாடம் காய்ச்சிகள்தான்; எங்களது அடிமைகள்தான்'' என்று எக்காளமிடுகிறது கதர் குல்லாய், காக்கிச்சட்டை, கறுப்பு அங்கி கூட்டம்.

உழைக்கம் மக்களை பொறுத்தவரை (பத்திரிகையாளர்களை அல்ல) இதை சரியாக உணர்ந்துள்ளனர். எனவேதான், பத்திரிகையாளர்களின் 48 மணிநேர 'பந்த்' அறைகூவலை ஆணையாக ஏற்று செயல்பட்டார்கள்! ஆகஸ்ட் 4, 5 தேதிகளில், தன்பாத் ''மொத்தமாக ஸ்தம்பித்தது'' ''மக்கள் தன்னெழுச்சியாக பொறுப்போடு 'பந்தை' முழுவெற்றி பெற வைத்தனர்'' என்று காங்கிரசு அடிவருடி பத்திரிகைகளே மூக்கின் மேல் விரல் வைத்தன. அன்றைய தினமும் மக்கள் தங்கள் ரத்தத்தை சிந்திதான் முழு அடைப்புப் போராட்டத்தை வெற்றிபெற வைத்தனர். அன்று சாதாரணமாக தெருவில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைக் கூட போலீசு ''மிருகத்தனமாக'' தாக்கியது. போலீசு ''லைன்'' முன் விளையாடிக் கொண்டிருந்த மூன்று குழந்தைகள் இன்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றன. சக உழைப்பாளிகளுக்கு நேசக்கரம் நீட்டி உழைக்கும் மக்கள் தங்கள் வர்க்கப் போர் குணத்தை நிரூபித்து விட்டார்கள். ஆனால் நடுத்தெருவில் அவர்கள் போலீசு கும்பலால் நிர்வாணப் படுத்தப்பட்ட போது மௌனம் சாதித்த பத்திரிகைகள்; நீதிமன்றங்களாலும், ஓட்டுப் பொறுக்கிகளாலும் அவர்கள் திரும்ப திரும்ப மோசடிக்கு ஆளான போது, ஒதுங்கி நின்ற பத்திரிகைகள்; வெற்று வாக்குறுதிகள், மோசடிகளை தொகுத்து சொல்வதோ, தோலுரிப்பதோ அதற்கெதிராக குரல் கொடுப்பதோ தங்கள் வேலையல்ல, செய்தியை வாந்தியெடுப்பது மட்டுமே தங்கள் பணி என்று நழுவிச் சென்ற பத்திரிகைகள்; - குறிப்பாக உழைக்கும் பத்திரிகையாளர்கள் இனிமேலாவது உணர வேண்டும்! மக்கள், மக்கள் மட்டுமே அவர்களின் உரிமைக்கு குரல் கொடுப்பவர்கள், தோளோடு தோள் நிற்பவர்கள்.

குணசேகரன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர்: எம்.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094.

படிப்பகம்

R.N. 42040/83 Regd.No.TN/MS(3) 544


www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

இதோ இவர்கள் மரபுச் செல்வம் நமக்களித்த ஒப்பற்ற கிராமிய ஓவியக் கலையின் பிரதிநிதிகள்! 1600 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்திய ''படச்சித்திர'' மரபுக்கலைச் செல்வத்தை இன்னமும் பேணிப்பாதுகாத்து வரும் ஓவியக்கலை வல்லுநர், சியாம்சுந்தர்! அவர் அருகில் அமர்ந்திருக்கும் அவரது துணைவியார் ராணி சித்திரக்கார் இவரைப் போலவே ஈடுஇணையற்ற சித்திரக் கலைஞர். இவர்களைப் போல இன்னும் சில பத்து குடும்பங்களே இக்கலையின் பிரதிநிதிகளாக எஞ்சியுள்ளனர். மே. வங்கம் ஹௌரா தொழில் நகரத்திலிருந்து பல பத்துமைல் தள்ளிஉள்ள குக்கிராமங் களில் இவர்கள் வசிக்கின்றனர்.

''ஓவியங்கள் தீட்ட, மலிவு விலையிலான ஒரு சில மீட்டர் பருத்தி துணிகளைக்கூட இப்போது எங்களால் வாங்க முடியவில்லை. ஆதரிப்பார் யாரும் இல்லை'' என்று வேதனையோடு கூறுகிறார்கள். ஓவியங்களை தீட்டுவதற்கான வண்ணக் கலவைகளைக் கூட இவர்கள் வெளியில் வாங்குவது இல்லை. பாரம்பரியமான முறையில் அரிய தாவரங்களின் இலை, பூக்களிலிருந்து அதை தயாரித்துக் கொள்கிறார்கள். தங்கள் குடிசைகளை சுற்றி அத்தாவரங்களை கண்ணும் கருத்துமாக வளர்க்கிறார்கள். ஒரு சில கொட்டாங்குச்சிகள், தேவைக்கும் குறைவான சில தூரிகைகள், சாணம் பூசி அதிகபட்சம் மேடு பள்ளங்கள் இல்லாத மண் தரை, துணிகளுக்கு பதில் நீளமான வெள்ளைக் காகிதங்கள். இந்த எளிய உபகரணங்களைக் கொண்டுதான் மங்காத அரிய நம் மரபு செல்வத்தை அவர்கள் உருவாக்கிறார்கள்.






இதோ, இவர் கறுப்புப் பண முதலாளிகளின் அந்தப் புரங்களுக்கு அழகூட்டும் ஆஸ்தான ஓவியர், ஷுசேன். வீதி நாடகக் கலைஞர் சப்தர் ஹாஷ்மி மிருகத்தனமாக படுகொலை செய்யப்பட்டதை ஓவியமாக வரைந்து விற்று காசாக்கிய வக்கிர ஓவியர். தனது மூச்சைக்கூட தனது சார்பாக விடுவதற்கு ஆட்கள் கிடைத்தால் கூலிக்கு அமர்த்திக்கொள்ள தயாராய் இருக்கும் வக்கிர சோம்பேறிகளின் ரசனைக்கு தீனிபோடும் செல்லப்பிள்ளை! இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன வண்ணக் கலவைகள், தூரிகைகள் இருந்தால்தான் இவர் கை, ஓவியம் வரையும். யாராவது பல லட்சங்கள் கொடுப்பதற்கு தயாராய் இருந்தால்தான் இவருக்கு ''தத்ரூபமாக'' ஓவியங்கள் வரைய வரும்! இப்போது சீன மாணவர்கள் படுகொலையையும் ''யதார்த்தமாக'' சித்தரித்து விற்பனைக்கு மாட்டிவிட்டார்!

பாசிஸ்ட்டுகள் மக்களின் ரத்தத்தை துப்பாக்கி முனையில் ருசி பார்த்தால் அதை இந்த 'சாடிஸ்ட்டு' தன் தூரிகை முனையிலேயே சாதிப்பதற்கு புகழாரம், பெரும்பணம்!

கொலைப் பட்டினி கிடந்தும் தங்கள் தாய்த்திருநாட்டின் மரபுச் செல்வத்தை,கிராமிய கலையை பாதுகாக்கும் கலைஞர்கள் புறக்கணிப்பு; அவர்களுக்கு ஆதரவு மறுப்பு! இந்த அவமானத்தை இன்னும் எத்தனை நாள்தான் சகித்துக்கொண்டிருப்பது?

படிப்பகம்